# பிள்ளையார் வழிபாடு



பிள்ளையாரைப் பற்றிய
முழுமையான விபரங்கள்

# விநாயகர் அகவல்

# விநாயகர் கவசம்

# போற்றித் திருவகவல்

# பிள்ளையார் கதை

# நான்மணி மாலை

யாவும் முழுமையாக
உள்ளே

விலை ரூ. 125.00

உ

# பிள்ளையார் வழிபாடு

ஈசுவர, ஆவணிச் சதுர்த்தி நாள் வெளியீடு

கொழும்பு, கொட்டாஞ்சேனை,
அருள்மிகு வரதராஜ விநாயகர் கோயில்
வெளியீடு

விற்பனை உரிமை:

காந்தளகம்

41, அஞ்சலக வீதி,
சாவகச்சேரி.

834 அண்ணா சாலை,
சென்னை 600 002.

உரிமை பதிவு

முதற்பதிப்பு: 31-8-1992
இரண்டாம் பதிப்பு: 21.8.1993
மூன்றாம் பதிப்பு: கார்த்திகை 1994
நான்காம் பதிப்பு: ஆவணி 1997

தயாரிப்பு: தெ.ஈஸ்வரன் பி.காம்.,
ஓவியர்: பூவரசு
தயாரிப்பில் உதவி: புலவர் வெற்றியழகன்

விலை: இந்திய ரூபாய் [redacted]

There is an article in English language
on the worship of Lord Ganesha
for those who are
not well versed in Tamil language.
(pp. 148-157)

ஒளி அச்சுக்கோப்பு, அச்சிடல்:
காந்தளகம், 4 முதல்மாடி, ரகிசா கட்டடம்,
834 அண்ணாசாலை, சென்னை 600 002.
தொலைபேசி: 853 4505.

பிள்ளையாரைப் பற்றிய
முழுமையான விபரங்கள்

# விநாயகர் அகவல்

# விநாயகர் கவசம்

# போற்றித்

# திருவகவல்

# பிள்ளையார் கதை

# நான்மணி மாலை

யாவும் முழுமையாக
உள்ளே

**கணபதியின் பல்வேறு தோற்றங்களின் படங்கள்**

## உள்ளே....


| | |
|---|---|
| ஓங்கார ஒலி | 1 |
| பிள்ளையார் சுழி | 5 |
| பிள்ளையார் திருவுருவம் | 8 |
| பிள்ளையார் தோன்றினார் | 13 |
| நாம் காணும் பிள்ளையார் | 15 |
| பிள்ளையார் ஆயுதங்கள் | 48 |
| சிறந்த தலங்கள் | 55 |
| சிறப்பு வழிபாட்டு நாள்கள் | 58 |
| தேவாரம் | 59 |
| மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை | 60 |
| மூத்த பிள்ளையார் திருமும்மணிக்கோவை | 63 |
| விநாயகர் திருவிரட்டை மணிமாலை | 68 |
| விநாயகர் அகவல் - ஔவையார் | 71 |
| விநாயகர் அகவல் - நக்கீரர் | 74 |
| கணேச புஜங்கள் | 79 |
| விநாயகர் கவசம் | 81 |
| திருப்புகழும் விநாயகரும் | 84 |
| திருஅருட்பாவும் விநாயகரும் | 87 |
| போற்றித் திருவகவல் | 90 |
| வருக்கைக் கோவை | 92 |
| விநாயகர் நான்மணிமாலை | 94 |
| கணபதி போற்றி | 107 |
| காத்தருள்வாய் கணநாதா | 111 |
| கால்பிடித் தேனையா கணபதியே | 112 |
| கணமதிலே வினைவிலகும் | 113 |
| ஆண்டருள்வாய் நாயகனே | 114 |
| வாழவைக்கும் தெய்வம்.. | 115 |
| பிள்ளையார் கதை - வரத பண்டிதர் | 116 |
| நல்வழி, மூதுரை, திருமந்திரம்... | 140 |
| விநாயகர் ஆலய அமைப்பு | 141 |
| கணபதி பத்திர மண்டலம் | 142 |
| விநாயகர் யந்திரங்கள் | 143 |
| Ganesha (an article in English) | 148 |

# 1. ஓங்கார ஒலி

அ என்பது முதல் ஒலி; வாயைத் திறந்தவுடன் எழும் ஒலி; ஒலிகட்கெல்லாம் தாயாகவும் தந்தை யாகவும் உள்ள ஒலி; அடிப்படையான ஒலி.

உ என்பது அடுத்த ஒலி; இஃது உயிர் ஒலி. எல்லா மொழிகளிலும் உள்ள உயிர் ஒலி. அகர ஒலியும் உகர ஒலியும் இணையும் பொழுது ஓகார ஒலி பிறக்கிறது. **அ + உ = ஓ.** ஓகாரமும் **ம்** ஒலியும் சேர்ந்தே ஓங்கார ஒலி. ஓங்கார ஒலி உயர்த்து வதைக் குறிக்கும். ஓ... எனத் தொடர்ச்சியாகச் சொல்லிப் பாருங்கள். சிந்தனையில் தெளிவு ஏற் படும்; உள்ளத்தில் அமைதி ஏற்படும்.

ஓங்காரத்தை உச்சரித்தால் உச்சரித்தவர் உயர் வுறுவார், உயர்ந்த கதியை அடைவார்.

ஓங்கார ஒலி உயிர்க் குற்றங்களை அகற்றுகிறது. இறைவனடியில் ஆன்மாவைச் சேர்ப்பிக்கின்றது.

ஓங்காரம் இறைவனை உணர்த்தும் ஒலி. ஓம் என்ற சொல் இறைவனை உணர்த்தும் சொல்.

ஓம் என்ற சொல்லைத் தியானித்தால் பேரின்ப நிலை எய்தலாம்.

ஓம் என்ற சொல்லில் அகர ஒலி உண்டு. உகர ஒலி உண்டு. மகர ஒலி உண்டு.

ஓம் என்பது பிரணவம். இந்தப் பிரணவமே வேதத்தின் மூலம்.

ஓம் என்ற ஒலியின் வடிவமே பிள்ளையார். ஓங்கார வடிவானவர் பிள்ளையார்.

பிள்ளையார் குற்றங்களை நீக்குபவர். துன்பங்களை நீக்குபவர். இடையூறுகளைப் போக்குபவர்.

பிள்ளையார் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவர். தனக்கு மேல் தலைவன் இல்லாதவர். வடமொழியில் இவரின் பெயர் விநாயகன். வி + நாயகன் என்றால் வேறு தலைவர் இல்லாதவர் என்பது பொருள்.

நமது வாழ்க்கை மனித வாழ்க்கை. உயிரானது ஒருபுறம் இறைவனது தொடர்பை நாடுகிறது. இறைவனது திருவடிகளை அடைந்து பேரின்பப் பெருவாழ்வை அடைய முயல்கிறது.

மறுபுறத்தில் உயிரினை ஈர்த்து, உலகாயத வாழ்வில் ஈடுபடுத்துகின்றன மலங்கள். இதனால் துன்பங்கள் ஏற்படுகின்றன. குற்றங்கள் வருகின்றன. வினைக்கு உரியதாகின்றது உயிர்.

ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று மலங்களும் அறிவை மயக்குகின்றன. புத்தியைக் கலக்குகின்றன. புலன் ஐந்தின் வழி அறிவை மயங்க வைக்கின்றன.

இந்த மயக்கத்தில் இருந்து விடுபடவேண்டும். இந்த மாயை நம்மை விட்டு அகலவேண்டும். அறிவு தெளிவாக இருக்கவேண்டும். சிந்தனை இறைவன் தனக்கு ஆகவேண்டும் இறைவனால் நாம் ஆட்கொள்ளப்பட வேண்டும்.

பிள்ளையார் மலங்களின் பிடியில் இருந்து விடுவிப்பவர். வாழ்க்கையில் புலன்கள் வழி வரும் துன்பங்களில் இருந்து விடுவிப்பவர்.

பிள்ளையாரை வழிபட்டால் துன்பம் நீங்கும். ஓங்கார ஒலியடன் இணைந்தவர் பிள்ளையார். ஓங்கார வடிவானவர் பிள்ளையார்.

துன்பங்கள், துயரங்கள், இடையூறுகள், வல் வினைகள், அச்சங்கள், அபாயங்கள், ஆபத்துக்கள் வரும்பொழுதே நாம் பிள்ளையாரையே நினைக் கின்றோம்.

ஓங்கார வடிவானவனையே நினைக்கின்றோம். விக்கினம் தீர்க்கும் விநாயகனை வேண்டுகிறோம். வேதத்தின் முழுப் பொருளை உள்ளத்தில் இருத்து கிறோம். ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவனை வழுத்துகிறோம்.

துன்பங்கள் வந்த பின்பு வழிபடுவதை விடத் துன்பங்கள் வருமுன்பும் வழிபடுகிறோம். வருமுன் காப்பவர் பிள்ளையார்.

இதனால் எந்தச் செயலில் ஈடுபடு முன்பும் பிள்ளையாரை் வணங்குகின்றோம். செய்யப்போகும் செயல் அறிவுத் தெளிவுடனும், சிந்தனைக் கூர்மை யுடனும், மலங்களாலும், அதன் வழி புலன்களாலும் மயக்கப்படாமலும் இருக்கப் பிள்ளையாரை வேண்டுகிறோம்.

நமது புலன்வழி நமக்குப் புதிய துன்பங்கள் வரக்கூடாது. நமது முன்வினைவழி, நமக்குத் துன்பங்கள் ஏற்படக்கூடாது.

நமது வினைகள் நல்வினைகளாக வேண்டும். நாம் செய்யும் செயல்கள் நற்செயல்களாக வேண்டும்.

தீவினைகள் நம்மை அணுகாதிருக்கப் பிள்ளை யார் நமக்கு அருள் புரிகிறார். நம்மால் நமக்குத் துன்பம் ஏற்படக்கூடாது. பிறரால் நமக்குத் துன்பம் ஏற்படக்கூடாது. ஊழ் வலிவுபெற அதன் வழி நமக் குத் துன்பங்கள் வரக்கூடாது.

இம்மூன்று வழிகளிலும் துன்பங்கள் வ்ராமல் காப்பவர் பிள்ளையார். ஓங்கார ஒலியின் உண்மை யான வடிவமான பிள்ளையார் உயிர் உயர்வுற உதவுகிறார்.

ஓம் என்ற சொல்லை உச்சரித்துத் தியானிக்க வேண்டும். பிரணவ மந்திரம் எனப்படுவது ஓம் எனும் சொல்லே. பிரணவப் பொருள் எனப் பிள்ளையாரை அழைக்கிறோம்.

ஓம் என எப்பொழுதும் ஒலித்து வழிபட வேண்டும். துன்பங்கள் போகும். துயரங்கள் நீங்கும். பேரின்பப் பெருவாழ்வு கிட்டும்.



## 2. பிள்ளையார் சுழி

தொடர்புக்கு ஒலி எத்துணை முக்கியமோ, வரிவடிவங்களும் அத்துணை முக்கியமே.

புள்ளிகள் சேர்ந்துதான் கோடுகள் அமைகின்றன. இரண்டு மூன்று புள்ளிகளை நெருக்கமாக அமைந்து விட்டால் கோடு ஆகிவிடும்.

புள்ளி, அதன் கூட்டமான கோடு, அந்தக் கோட்டின் வளைவு, நெளிவு, நீட்டம் இவைதான் எழுத்துகள்.

ஒலி எப்படிப் பேச்சாகிறதோ அதைப் போல் புள்ளி அதற்கு வடிவம் கொடுக்கிறது.

ஒலிகளில் அகரமும் உகரமும் சேர்ந்து ஓங்கார மாகி, உயர்வுதரும் ஒலியாவதைப் போல், புள்ளியும் கோடும் சேர்ந்த வரிவடிவமே எழுத்துகளின் அடிப் படையாகின்றது.

இதனாலன்றோ எழுதத் தொடங்கு முன்பு எவ ரும் புள்ளி இட்டு, கோடு போட்டு, எழுத்துகளின் அடிப்படைகள் சரியாக எழுதப்படுகின்றனவா எனப் பார்க்கின்றனர்.

ஏட்டையும் எழுத்தாணியையும் எடுத்துக் கொண்டாலோ, எழுதுகோலான பேனாவையும் எழுதுவதற்குரிய தாளையும் எடுத்துக் கொண்டாலோ ஒரு புள்ளி, ஒரு கோடு இரண்டையும் போட்டு, எழுதுகோல் ஏற்றதா, ஏடு நல்லதா, தாள் உரியது தானா என உறுதி செய்கின்றனர்.

புள்ளியை முதலில் இட்டு, அதனுடன் சேர்த்துக் கோடு நீட்டாமல் எழுதத் தொடங்குபவர்கள் மிகக் குறைவு.

இதுவே பிள்ளையார் சுழி. தொடக்க வரி வடிவம். எழுத்துகட்கு முதலான, அடிப்படையான வரிவடிவம். பிள்ளையாருக்கு உரிய வரி வடிவம். பிள்ளையார் வடிவான வரிவடிவம்.

எனவேதான், எழுதத் தொடங்கும் பொழுது பிள்ளையார் சுழி போட்டுத் தொடங்கவேண்டும் எனக் கூறுகிறார்கள். புள்ளியும் கோடும் செம்மையாக எழுதப்பட்டால்தானே, எழுதத் தெரிந்தால்தானே எல்லா எழுத்துகளையும் முறையாக எழுதலாம்.

பிந்து புள்ளி வடிவம். இது சக்தி, நாதம் கோடு வடிவம். இது சிவம். சக்தியும் சிவமும் இணைந்த வடிவமே பிள்ளையார் சுழி.

நாத பிந்துகளை ஒலிப்பது எவ்வாறு? முடியாது. எனவே, இஃது ஊமை எழுத்து. இது மௌனக் குறி.

உயிர் புள்ளி. கோடு இறைவன். உயிரும் இறையும் கலந்தால் பேரின்பம். புள்ளியும் கோடும் இணைந்த பிள்ளையார் சுழி பேரின்பப் பெரு வாழ்வின் அடையாளச் சின்னம்.

அகர உகர ஒலிகள் ஓங்காரமாகி வழிபாட்டுக்கு உரியதாகின்றன. உயிர்களை உயர்நிலைக்கு உயர்த்துகின்றன.

புள்ளியும் கோடும் பிள்ளையார் சுழியாகி வழிபாட்டிற்குரிய வரிவடிவங்களாகின்றன. நல்வழிப் படுத்தும் சின்னமாகின்றன.

அகரம் உயிர்; உகரம் இறைவன்; உயிர் இறைவனுடன் இரண்டறக் கலந்து, இறைவனாகவே புலப்படும். புள்ளியானது கோட்டுடன் இணைந்து, உகரமாகி நிற்கும்; பிள்ளையார் சுழியாக அமையும்;

இந்த நிலை அத்துவிதமாய் நிற்கும் சுத்தாத்துவித சித்தாந்த முத்தி நிலை. பிள்ளையார் சுழியின் சித் தாந்த நெறி இதுவே.

வினை நீக்கும் விநாயகன், வருமுன் காப்பவன், அவனே எழுத்துகட்கெல்லாம் தொடக்கமாக அமைகிறான்.

ஒரு செயலுக்குப் பிள்ளையார் சுழி போட் டாயிற்றா என்றால் தொடங்கியாயிற்றா என்பதே வினா.

பிள்ளையாரை வழிபட்டே செயலைத் தொடங்க வேண்டும். பிள்ளையார் துன்பங்களையும் இடை யூறுகளையும் நீக்குபவர். பிள்ளையார் சுழி போட்டு எழுதத் தொடங்கும் எழுத்துகள் நல்லனவாக அமையும். நிறைவானதாக அமையும். உயிர் உயர்ச் சிக்கானதாய் அமையும். இறைவனடி சார்வதாய் அமையும்.

## 3. பிள்ளையார் திருவுருவம்

இறைவனுக்கு உருவம் இல்லை. இறைவனோ எல்லா உருவங்களிலும் உள்ளார்.

உருவமற்றவர் இறைவன். உருவமுள்ளவரும் இறைவனே. பார்க்கும் இடம் எங்கும் நீக்கம் அற நிறைந்திருப்பவர் இறைவன்.

ஒலிகளில் ஓங்காரமாகி உள்ளவர் பிள்ளையார். வரிவடிவங்களில் பிள்ளையார் சுழியாக உள்ளவர். பிரணவமாயும் பிரணவப் பொருளாகவும் உள்ளவர். வேதங்களின் முதலாக உள்ளவர், வேதங்களாகவும் உள்ளவர் பிள்ளையார்.

தன்னை நினைப்பவர், தன்னை வழிபடுபவர், தன்னைத் தியானிப்பவர், இவர்களின் உள்ளத்தில் பிள்ளையார் எப்படித் தோன்றுகிறார்? தத்துவார்த்த மூர்த்தியாகத் தோன்றுகிறார். பொருள் பொதிந்த உருவமாகத் தோன்றுகிறார்.

விலங்கு வடிவமாகத் தோன்றுகிறார்.
மனித வடிவமாகத் தோன்றுகிறார்.
பூத வடிவமாகத் தோன்றுகிறார்.
தேவர்கள் வடிவமாகத் தோன்றுகிறார்.

விலங்காய், மனிதராய்ப், பூதமாய்த், தேவராய் இந்நான்கு படைப்புகளின் இணைந்த உருவமாய்ப் பிள்ளையார் தோன்றுகிறார்.

யானைத் தலையும், சுளகுச் செவியும், தும்பிக் கையும் யானையாகிய விலங்கிடம் இருந்து பெற்றார்.

புருவ வடிவத்தையும் கண்களையும் மனிதரிடம் இருந்து பெற்றார்.

பேழை வயிற்றையும் குறுகிய கால்களையும் பூத கணத்தில் இருந்து பெற்றார்.

நான்கு கைகளையும் தேவர்களிடம் இருந்து பெற்றார்.

''ஐந்து கரத்தனை, யானை முகத்தனை, இந்து இளம் பிறை போலும் எயிற்றனை,'' எனத் திரு மூலர் பிள்ளையாரின் வடிவத்தைத் திருமந்திரத்தில் எடுத்துக் கூறி உள்ளார்.

**திருவடிகள்**

இறைவனின் திருவடிகளை அடைந்து பேரின் பப் பெருவாழ்வு பெறுவதே உயிர்களின் நோக்கம். பிள்ளையாரின் திருவடிகள் உயிர்கட்கு அபயம் கொடுக்கும் திருவடிகள்.

உண்மையான அறிவு எதுவோ அதுவே ஞானம். உயிர்கள் பாசங்களால் கட்டப்பெற்றுத் துன்பப் படாமல், இறைவன்பால் உயிர்களை வழிப்படுத்து வதே ஞானம்.

ஊழ்வழி வினைகள் அறவேண்டும். வரு வினையும் செய்வினையும் நீங்கவேண்டும். ஞானம் பொருந்தினால் வினைகள் தாமாக நீங்கும். துன்பம் போகும். இன்பம் பெருகும்.

பிள்ளையாரின் திருவடிகள் ஞானமாக உள்ளன. உயிர்களின் துன்பத்தைப் போக்குகின்றன. இன்பம் பெருக்குகின்றன.

**வயிறு**

பிள்ளையாரின் வயிறு பெரு வயிறு, பேழை வயிறு. அந்த வயிற்றினுள் யாவுமே அடக்கமாகி

உள. பரவெளியாக உள்ள அனைத்தும் அடங்கி உள. அண்டங்கள் யாவும் அடங்கி உள. அனைத்து உலகமும் அடங்கி உள. அனைத்து உயிர்களும் அடங்கி உள.

பிள்ளையாரின் திருவுருவம் அனைத்தையும் அடக்கிய திருவுருவம். பிள்ளையார் எங்கும் எதிலும் உள்ளார். அங்கு இங்கு எனாதபடி எங்கும் பரந்து வியாபித்து நிற்கிறார். இந்தத் தத்துவத்தையே பேழை வயிறு குறிக்கும்.

**ஐந்து கைகள்**

பிள்ளையாருக்கு நான்கு கைகளுடன் தும்பிக் கையும் சேர்த்தால் ஐந்து கைகள். தொடர்ச்சியாக, இடையீடு இன்றி நடைபெறும் ஐந்து தொழில்களையே ஐந்து கைகளும் குறிக்கின்றன.

ஐந்து கைகளுள் ஒரு கையில் பாசம் உள்ளது.
ஒரு கையில் அங்குசம் உள்ளது.
ஒரு கை அஞ்சேல் என அபயம் காட்டி நிற்கிறது.
ஒரு கையில் மோதகம் உள்ளது.
மற்றது தும்பிக் கையாகும்.

பற்றுள்ளதைப் பிறப்பிப்பதும் பாசம். பிணித்து நிற்பதும் பாசம். படைத்தலைக் குறிப்பது பாசத்தைத் தாங்கிய கை. ஐந்தொழில்களுள் முதலாவது படைத்தல் தொழில்.

பிறவி எடுத்தாலே வினை சூழ்ந்து கொள்கிறது. துன்பங்களும் இன்பங்களும் மாறி மாறி வருகின்றன. இன்ப துன்பங்களில் இருந்து விடுபட்டு ஓடி, பிறவியில் இருந்து விடுபட வரும் உயிர்கட்கு அஞ்சேல் எனப் பாதுகாப்பு அளிக்கும் கை அபயக் கை. காத்தல் தொழில் ஐந்தொழில்களுள் இரண்டாவது.

அங்குசம் அழித்தலைக் குறிக்கும். பிள்ளையாரின் ஒரு கையில் அங்குசம் உண்டு. ஐந்தொழில்களுள் மூன்றாவதாகிய அழித்தல் தொழிலை அங்குசம் தாங்கிய கை செய்கிறது.

அஞ்சேல் எனப் பாதுகாப்பு அளித்த, அபயம் பெற்ற உயிர்கட்கு அருளலைச் செய்வது மோதகம் ஏந்திய கையாகும். இந்தக் கை கீழ் நோக்கி இருப் பதன் காரணம், பிறவிக்கு அஞ்சி வரும் உயிர்கள், அடையுமிடம் திருவடியாகிய முத்திப் பேறு என் பதை உணர்த்தவேயாம். ஐந்தொழில்களுள் நான் காவது அருளல் தொழில்.

ஐந்தொழில்களுள் ஐந்தாவது மறைத்தல் தொழில். திரோதானமாகிய இந்தத் தொழிலைச் செய்வது தும்பிக்கையே.

பிள்ளையாரின் முகத்தில் இரு கொம்புகள் உள. இடது பக்கத்தில் உள்ள கொம்பு முழுமை யான அழகான கொம்பு.

வலது பக்கத்தில் உள்ள கொம்பு ஒடிந்த கொம்பு. வலது பக்கத்தில் முழுமையான நீட்டுக் கொம்பு இருந்தது. பிள்ளையார் பாரதக் கதையை எழுதிய வர். வியாச பகவான் சொல்ல எழுதியவர். அப் பொழுது, வலது கொம்பை உடைத்து எழுத்தாணி யாகப் பயன்படுத்தி எழுதினார். இதனால் வலது கொம்பு உடைந்த கொம்பாகவே உள்ளது.

இடது கொம்பு பதிஞானத்திற்கு உரியது. ஒடிந்த வலது கொம்பு பாசஞானத்திற்கு உரியது.

சுளகு போன்ற இரு செவிகள் பிள்ளையாருக்கு உண்டு. அகன்று விரிந்த இச்செவிகள் யானையின் செவிகளைப் போன்றவை.

உயிர்கள் மலங்களின் பிணிப்பால் துன்பப் படாமல் இச்செவிகள் காக்கின்றன. வினைகளி னால் வரும் துன்பங்களில் இருந்து போக்கி அருள் கின்றன.

பிள்ளையாருக்கு மூன்று கண்கள் உள. வழமை யான இரு கண்களுடன் நெற்றிக் கண்ணும் சேர்ந்து மூன்று கண்களாக உள.

பிறைச் சந்திரனைத் தனது முடியில் பிள்ளையார் அணிந்துள்ளார். குற்றங்கள் தேய்ந்து உடல் சிறுத்து, வட்டமான சந்திரன் பிறைவடிவம் கொண்டது.

அறியாமை என்னும் இருள் தேய, ஞானம் பெற்ற உயிர்களை உயர்ச்சி அடையச் செய்து தலைமேல் வைப்பர் பிள்ளையார் என்பதையே முடியில் உள்ள பிறை எடுத்துக்காட்டுகிறது.

பிள்ளையார் பாம்பை ஆபரணமாக அணிந்துள்ளார். பாம்பு குண்டலினி சக்தியின் வடிவம். மூலாதாரத்தில் உள்ள குண்டலினி சக்தி பாம்பு படம் விரிந்தது போல் எழுந்து பரந்து நின்று, உயிர்களைச் சிவ மயமாக்குகின்றது.

இப்படியாக, பிள்ளையார் அடியவர்களுக்கு அருள்புரிவதற்காக எடுத்த திருமேனியின் திருவுருவத்தில் சிவதத்துவங்கள் அடங்கி உள்ளன.

நாம் பிள்ளையாரின் திருவுருவத்தை நினைத்து, வழிபட்டு, தியானிக்கும் பொழுது நமக்கு ஈடேற்றம் உண்டு. ஆன்ம ஈடேற்றம் உண்டு. உயிர் உயர்ச்சி உண்டு.

ஓங்கார ஒலியானவன்

பிள்ளையார் சுழி வரி வடிவானவன்

விலங்கு, மனிதர், பூதர், தேவர் இவர்கள் இணைந்த திருவுருவத்தைக் கொண்டவர்.

அவரே பிள்ளையார்.

## 4. பிள்ளையார் தோன்றினார்

பிள்ளை என்றாலே மகன்தான். பிள்ளையார் என்றால் தலைசிறந்த மகன். பிள்ளைகட்கெல்லாம் பிள்ளை. மூத்த மகன் எனப் பொருள்படும்.

பிள்ளையார் யாருக்கு மகன்? சிவபெருமானுக்கும் உமாதேவியாருக்கும் பிள்ளையார் மகனாவார். மூத்த மகனாவார்.

சிவபெருமான் முழு முதற் கடவுள். ஆதியும் அந்தமும் இல்லாத அருட்பெரும் சோதி.

சிவபெருமானே ஐந்தொழில்களுக்கும் மூல காரணன்.

சிவனுக்கும் உமைக்கும் மகனாகப் பிறந்தவர், மூத்த மகனாகப் பிறந்தவர் பிள்ளையார்.

பிள்ளையாரின் தோற்றத்தைப் பற்றிப் பல்வேறு புராணங்கள் பல்வேறு கதைகளைக் கூறுகின்றன.

பிடி என்றால் பெண் யானை. கரி என்றால் ஆண் யானை. பிடியின் உருவத்தை உமை கொண்டாள்; கரியின் உருவத்தை சிவன் கொண்டார்.

இவ்வுருவுகள் கொண்ட சிவனும் உமையும் அடியவர் வினைதீர்க்க விழைந்தனர். பிள்ளையாரைப் பெற்றெடுத்தனர்.

'பிடியதன் உரு உமை கொள, மிகு கரியது
வடி கொடு, தனது அடி வழிபடும் அவர் இடர்
கடி கணபதி வர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே''

எனத் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் திரு வலிவலம் என்கின்ற கோவிலில் எழுந்தருளி உள்ள சிவபெருமான், பிள்ளையார் தோன்றக் காரணமாக இருந்தார் எனத் தேவாரத்தில் பாடுகிறார்.

ஓம் என்பது பிரணவ வடிவம். திருக்கயிலாய மலையில் பூஞ்சோலை உளது. அப் பூஞ்சோலையில் சித்திர மண்டபம் ஒன்று உண்டு.

அச் சித்திர மண்டபத்தில் ஓம் எனும் பிரணவ வடிவம் எழுதப்பட்டு இருந்தது. சிவனும் உமையும் அப் பிரணவ வடிவைப் பார்த்தனர்.

ஆண் யானை பெண் யானை வடிவு கொண்டனர். பிரணவப் பொருளாகிய பிள்ளையாரைப் பெற்றுத் தந்தனர்.

ஓங்கார ஒலி பிரிந்து அகரம், உகரம் இரண்டும் ஆண் யானை பெண் யானை வடிவுகள் எடுத்துப் பிள்ளையார் தோன்றக் காரணமாக இருந்தன, என்றும் புராணங்கள் கூறுகின்றன.

ஓங்கார ஒலியின் வடிவமே பிள்ளையார் என்பதை முன்பு தெரிந்து கொண்டோம்.

## 5. நாம் காணும் பிள்ளையார்

நாம் பிள்ளையார் கோவிலுக்குப் போகிறோம். அங்கே பிள்ளையாரைக் காண்கிறோம். அவர் திரு வுருவம் உட்கார்ந்த நிலையில் உள்ளது.

இன்னுமொரு பிள்ளையார் கோவிலுக்குப் போகிறோம். அங்கே பிள்ளையார் நின்று கொண் டிருக்கிறார்.

இன்னுமொரு கோவிலில் நடனமாடிக் கொண் டிருக்கிறார்.

சில கோவில்களில் பிள்ளையாருக்கு எட்டுக் கைகளும் உண்டு.

இதற்குக் காரணம் என்ன?

கடவுளை வழிபடுபவர்களின் உள்ளம் அவர்க ளுடைய வளர்ச்சிக்கு ஏற்ப வேறுபடுகிறது. பக்கு வத்துக்கு ஏற்ப வேறுபடுகிறது. சூழ்நிலைக்கு ஏற்ப வேறுபடுகிறது.

ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு திருவுருவ அமைப் பில் ஈடுபடும் உள்ளம் இருக்கும். அவ்வத் திரு வுருவங்கள் அவரவரின் உள்ளம் ஒன்ற வகைசெய் யும். ஒன்றிய உள்ளம் தியானித்து உயர்கிறது.

எந்தத் திருவுருவத்தில் அவருக்கு ஈடுபாடும் ஒன்றிப் போதலும் தியானமும் ஏற்படுகிறதோ அந் தத் திருவுருவம் அவருக்கு ஈடேற்றத்தை அளிக்கிறது.

இடையறாத தியானம் இன்பங்களைத் தருகிறது. உயிர் உயர்வடையச் செய்கிறது.


இவ்வாறாக உள்ள திருவுருவங்கள், பிள்ளையாரின் திருவுருவங்கள் முப்பத்திரண்டு ஆகும்.

அடுத்து வரும் பக்கங்களில் ஒவ்வொரு திருவுருவத்தையும் படமாகக் காண்பீர்கள். அதற்குரிய சிறப்புச் செய்திகளையும் படத்தின் கீழ்க் காண்பீர்கள்.

## திருவுருவப்படம் கிடைக்காத மூர்த்தம்


**லட்சுமி கணபதி:**

எட்டுக் கைகளிலும் கிளி, மாதுளம்பழம், கலசம், அங்குசம், பாசம், கற்பகக்கொடி, கட்கம், வரதம் இவற்றையுடையவர். அமுதப் பிரவாகம் போன்ற வெண்மை நிறத்தோடு நீலத் தாமரைப் பூவை ஏந்திய இருபெருந் தேவிமார்களோடு திகழுபவர்.




## பால கணபதி

நான்கு திருக்கரங்களும், யானைமுகமும் உடையவர். உதிக்கின்ற செங்கதிர்போன்ற நிறம் உடையவர். குழந்தைத் திருமேனியுடையவர். வாழைப் பழம், மாம்பழம், பலாப்பழம், கரும்பு இவற்றை நான்கு திருக்கரங்களிலும் தாங்கியவர். இவரது துதிக்கையில் மோதகம் விளங்கும்.




தருண கணபதி

எட்டுத் திருக்கரங்களையும், யானை முகத்தையும் உடையவர். கைகளில் பாசம், அங்குசம், பணியாரமாகிய மோதகம், விளாம்பழம், நாவற்பழம், ஒடிந்த தன்கொம்பு, நெற்கதிர், கரும்பின் துண்டு இவற்றையுடையவர். நண்பகல் தோன்றுகின்ற சூரியனைப் போன்ற நல்ல சிவந்த திருமேனி படைத்தவர்.




## ஸ்ரீ பக்தி கணபதி

சரத்காலத்து நிறைமதி போன்ற வெண்ணிறம் படைத்தவராக, தேங்காய், மாம்பழம், வாழைப் பழம், பாயஸ பாத்திரம் இவற்றை நான்கு திருக் கரங்களில் ஏந்தி, யானைமுகமும் உடையவராக விளங்குபவர்.




## வீர கணபதி

வேதாளம், வேல், அம்பு, வில், சக்கரம், கத்தி, கேடகம், சம்மட்டி, கதை, அங்குசம், நாகம், பாசம், சூலம், குந்தாலி, மழு, கொடி ஆகிய பதினாறையும் தாங்கிய பதினாறு திருக்கரங்களையும், சிவந்த திரு மேனியையும், சிறிது சினந்த திருமுகத்தையும் உடையவர்.




**சத்தி கணபதி**

செவ்வந்திவானம் போன்ற நிறமுடையவராக, பச்சைநிற மேனியளாகிய தேவியைத் தழுவிக்கொண்டு இருப்பவர். ஒருவர்க்கொருவர் இடுப்பில் கைகொடுத்துத் தழுவிக்கொண்டிருப்பது தனியழகு. பாசம், பூமாலை இவற்றைத் தாங்கிய திருக்கரத்துடன் அஞ்சலென்கிற அபயகரமும் உடையவர்.




துவிஜ கணபதி

நான்கு திருக்கரங்களிலும் முறையே புஸ்தகம், அட்சமாலை, தண்டம், கமண்டலம் இவற்றைத் தரித்தவர். மின்னற் கொடிபோல விளங்குகின்ற கைவளையல்களை உடையவர். சந்திரன்போல வெண்மையானவர். நான்கு யானைமுகங்களை உடையவர்.



சித்தி கணபதி


மாம்பழம், பூங்கொத்து, கரும்புத் துண்டு, எள்ளுருண்டை, பரசு இவற்றைத் துதிக்கையுள்பட ஐந்து கரங்களில் தரித்தவரும், பொன்கலந்த பசுமை நிறமுடையவருமாக விளங்குபவர்.



உச்சிஷ்ட கணபதி


நீலோற்பலம், மாதுளம்பழம், வீணை, நெற்கதிர், அட்சமாலை இவற்றைத் தரித்தவரும், நீல நிறத் திருமேனி உடையவருமாக விளங்குபவர்.

**வேறுவகை:-** பெண்ணின் யோனியில் துதிக்கையை வைத்தவராக காமமோகிதராக விளங்குபவர். நீல வர்ணம் உடையவர்.




**விக்ன கணபதி**

சங்கு, கரும்புவில், புஷ்பபாணம், கோடரி, பாசம், சக்கரம், கொம்பு, மாலை, பூங்கொத்து, பாணம் முதலியவற்றோடு கூடிய திருக்கரங்களை யுடையவரும், ஆபரணங்களை நிரம்பத் தரித்த வரும், பொன்மேனியருமாக விளங்குபவர்.




## க்ஷிப்ர கணபதி

தந்தம், கற்பகக்கொடி, பாசம், ரத்னகும்பம், அங்குசம் இவற்றை ஏந்தியவர். செவ்வரத்தம் பூப் போன்ற அழகிய மேனியர். செந்நிறமானவர்.




## ஏரம்ப கணபதி

அபயம், வரதமாகிய கைகளையுடையவர், பாசம், தந்தம், அட்சமாலை, மாலை, பரசு, சம்மட்டி, மோதகம், பழம் இவற்றைத் தாங்கியவர். சிங்கவாகனத்தில் ஏறியவர், யானைமுகம் ஐந்துடையவர், பசுமை கலந்த கருமை நிறம் உடையவர்.




**மஹா கணபதி**

மாதுளம்பழம், கதை, கரும்பு, வில், சக்கரம், தாமரை, பாசம், நீலோத்பலம், நெற்கதிர், தந்தம், ரத்னகலசம் இவற்றைத் திருக்கரங்களில் தாங்கியவர். செங்கதிர்போன்ற நிறம் உடையவர். முக்கண்ணர், பிறை முடியர். மடிமீது எழுந்தருளியிருக்கிற—தாமரையை ஏந்திய தேவியாற் சுவையோடு தழுவப்பெற்றவர்.




## விஜய கணபதி

பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவற்றைத் தரித்தவர். பெருச்சாளி வாகனத்தில் ஏறியிருப்பவர். செந்நிறமானவர்.




நிருத்த கணபதி

இவர் கூத்தாடும் பிள்ளையார் எனப்பெறுவர். மோதிரங்களணிந்த விரல்களையுடைய கைகளால் பாசம், அங்குசம், அபூபம், கோடரி, தந்தம் இவற்றைத் தரித்தவர். பொன்போன்ற நிறமுடைய திருமேனியர். கற்பக விருட்சத்தினடியில் எழுந்தருளி யிருப்பவர்.




## ஊர்த்துவ கணபதி

நீலப் பூ, நெற்பயிர், தாமரை, கரும்புவில், பாணம், தந்தம் இவற்றையுடையவர். பொன்வண்ண வண்ணர். பச்சைநிற மேனியோடு விளங்குகின்ற தேவியைத் தழுவியிருப்பவர்.



## ஏகாட்சர கணபதி

செந்நிறமானவர், செம்பட்டாடையர், செம் மலர் மாலையர், பிறை முடியர், முக்கண்ணர், குறுந்தாளர், குறுங்கையர். மாதுளம்பழம், பாசம், அங்குசம், வரதம் இவை தாங்கிய கரங்களையுடைய வர், யானைமுகவர், பதுமாசனத்திருப்பவர், பெருச்சாளி வாகனர்.




## வர கணபதி

செவ்வண்ணர், யானைமுகவர், முக்கண்ணர், பாசம் அங்குசங்களைத் தரித்தவர். தேன்நிறைந்த மண்டையையுடையவர். பிறைமுடியர்.




**திரயாக்ஷரகணபதி**

அசைகின்ற செவிகளில் சாமரையணிந்தவர், பொன்னிறமானவர், நான்கு கரங்களை உடையவர். பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவற்றைத் தாங்கியவர், துதிக்கை நுனியில் மோதகம் உடையவர்.




க்ஷிப்ரபிரசாதர்

பாசம், அங்குசம், கல்பலதை, மாதுளம்பழம், தாமரை, தருப்பை விஷ்டரம் இவற்றைத் தரித்தவர், திருவாபரணங்களை அணிந்தவர், பேழை வயிற்றையுடையவர்.




## ஹரித்திரா கணபதி

மஞ்சள் நிறமானவர், நான்கு கரங்களையுடையவர், அவற்றில் பாசம், அங்குசம், தந்தம், மோதகம் இவற்றைத் தரித்திருப்பவர்.




**ஏகதந்தர்**

பேழை வயிற்றுடன், நீலமேனியர், கோடரி, அட்சமாலை, இலட்டு, தந்தம் இவற்றையுடையவர்.



சிருஷ்டி கணபதி

பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவற்றைக் கரங்களில் ஏந்தியவர், பெருச்சாளி வாகனத்தை யுடையவர். சிவந்த திருமேனியர்.




## உத்தண்ட கணபதி

நீலம், தாமரை, மாதுளம்பழம், கதை, தந்தம், கரும்புவில், இரத்னகலசம், பாசம், நெற்கதிர், மாலை இவற்றை யேந்திய பத்துக் கைகளை உடையவர். அழகிய தாமரைப் பூவை ஏந்திய பச்சை மேனியளாகிய தேவியால் தழுவப்பெற்றவர்.




ரணமோசனர்

பாசம், அங்குசம், தந்தம், நாவற்பழம் இவற்றைத் தரித்தவர். வெண்பளிங்குபோன்ற மேனியர். செந்நிறப் பட்டாடை யுடுத்தியவர்.




## துண்டி விநாயகர்

அட்சமாலை, கோடாரி, இரத்னகலசம், தந்தம் இவற்றை ஏந்தியவர்.



துவிமுக கணபதி

தந்தம், பாசம், அங்குசம், இரத்னபாத்திரம் இவற்றைக் கையில் ஏந்தியவர், பசுநீலமேனியர், செம்பட்டாடையும், இரத்தின கிரீடமும் அணிந்தவர். இருமுகம் உடையவர்.




## மும்முகப் பிள்ளையார்

வலது கைகளில் கூரிய அங்குசம், அட்சமாலை, வரதம் இவற்றை உடையவர். இடது கைகளில் பாசம், அமுதகலசம், அபயம் இவற்றை உடையவர். பொற்றாமரையாஸனத்தின் நடுப் பொகுட்டில் மூன்று முகங்களோடு எழுந்தருளியிருப்பவர். புரசம் பூப் போன்ற சிவந்த நிறம் உடையவர்.




**சிங்க கணபதி**

வீணை, கற்பகக்கொடி, சிங்கம், வரதம் இவற்றை வலது கைகளில் தாங்கியவர். தாமரை, இரத்ன கலசம், பூங்கொத்து, அபயம் இவையமைந்த இடது கைகளை யுடையவர். வெண்ணிறமான மேனியர், யானைமுகவர், சிங்க வாகனத்தில் எழுந்தருளி யிருப்பவர்.




**யோக கணபதி**

யோக நிலையில் யோகபட்டம் தரித்துக்கொண்டு, இளஞ்சூரியன் போன்ற நிறத்தோடு, இந்திரநீலம் போன்ற ஆடையை உடுத்திக்கொண்டு, பாசம், அக்ஷமாலை, யோகதண்டம், கரும்பு இவற்றை ஏந்தி இருப்பவர்.



துர்க்கா கணபதி


சுட்ட பசும்பொன்னிறம், எட்டுக் கை, பெரிய மேனி, அங்குசம், பாணம், அட்சமாலை, தந்தம் இவற்றை வலது கைகளில் ஏந்தியவர். பாசம், வில், கொடி, நாவற்பழம் இவற்றை இடது கைகளில் உடையவர். செந்நிற ஆடையர்.




## சங்கடஹரர்

இளஞ்சூரியன் போன்ற நிறத்தோடு, இடப் பாகத் தொடையில் அம்மையை உடையவர். அம்மை பசியமேனியளாக, நீலப் பூவை ஏந்தியவளாக இருப்பள். வலது கையில் அங்குசம், வரதம் உடையவர். இடது கையில் பாசம், பாயசபாத்திரம் ஏந்தியவர்; செந்தாமரைப் பீடத்தில் நிற்பவர். நீலநிற மான ஆடையணிந்தவர்.

# பிள்ளையார் ஆயுதங்கள்




1. **பாசம்:** இது கயிறு. பகைவர்கள் கையையும், கால்களையும் கட்டப் பயன்டும். ஒருகயிறு அல்லது இரண்டு மூன்று கயிறுகள் சேர்த்து. எளிதில் அவிழ்க்கும் சுருக்குமுடிச்சாக இடப் பட்டிருக்கும். சுருக்கிடாமல் வளையமாகவும் இருக்கும். விநாயகருக்குச் சிறப்பான கருவி நாகமே பாசமாக அமைவதும் உண்டு. இதனை நாகபாசம் என்பார்கள். இதன் வகைகள் நான்கு.




2. **அங்குசம்:** இது யானையை அடக்கப் பயன்படுவது. இரும்பாற் செய்யப்பெற்ற வளைந்த மூக்கும். குத்தியடக்கக்கூடிய ஒரு கூரிய நேரான பகுதியும் உடையது. நீளமான கழிகளிற் செருகப்பெற்றிருக்கும். யானைப்பாகன் இதனை யானைக்காதிலே மாட்டித் தொங்கவிட்டிருப் பான். இதில் இரண்டு உருவங்கள் உள்ளன. விநாயகருக்கு உரிய சிறப்புக்கருவிகளில் இதுவும் ஒன்று.

3. **தந்தம்:** ஒடிந்த யானைக்கொம்பு.





4. **வேதாளம்:** தசை நாரில்லாத, அச்சமும் அருவெறுப்புந் தரத்தக்க பூத வடிவாக இருப்பது. இதனை ஏவிப் பகைவர்களை விழுங்கச் செய்வது வழக்கம். இது வீரகணபதி கரங்கள் ஒன்றில் இருக்கிறது.



**5. சக்தி:** இது வேல். ஆறு கூரிய பகுதி களையுடையது. தகட்டு வடிவானது. முருகனுக் குச் சிறப்பானது. விநாயகரும் வீரகணபதியாக விளங்கும்போது தாங்கியிருக்கிறார். இது பிடித்த படியே எறியும் கருவிகளில் ஒன்று. வேல் மட்டும் இரும்பாலானது. இதனை நடுவில் பிடித்து எறிவது வழக்கம். இருமருங்கும் குத்தும் இயல்பினது. 'யானையெறிந்தவேல் ஏந்தல் இனிது' என்பார் வள்ளுவரும்.



**6. அம்பு:** இது வில்லை வளைத்து அதில் வைத்து எய்யப் பெருங்கருவி. நுனி கூரிய முள்போன்று. நுனிமட்டும் இரும்பாலானது. நுனியை ஒரு கழியிற் செருகியிருப்பார்கள். அதனது வால்பக்கத்தில் கழுகின் இறகுகளை யும், மற்ற பறவை இறகுகளையும் கட்டியிருப் பார்கள். பெரும்பாலும் கழுகிறகே இதற்குப் பயன்படும். இறகு கட்டுவது விரைந்து காற்றை ஊடுருவிச் செல்வதற்காகவே.


**7. வில்:** இது அம்பு எய்யப் பயன்படுவது. மூங்கில் சிலையென்னு மரம் முதலான வளையக் கூடிய நார் மரத்தால் செய்யப்பெறுவது. இந்த வில்லினது இருதலையிலும் தோல், அல்லது நார்க்கயிற்றானியன்ற நாண் கட்டப்பெற்றிருக் கும். வில்லை வளைத்து நாணை இறுகக்கட்டி அதன்நடுவில் அம்பைவைத்துவிடுவது வழக்கம். எவ்வளவுக்கெவ்வளவு வில்லின்வலியும், நாணின் உறுதியும், இழுத்துவிடுபவன் வன்மையும் இருக் கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு அம்பின் வேகமும், தைக்கும் வன்மையும் மிகும். அம்பு பட்டவுடன் இறப்பதற்காக அதன் நுனியில் விஷம் தோய்த்து வைத்தலும் வழக்கம்; அம்பின் நுனி பிறைமதிபோலக் கவர்பட்டதாகவும் இருக் கும். இதற்குப் பிறையம்பு என்றுபெயர்.






8. **சக்கரம்:** இது விஷ்ணுவுக்கு உரிய சிறப்பான கருவி. இதன் அமைப்பு அனைவருக்கும் நன்கு தெரிந்ததே. இதில் இருவகையுண்டு. ஒன்று தேருருளை போன்றது. மற்றது வளையம்போன்றது. இது அழகுப் பொருளாக எத்தனையோ வடிவங்களிற் காணப்பெறுகின்றன.


9. **கத்தி:** இது இன்று அறவே மறந்துபோன கருவி. தலைப்பகுதி குண்டாகத் தடித்துள்ள நீளக்கழியிற் கோக்கப் பெற்றுள்ள கருவி. இது வும் பகைவரை அடிக்கப் பயன்படுவது. தலைப் பக்கம் ஒரு மண்டை ஓடு போலவும், கம்பி முழங்கால் எலும்பாகவுங்கூட அமைந்திருப்ப துண்டு. இதனைக் குத்துக்கத்தியாகிய 'பிச்சுவா' என்பாரும் உளர்.





10. **கேடயம்:** இது கத்திவெட்டைத் தடுப் பதற்காகப் பயன்படுவது. பலகையாலும், வலு வுள்ள காட்டெருமை கடமா நீர்யானை காண்டா மிருகம் இவற்றின் தோலாலும் செய்யப்பெறும். சதுரம், நீளச்சதுரம், வட்டம், முக்கோணம் முதலிய பலவடிவங்களிற் செய்யப்பெறும்.

11. **சம்மட்டி:** இது இரும்பாலியன்ற கனத்த தலைப்பகுதியை உடையது. இதன் நடு வில் தொளையிடப்பெற்றிருக்கும். இதில் கைபிடிக்கும் சிறுகழியைக் கோத்திருப்பார்கள். இதுவும் உடையவன் கையைவிட்டு அகலாதபடி எதிரியை அடித்துத் தாக்கப் பயன்படுத்தப்பெறும்.






12. **கதை:** குண்டாந்தடி. இதில் பலவகைகள் காலாந்தரத்தில் ஏற்பட்டன. பகைவர்களை அடித்து நொறுக்கப் பயன்படுவது. கையை விட்டு அகலாதபடி, காவலாக இருந்து உடைய வனைப் பாதுகாப்பது.




13. **நாகபாசம்:** இதுவும் பாசவகைகளுள் ஒன்று.




14. **சூலம்:** இது மூன்று நுனிகளையுடையது. சிவபெருமானுக்குச் சிறப்பாக உரியது. சுரை வரையிலும் எஃகு இரும்பாற் செய்யப்பெற்றது. நீளமான மரக்கம்பிற் கோக்கப்பெற்றிருக்கும்.



15. **குந்தாலி:** இன்று, வன்மையான நிலப் பாறைகளை உடைக்கப் பயன்பெறும். தலை கனத்துக் கூரிய நுனியோடு இருக்கும் இரும்பானி யென்ற கருவி இது. இதில் பலவகைகள் உள்ளன.



16. **மழு:** இன்று மரங்களை வெட்டப் பயன்பெறுவதாக எறியென்னும் பெயருடன் வழங்குகிறது. மிகக் கூர்மையானது. 'வாய்ச்சி' என்னும் மரஞ்செதுக்குங் கருவியினின்றும் முற்றிலும் வேறுபட்டது. தீப்பிழம்பு என்பதும் உண்டு. சிவபெருமானுக்கு விருப்பமான கருவி.




17. **கொடி:** இது வெற்றிக்கு அறிகுறி யானது துணியாலியன்றது. அடையாளம் எழுதப் பெற்றது. இதனையும் விநாயகப்பெருமான் தமது திருக்கையில் தாங்கியிருக்கின்றார்.



**18. தண்டம்:** இது நீளமான கைத்தடி. மரத்தாலானது.


**19. கமண்டலம்:** நீர் வைத்துள்ள கலம். ஒரு மரத்தின் காயால் இயன்றது. முனிவர்கள், அந்தணர்கள் நாட்கடனைக் கழிப்பதற்காக வைத்திருப்பார்கள். இதுவும் அக்ஷமாலையும் ஆயுதங்கள் அல்லவானாலும், திருவுருவநிலையை அறிந்து கொள்ள உதவும் கருவிகள்.





**20. பரசு:** இது சற்றேறக்குறைய மழுப்போன்ற கருவிதான். ஆனாலும் மழுவின் வாய் சதுரமாக இருக்கும். இதன்வாய் சற்று வளைந்து கூரியதாக இருக்கும். இதுவும் காம்பில் செறிக்கப்பெற்றுப் பயன்படுத்தப் பெறும் கருவியாகும்.

**21. கரும்புவில்:** கரும்பால் செய்யப்பெற்ற வில். இது மன்மதனுக்குரிய சிறப்பான கருவி. யோகியாக இருக்கும் மற்றைய தெய்வங்களும், காமேஸ்வரியாகிய காமாட்சியும் தாங்கியிருப்பர்.





**22. சங்கம்:** இதுவும் விஷ்ணுவுக்குரிய சிறந்த ஆயுதம். வெற்றியை அறிவிக்கும் கருவி. பகைவர்களை இதன் ஒலிகேட்டதுமே ஒடுங்கி அடங்கச்செய்யும் அச்சக்கருவியுமாம். இதிலும் பல வடிவங்கள் உள.



**23. புஷ்பபாணம்:** தாமரை, அசோகு, மா, முல்லை, நீலம் என்ற ஐந்து பூக்களாலியன்ற பாணம். இவற்றை மன்மதன் மக்களிடத்தில் காம நினைப்பூட்ட எய்வன். போகநிலையில் மற்றத்தெய்வங்களும் தாங்குவதுண்டு.



**24. கோடரி:** மரம் பிளக்கப் பயன்படும் கருவிபோலப் பகைவரின் உடலைப் பிளக்க இது பயன்படுவது. இரும்பால், வாய் கூர்மையாகப் பின்பக்கம் கனமானதாக அமைந்துள்ளது.



**25. அக்ஷமாலை:** உருத்திராக்ஷ மாலை. இது தனித்தனியே ஒரு மாலையாகத் திருவுருவங்களில் தொங்குவதும் உண்டு. மிகப் பழைமையான திருவுருவங்களில் இது ஓராயுதம் போல் இருப்பதைக் காணலாம்.



**26. சாமரம்:** இது கவரிமான் வால்மயிரால் ஆனது. ஓர் ஆயுதம் அன்று. ஆனாலும் விநாயகப் பெருமானுடைய திருவுருவ அடையாளங்களில் ஒன்றாகையால் ஆயுதவரிசையில் இது இடம் பெற்றிருக்கிறது.

**27. கட்டுவாங்கம்:** இது நீளமான கத்தி. போரில் படைகளை வெட்டப் பயன்படுவது. இதில் ஒருமுனையுடையதும், இருமுனையுடையதும் என இருவகையுண்டு. குத்துக்கத்தியாகக் கூரிய நுனியுடையதும் உண்டு. பழங்கால மன்னர்கள் இடுப்பில் செருகியிருப்பது வழக்கம்.






28. தீ அகல்: ஒரு தீப்பிழம்பு தீ அகலாகிய மழுவின் வடிவும் இப்படியேதான் இருக்கம்.



29. வீணை: இது ஓர் இசைக்கருவி. போர்க் காலங்களில் தளர்ந்த படைவீரர்களுக்கு உணர்ச்சியூட்டப் பயன்படுவது.



**நேபாளத்தில் விநாயகர்**

# சிறந்த தலங்கள்

இறைவன் எங்கும் விளங்கினாலும், திருக்கோயில்களில் மிகவிளக்கம் பெற்றுள்ளார். பசுவின் உடம்பெங்கும் பால் பரவியிருப்பினும் முலையின் வழியாகவே வெளிப்படுகின்றது. அதுபோல விநாயகர் எங்கும் எழுந்தருளியிருந்தாலும், சில தலங்களில் அவருடைய திருவருட்பொலிவு சிறந்து தோன்றுகின்றது. அத்தலங்களையும் அவைகளிலுள்ள விநாயகர் திருநாமங்களையும். முடிந்தவரையில் வரலாற்றையும் தெரிவிப்போம்.

**திருவாவடுதுறை:** துணைவந்த விநாயகர்.
அழகிய விநாயகர்.
சிவப்பிரகாச விநாயகர்.

**திருநறையூர்ச்சித்தீச்சரம்:**
**திருவிடைமருதூர்:** ஆண்டவிநாயகர்.

**திருவையாறு:** ஆதிவிநாயகர்

**விருத்தாசலம்:** ஆழத்துப்பிள்ளையார்.

**திருச்சிராப்பள்ளி:** உச்சிப்பிள்ளையார்.

**குடந்தைக் கீழ்க்கோட்டம்:**
(நாகேஸ்வரசுவாமிகோயில்) கங்கைக்கணபதி.

**திருக்காறாயில்:** கடுக்காய் விநாயகர்.

**திருக்கச்சூர்:** தாலமூலவிநாயகர்.
கருக்கடிவிநாயகர்.

**திருக்கடவூர்:** கள்ளவாரணப் பிள்ளையார்.
**கடிக்குளம்:**

| | |
|---|---|
| **திருக்கருகாவூர்:** | |
| **திருமுருகன்பூண்டி:** | கூப்பிடுபிள்ளையார். |
| **திருநாட்டியத்தான்குடி:** | கைகாட்டி விநாயகர். |
| **திருக்கொட்டையூர்:** | கோடி விநாயகர். |
| **திருமறைக்காடு:** | சிந்தாமணி விநாயகர்.<br>வீரகத்தி விநாயகர். |
| **கீழ்வேளூர்:** | |
| **திருமழபாடி:** | சுந்தரகணபதி. |
| **திருவுசாத்தானம்:** | சூதவனப்பிள்ளையார் |
| **அன்பிலாலந்துறை:** | செவிசாய்த்த விநாயகர். |
| **திருநள்ளாறு:** | சொர்ண விநாயகர். |
| **சிதம்பரம்:** | திருமுறைசுட்டிய விநாயகர்<br>கற்பகப் பிள்ளையார்<br>(க்ஷேத்ரபாலப் பிள்ளையார்)<br>முக்குறுணி விநாயகர்<br>(முகக்கட்டண விநாயகர்.)<br>உச்சிட்ட விநாயகர்.<br>நரமுக விநாயகர். |
| **திருப்பனையூர்:** | துணையிருந்த விநாயகர். |
| **நாகபட்டினம்:** | மாவடிப் பிள்ளையார்.<br>நாகாபரணப் பிள்ளையார்.<br>பஞ்சமுக விநாயகர். |
| **திருஇன்னம்பர்:** | நிருத்தன விநாயகர். |
| **திருவீழிமிழலை:** | படிக்காசு விநாயகர் |
| **திருப்புறம்பயம்:** | தேன் விநாயகர்<br>பிரளயங்காத்த பிள்ளையார். |
| **திருமாகறல்:** | பொய்யா விநாயகர். |
| **சீகாழி:** | ஆபத்துக்காத்த விநாயகர். |
| **திருநாரையூர்:** | |
| **திருவெண்ணெய்நல்லூர்:** | பொல்லாப் பிள்ளையார். |

| | |
|---|---|
| **அம்பல்:** | சுட்டு விநாயகர். |
| **திருவாரூர்:** | மாற்றுரைத்த விநாயகர். வாதாபி விநாயகர். |
| **ஆலவாய்** (மதுரை): | |
| சிதம்பரம்: | |
| மாயூரம்: | முக்குறுணிப் பிள்ளையார். |
| **வல்லம்:** | வரசித்தி விநாயகர். |
| திருக்களர்: | |
| **அத்திகிரி:** | வலம்புரி விநாயகர். |
| திருப்புகலூர்: | |
| திருச்செங்காட்டங்குடி: | |
| திருவாரூர்: | வாதாபி விநாயகர். |
| காஞ்சிபுரம்: | விகடசக்ர விநாயகர். |
| திருவலஞ்சுழி: | வெள்ளை விநாயகர். |
| திருவேதிகுடி: | வேதப் பிள்ளையார். |
| திருநல்லூர்: | சாளக்கிராமடி விநாயகர். |
| திருந்துதேவன்குடி: | கர்க்கடக விநாயகர். (நண்டுபூசித்த விநாயகர்) |
| மயூரபுரம்: | மயூரேச விநாயகர். |
| காசி: | துண்டி விநாயகர். |
| மதுரை: | சித்தி விநாயகர். |
| காளத்தி: | மஞ்சந்தி விநாயகர். |
| மகாபலேஸ்வரம் அல்லது திருக்கோகர்ணம்: | மகாகணபதி. |
| செல்லக்கதிர்காமம்: | மாணிக்க விநாயகர். |
| **மட்டக்களப்பு:** | மாமாங்கப் பிள்ளையார் |
| **மறவன்புலவு:** | வள்ளக்குளப் பிள்ளையார் |
| **மானிப்பாய்:** | மருதடிப் பிள்ளையார் |
| **சித்தன்கேணி:** | மகாகணபதி |

**சிறப்பு வழிபாட்டு நாட்கள்:**


— வெள்ளிக்கிழமை

— மாதந்தோறும் வளர்பிறைச் சதுர்த்தி நாள்

— ஆவணிச் சதுர்த்தி நாள்

— கார்த்திகைக் கார்த்திகைக்கு அடுத்துள்ள நாளில் இருந்து 21 நாட்கள்

நினைப்பற நினைந்து வழிபடுக
நாள்தோறும் வழிபடுக
சிறப்பு நாட்களிலும் வழிபடுக.



புவன கணபதி

# தேவாரம்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே!

— திருஞானசம்பந்தர்



திருவாரூர் மூலாதார கணபதி

கபிலதேவநாயனார் அருளிச்செய்த

# மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை

திருச்சிற்றம்பலம்

திருவாக்கும் செய்கருமங் கைக்கூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்-உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலார் கூப்புவர்தங் கை. 1

கைக்கும் பிணியொடு காலன் தலைப்படும் ஏல்வையினில்
எய்க்குங் கவலைக் கிடைந்தடைந் தேன்வெம்மை நாவளைக்கும்
பைக்கும் அரவரை யான்தந்த பாய்மத யானைபத்துத்
திக்கும் பணிநுதற் கட்டிரு வாளன் திருவடியே. 2

அடியமர்ந்து கொள்வாயே நெஞ்சமே அப்பம்
இடிஅவலோ டெள்ளுண்டை கன்னல்-வடிசுவையில்
தாழ்வானை ஆழ்வானைத் தன்அடியார் உள்ளத்தே
வாழ்வானை வாழ்த்தியே வாழ். 3

வாழைக் கனிபல வின்கனி மாங்கனி தாஞ்சிறந்த
கூழைச் சுருள்குழை அப்பம்எள் ளுண்டைஎல் லாந்துறுத்தும்
பேழைப் பெருவயிற் றோடும் புகுந்தென் உளம்பிரியான்
வேழத் திருமுகத் துச்செக்கர் மேனி விநாயகனே. 4

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான்-விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து. 5

கனிய நினைவொடு நாடொறுங் காதற் படும்அடியார்க்
கினியன் இனியொரு இன்னாங் கிலம்எவ ரும்வணங்கும்

பனிவெண் பிறைநறுங் கொன்றைச் சடைபலி தேரியற்கை
முனிவன் சிறுவன் பெருவெங்கொல் யானை முகத்தவனே. 6

யானை முகத்தான் பொருவிடையான் சேய்அழகார்
மானமணிவண்ணன் மாமருகன்-மேல்நிகழும்
வெள்ளக் குமிழி மதத்து விநாயகன்என்
உள்ளக் கருத்தின் உளன். 7

உளதள வில்லதோர் காதலென் நெஞ்சில்வன் னஞ்சம்உண்ட
வளரிள மாமணி கண்டன்வண் டாடுவண் கோதைபங்கத்
திளவளர் மாமதிக் கண்ணிஎம் மான்மகன் கைம்முகத்துக்
களகள மாமதஞ் சேர்களி யானைக் கணபதியே. 8

கணங்கொண்ட வல்வினைகள் கண்கொண்ட நெற்றிப்
பணங்கொண்ட பாந்தட் சடைமேல்-மணங்கொண்ட
தாதகத்த தேன்முரலுங் கொன்றையான் தந்தளித்த
போதகத்தின் தாள்பணியப் போம். 9

போகபந் தத்தந்தம் இன்றிநிற் பீர்புனை தார்முடிமேல்
நாகபந் தத்தந்த நாளம் பிறைஇறை யான்பயந்த
மாகபந் தத்தந்த மாமழை போல்மதத் துக்கதப்போர்
ஏகதந் தத்தெந்தை செந்தாள் இணைபணிந் தேத்துமினே. 10

ஏத்தியே என்னுள்ளம் நிற்குமால் எப்பொழுதும்
மாத்தனிவெண் கோட்டு மதமுகத்துத்-தூத்தழல்போற்
செக்கர்த் திருமேனிச் செம்பொற் கழல்அங்கை
முக்கட் கடாயானை முன். 11

முன்னிளங் காலத்தி லேபற்றி னேன்வெற்றி மீனுயர்த்த
மன்னிளங் காமன்றன் மைத்துன னேமணி நீலகண்டத்
தென்னிளங் காய்களிறேஇமை யோர்சிங்க மேஉமையாள்
தன்னிளங் காதல னேசர ணாஉன் சரணங்களே. 12

சரணுடை யேன்என்று தலைதொட் டிருக்க
முரணுடையேன் அல்லேனான் முன்னம்-திரள்நெடுங்கோட்
டண்டத்தான் அப்புறத்தான் ஆனைமுகத் தான்அமரர்
பண்டத்தான் தாள்பணியாப் பண்டு. 13

பண்டந்த மாதரைத் தாமென் றினியன வேபலவும்
கொண்டந்த நாள்குறு காமைக் குறுகுவர் கூறுணர்விற்
கண்டந்த நீண்முடிக் கார்மத வார்சடைக் கற்றைஒற்றை
வெண்டந்த வேழ முகத்தெம் பிரானடி வேட்கையரே. 14

வேட்கை வினைமுடித்து மெய்யடியார்க் கின்பஞ்செய்
தாட்கொண் டருளும் அரன்சேயை - வாட்கதிர்கொள்
காந்தார மாற்பிற் கமழ்தார்க் கணபதியை
வேந்தா உடைத்தமரர் விண். 15

விண்ணுதல் நுங்கிய விண்ணுமண் ணுஞ்செய் வினைப்பயனும்
பண்ணுதல் நுங்கடன் என்பர்மெய் அன்பர்கள் பாய்மதமா
கண்ணுதல் நுங்கிய நஞ்சம்உண் டார்கரு மாமிடற்றுப்
பெண்ணுத னும்பிரி யாவொரு பாகன் பெருமகனே. 16

பெருங்காதல் என்னோடு பொன்னோடை நெற்றி
மருங்கார வார்செவிகள் வீசி-ஒருங்கே
திருவார்ந்த செம்முகத்துக் கார்மதங்கள் சோர
வருவான்றன் நாமும் வரும். 17

வருகோட் டருபெருந் தீமையும் காலன் தமரவர்கள்
அருகோட் டருமவ ராண்மையும் காய்பவன் கூர்ந்தஅன்பு
தருகோட் டருமர பிற்பத்தர் சித்தத் தறியணையும்
ஒருகோட் டிருசெவி முக்கட்செம் மேனிய ஒண்களிறே. 18

களியானைக் கன்றைக் கணபதியைச் செம்பொன்
ஒளியானைப் பாரோர்க் குதவும்-அளியானைக்
கண்ணுவதுங் கைத்தலங்கள் கூப்புவதும் மற்றவன்றாள்
நண்ணுவதும் நல்லார் கடன். 19

நல்லார் பழிப்பில் எழிற்செம் பவளத்தை நாணநின்ற
பொல்லா முகத்தெங்கள் போதக மேபுரம் மூன்றெரித்த
வில்லான் அளித்த விநாயக னேஎன்று மெய்ம்மகிழ
வல்லார் மனத்தன்றி மாட்டாள் இருக்க மலர்த்திருவே. 20

அதிராவடிகள் அருளிச்செய்த

# மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை

திருச்சிற்றம்பலம்

**அகவல்**

ஒருநெடுங் கங்கை இருங்குறும் பைம்புகர்
மும்முகச் செந்நுதி நாலிணர் வெண்ணிணக்
குடற்புலவு கமழும் அடற்கழுப் படையவன்
மதலை மாமதந் துவன்றிய கதனுடைக்
கடதடக் கபோலத் தோரிட மருப்பிற்
கரண்டக உதரத்து முரண்டரு குழவிதன்
சேவடி யுகளம் அல்ல
தியாவையும் இலமினி இருநிலத் திடையே. 1

**வெண்பா**

நிலந்துளங்க மேருத் துளுங்க நெடுவான்
தலந்துளங்கச் சப்பாணி கொட்டும்-கலந்துளங்கொள்
காமாரி ஈன்ற கருங்கைக் கடதடத்து
மாமாரி ஈன்ற மணி. 2

**கட்டளைக் கலித்துறை**

மணிசிந்து கங்கைதன் மானக் குருளையை வாள்அரக்கர்
அணிசிந்த வென்றஎம் ஐயர்க் கிளங்கன்றை அங்கரும்பின்
துணிசிந்த வாய்ப்பெய்த போதகத் தைத்தொடர்ந் தோர்பிறவிப்
பிணிசிந்து கார்முளை யைப்பிடித் தோர்க்கில்லை பேதுறலே. 3

**அகவல்**

பேதுறு தகையம் அல்லது தீதுறச்
செக்கர்க் குஞ்சிக் கருநிறத் தொக்கல் நாப்பண்

புக்கவண் இரும்பொறித் தடக்கையும்
முரணிய பெருந்தோட்
கொட்ட நாவி தேவிதன்
மட்டுகு தெரியல் அடிமணந் தனமே. 4

**வெண்பா**

மேய கருமிடற்றர் வெள்ளெயிற்றர் திண்சேனை
ஓய மணியூசல் ஆடின்றே-பாய
மழைசெவுக்காற் றுந்திய வாளமர்க்கண் எந்தை
தழைசெவிக்காற் றுந்தத் தளர்ந்து. 5

**கட்டளைக் கலித்துறை**

உந்தத் தளரா வளைத்தனம் முன்னம்மின் ஓடைநெற்றிச்
சந்தத் தளரா ஒருதனித் தெவ்வர்தந் தாளிரியூர்
விந்தத் தளரா மருங்கிற் கிளிபெற்ற வேழக்கன்றின்
மந்தத் தளரா மலர்ச்சர ணங்கள் வழுத்துமின்னே. 6

**அகவல்**

மின்னெடுங் கொண்ட லந்நெடு முழக்கத்
தோவற விளங்கிய துளைக்கைக் கடவுளை
யாமிக வழுத்துவ தெவனோ அவனேற்
பிறந்ததிவ் வுலகின் பெருமூ தாதை
உரந்தரு சிரமரிந் தவற்கே வரைந்தது
மேருச் சிமையத்து மீமிசை
வாரிச் செல்வன் மகள்மகன் மொழியே. 7

**வெண்பா**

மொழியின் மறைமுதலே முந்நயனத் தேறே
கழிய வருபொருளே கண்ணே-தெழிய
கலாலயனே எங்கள் கணபதியே நின்னை
அலாதையனே சூழாதென் அன்பு. 8

**கட்டளைக் கலித்துறை**

அன்பு தவச்சுற்று காரழல் கொண்டெயில் மூன்றெரிய
வன்புத வந்துந்தை மாட்டுகின் றான்மதஞ் சூழ்மருப்பிற்
கன்பு தவக்கரத் தாளமிட் டோடிக் கடுநடையிட்
டின்பு தவச்சென்று நீயன்று காத்த தியம்புகவே. 9

### அகவல்

கவவுமணிக் கேடகக் கங்கணக் கரவணா
அறைகழல் அவுணரொடு பொருத ஞான்றுநீள்
புழைக்கரம் உயிர்த்த அழற்பே ரூதை
விரைநனி கீறி மூரி
அஞ்சேறு புலர்த்தும் என்பர்
மஞ்சேறு கயிலை மலைகிழ வோயே. 10

### வெண்பா

மலைசூழ்ந் திழிகின்ற மாசுணப்பொற் பாறை
தலைசூழ்ந்து தானினைப்ப தொக்கும்-கலைசூழ்
திரண்டகங்கொள் பேரறிவன் திண்வயிற்றி னும்பர்க்
கரண்டகங்கொள் காலுயிர்க்குங் கை. 11

### கட்டளைக் கலித்துறை

காலது கையது கண்ணது தீயது கார்மதநீர்
மேலது கீழது நூலது வெற்பது பொற்பமைதீம்
பாலது தேன்து தானது மென்மொழிப் பாவைமுப்பூண்
வேலது வாளது நான்மறைக் கீன்ற விடுசுடர்க்கே. 12

### அகவல்

சுடர்ப்பிழம்பு தழைத்த அழற்றனி நெடுவேற்
சேய்மூ வுலகம் வலம்வர வேயக்
கொன்றையம் படலந் துன்றுசடைக் கிடந்த
ஓங்கிருந் தாதையை வளாஅய் மாங்கனி
அள்ளற் றீஞ்சுவை அருந்திய
வள்ளற் கிங்கென் மனங்கனிந் திடுமே. 13

### வெண்பா

இக்கயங்கொள் மூவலயஞ் சூழேழ் தடவரைகள்
திக்கயங்கள் பேர்ந்தாடச் செங்கீரை-புக்கியங்கு
தேனாட வண்டாடச் செங்கீரை ஆடின்றே
வானாடன் பெற்ற வரை. 14

### கட்டளைக் கலித்துறை

பெற்றமெல் லோதிச் சிலம்பின் மகள்பெறப் பிச்சுகந்த
மற்றவள் பிச்சன் மயங்கன்முன் னோன்பின் னிணைமைமிகக்

கற்றவ னையன் புறங்காட் டிடைநடம் ஆட்டுகந்தோ
செற்றவெண் தந்தத் தவன்நம்மை ஆட்கொண்டு செய்தனவே.

**அகவல்**

செய்தரு பொலம்படை மொய்தரு பரூஉக்
குருளை, வெள்ளெயிறு பொதிந்த வள்ளுகிர்த் திரள்வாய்ப்
பெருந்திரட் புழைக்கை
மண்முழை வழங்குந் திண்முரண் ஏற்றின்
பனையடர்ப் பாகன் றனதிணையடி
நெடும்பொற் சரணம் ஏத்த
இடும்பைப் பௌவம் இனிநீங் கலமே. 16

**வெண்பா**

அலங்கல் மணிகனகம் உந்தி அருவி
விலங்கல் மிசைஇழிவ தொக்கும்-பலங்கனிகள்
உண்டளைந்த கோன்மகுடத் தொண்கடுக்கைத் தாதளைந்து
வண்டணைந்து சோரும் மதம். 17

**கட்டளைக் கலித்துறை**

மதந்தந்த மென்மொழி மாமலை யாட்டி மடங்கல்கொன்ற
மதந்தந்த முக்கண் ணரற்குமுன் ஈன்றவம் மாமலைபோல்
மதந்தந்த கும்பக் குழவிமந் தாரப்பொன் னாட்டிருந்து
மதந்தந்த செம்மலன் றோவையம் உய்ய வளர்கின்றதே. 18

**அகவல்**

வளர்தரு கவட்டின் கிளரொளிக் கற்பகப்
பொதும்பர்த் தும்பி ஒழிகின் றோச்சும்
பாரிடைக் குறுநடைத் தோடி ஞாங்கர்
இட்ட மாங்கனி
முழுவதும் விழுங்கி முளைப்பனைத் தடக்கை
எந்தை அல்லது மற்றி யாவுள
சிந்தை செய்யுந் தேவதை நமக்கே. 19

**வெண்பா**

கேளுற்றி யான்தளர ஓட்டுமே கிம்புரிப்பூண்
வாளுற்ற கேயூர வாளரக்கர்-தோளுற்

றுத்தெறிந்து கொன்றழித்த அங்கயங்கண் மீண்டே
இறுத்தெறிந்து கொன்றழித்த ஏறு. 20

**கட்டளைக் கலித்துறை**

ஏறு தழீஇயவெம் புத்தேள் மருகஎங் குந்தவள
நீறு தழீஇயஎண் தோளவன் செல்வவண் டுண்ணநெக்க
ஆறு தழீஇ யகரதலத் தையநின் றன்னைஅல்லால்
வேறு தழீஇத்தொழு மோவணங் காத வியன்சிரமே. 21


**அகவல்**

சிரமே, விசும்பு போத உயரி இரண்டசும்புபொழி யும்மே
கரமே, வரைத்திரண் முரணிய விரைத்து விழும்மே
புயமே, திசைவிளிம்பு கிழியச் சென்றுசெறிக் கும்மே
அடியே, இடுந்தொறும் இவ்வுல கம்பெய ரும்மே
ஆயினும், அஞ்சுடர்ப் பிழம்பு தழீஇ
நெஞ்சகத் தொடுங்குமோ நெடும்பணைச் சூரே. 22

**வெண்பா**

சூர்தந்த பொற்குவட்டின் சூளிகையின் வானயிர்த்து
வார்தந் தெழுமதியம் மன்னுமே-சீர்தந்த
மாமதலை வான்மதியங் கொம்பு வயிறுதித்த
கோமதலை வாண்மதியங் கொம்பு. 23

*திருச்சிற்றம்பலம்*



**சாவகத்திலும் யப்பானிலும் விநாயகர்**

*நம்பியாண்டார் நம்பி அருளிச் செய்த*
*திருநாரையூர்*

# விநாயகர் திருவிரட்டை மணிமாலை

*திருச்சிற்றம்பலம்*

என்னை நினைந்தடிமை கொண்டென் இடர்கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான்-புன்னை
விரசுமகிழ் சோலைவியன் நாரையூர் முக்கண்
அரசுமகிழ் அத்திமுகத் தான். 1

முகத்தாற் கரியன்என் றாலும் தனையே முயன்றவர்க்கு
மிகத்தான் வெளியனென் றேமெய்ம்மை உன்னும் விரும்படியார்
அகத்தான் திகழ்திரு நாரையூர் அம்மான் பயந்தஎம்மான்
உகத்தா னவன்றன் உடலம் பிளந்த ஒருகொம்பனே. 2

கொம்பனைய வள்ளி கொழுநன் குறுகாமே
வம்பனைய மாங்கனியை நாரையூர்-நம்பனையே
தன்னவலஞ் செய்துகொளுந் தாழ்தடக்கை யாயென்நோய்
பின்னவலஞ் செய்வதெனோ பேசு. 3

பேசத் தகாதெனப் பேயெரு தும்பெருச் சாளியும்என்
றேசத் தகும்படி ஏறுவ தேஇமை யாதமுக்கட்
கூசத் தகுந்தொழில் நுங்கையும் நுந்தையும் நீயும்இந்தத்
தேசத் தவர்தொழு நாரைப் பதியுட் சிவக்களிறே. 4

களிறு முகத்தவனாய்க் காயஞ்செந் தீயின்
ஒளிறும் உருக்கொண்ட தென்னே-அளறுதொறும்
பின்னாரை யூர்ஆரல் ஆரும் பெரும்படுகர்
மன்னாரை யூரான் மகன். 5

மகத்தினின் வானவர் பற்கண் சிரந்தோள் நெரித்தருளும்
சுகத்தினின் நீள்பொழில் நாரைப் பதியுட் சுரன்மகற்கு
முகத்தது கைஅந்தக் கையது முக்கந்த மூக்கதனின்
அகத்தது வாய்அந்த வாயது போலும் அடுமருப்பே. 6

மருப்பைஒரு கைக்கொண்டு நாரையூர் மன்னும்
பொருப்பைஅடி போற்றத் துணிந்தால்-நெருப்பை
அருந்தஎண்ணு கின்றஎறும் பன்றே அவரை
வருந்தஎண்ணு கின்ற மலம். 7

மலஞ்செய்த வல்வினை நோக்கி உலகை வலம்வருமப்
புலஞ்செய்த காட்சிக் குமரற்கு முன்னே புரிசடைமேற்
சலஞ்செய்த நாரைப் பதிஅரன் றன்னைக் கனிதரவே
வலஞ்செய்து கொண்ட மதக்களி றேஉன்னை வாழ்த்துவனே. 8

வனஞ்சாய வல்வினைநோய் நீக்கி வனசத்
தனஞ்சாய லைத்தருவா னன்றோ-இனஞ்சாயத்
தேரையூர் நம்பர்மகன் திண்டோள் நெரித்தருளும்
நாரையூர் நம்பர்மக னாம். 9

நாரணன் முன்பணிந் தேத்தநின் றெல்லை நடாவியவத்
தேரண வுந்திரு நாரையூர் மன்னு சிவன்மகனே
காரண னேஎம் கணபதி யேநற் கரிவதனா
ஆரண நுண்பொரு ளேஎன் பவர்க்கில்லை அல்லல்களே. 10

அல்லல் களைந்தான்றன் அம்பொன் உலகத்தின்
எல்லை புகுவிப்பான் ஈண்டுழவர்-நெல்லல்களை
செங்கழுநீர் கட்குந் திருநாரை யூர்ச்சிவன்சேய்
கொங்கெழுதார் ஐங்கரத்த கோ. 11

கோவிற் கொடிய நமன்தமர் கூடா வகைவிடுவன்
காவிற் றிகழ்திரு நாரைப் பதியிற் கரும்பனைக்கை
மேவற் கரிய இருமதத் தொற்றைமருப் பின்முக்கண்
ஏவிற் புருவத் திமையவன் றான்பெற்ற யானையையே. 12

யானேத் தியவெண்பா என்னை நினைந்தடிமை
தானே சனார்த்தனற்கு நல்கினான்-தேனே
தொடுத்தபொழில் நாரையூர்ச் சூலம் வலன்ஏந்தி
எடுத்த மதமுகத்த ஏறு. 13

ஏறிய சீர்வீ ரணக்குடி ஏந்திழைக் கும்மிருந்தேன்
நாறிய பூந்தார்க் குமரற்கும் முன்னினை நண்ணலரைச்
சீறிய வெம்பணைச் சிங்கத்தி னுக்கிளை யானைவிண்ணோர்
வேறியல் பாற்றொழு நாரைப் பதியுள் விநாயகனே. 14

கனமதில்சூழ் நாரையூர் மேவிக் கசிந்தார்
மனமருவி னான்பயந்த வாய்ந்த-சினமருவு
கூசாரம் பூண்டமுகக் குஞ்சரக்கன் றென்றார்க்கு
மாசார மோசொல்லு வான். 15

வானிற் பிறந்த மதிதவ ழும்பொழில் மாட்டளிசூழ்
தேனிற் பிறந்த மலர்த்திரு நாரைப் பதிதிகழும்
கோனிற் பிறந்த கணபதி தன்னைக் குலமலையின்
மானிற் பிறந்த களிறென் றுரைப்பரிவ் வையகத்தே. 16

வையகத்தார் ஏத்த மதில்நாரை யூர்மகிழ்ந்து
பொய்யகத்தார் உள்ளம் புகலொழிந்து-கையகத்தோர்
மாங்கனிதன் கொம்பண்டம் பாசமமு மல்குவித்தான்
ஆங்கனிநஞ் சிந்தைஅமர் வான். 17

அமரா அமரர் தொழுஞ்சரண் நாரைப் பதிஅமர்ந்த
குமரா குமரற்கு முன்னவ னேகொடித் தேர்அவுணர்
தமரா சறுத்தவன் றன்னுழைத் தோன்றின னேஎனநின்
றமரா மனத்தவர் ஆழ்நர கத்தில் அழுந்துவரே. 18

அவமதியா துள்ளமே அல்லலற நல்ல
தவமதியால் ஏத்திச் சதுர்த்தோம்-நவமதியாம்
கொம்பன் விநாயகன்கொங் கார்பொழில்சூழ் நாரையூர்
நம்பன் சிறுவன்சீர் நாம். 19

நாந்தன மாமனம் ஏத்துகண் டாய்என்றும் நாண்மலராய்
தாந்தன மாக இருந்தனன் நாரைப் பதிதன்னுளே
சேர்ந்தன னேஐந்து செங்கைய னேநின் திரண்மருப்பை
ஏந்தின னேஎன்னை ஆண்டவ னேஎனக் கென்னையனே. 20

திருச்சிற்றம்பலம்

ஔவையார் அருளிய

# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாட
பொன்அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்ப
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிறு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாஹன
இப்பொழுது என்னை ஆட்கொள்ள வேண்டி
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்து
திருந்திய முதல்ஐந் தெழுத்துத் தெளிவாய்
பொருந்தவே எந்தன் உளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைத்தான் மகிழ்ந்தெனக் கருளி
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டிஎன் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்

இன்புறு கருணையின் இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தறி வித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்
பேரா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனை கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவி லுணர்த்தி
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்து மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முகத் தூலமும் சதுர்முக சூக்ஷ்மமும்
என்முக மாக இனிதெனக் கருளி
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்தி
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கிய எந்தன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக்கு ஒன்றிட மென்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்திஎன் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்து அருள்வழி காட்டி
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டி
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி

அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்தி
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்து
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.



வல்லபை விநாயகர்

நக்கீரர் அருளிய

# ஸ்ரீ விநாயகர் அகவல்

சீர்தரு மூலச் செழுஞ்சசுடர் விளக்கே
கார்நிற மேனிக் கற்பகக் களிறே
அல்லல் வினையை யறுத்திடு ஞான
வல்லபை தன்னை மருவிய மார்பா
பொங்கர வணிந்த புண்ணிய மூர்த்தி
சங்கர னருளிய சற்குரு விநாயக!
ஏழை யடியேன் இருவிழி காண
வேழ முகமும் வெண்பிறைக் கோடும்
பெருகிய செவியும் பேழை வயிறும்
திருவளர் நுதலில் திருநீற் றழகும்
சிறுத்த கண்ணுஞ் சீதளப் பார்வையும்
நறுந்திகழ் நாசியும் நாண்மலர்ப் பாதமும்
நவமணி மகுட நன்மலர் முடியும்
கவச குண்டல காந்தியும் விளங்கச்
சிந்துரத் திலகச் சந்தனப் பொட்டும்
ஐந்து கரத்தி னழகும்வீற் றிருக்கப்
பாச வினையைப் பறித்திடு மங்குச
பாசத் தொளியும் பன்மணி மார்பும்
பொன்னா பரணமும் பொருந்துமுந் நூலும்
மின்னா மெனவே விளங்குபட் டழகும்
உந்திச் சுழியும் உரோமத் தழகும்
தொந்தி வயிறுந் துதிக்கையுந் தோன்ற
வேதனு மாலும் விமலனு மறியாப்
பாதச் சதங்கைப் பலதொனி யார்ப்பத்
தண்டைச் சிலம்புந் தங்கக் கொலுசும்
எண்டிசை மண்டல மெங்கு முழங்கத்
தொகுது துந்துமி தொந்தோ மெனவே

தகுகு திந்திமி தாள முழங்க
ஆடிய பாதம் அண்டர்கள் போற்ற
நாடிமெய் யடியார் நாளுந் துதிக்கக்
கருணை புரிந்து காட்சி தந்தருள்
இருளைக் கடிந்து எங்கும் நிறையப்
பொங்குபே ரொளியாய்ப் பொன்மலை போலத்
திங்கள் முடியான் றிருவுள மகிழ
வந்த வாரண வடிவையுங் காட்டிச்
சிந்தை தளர்ந்த சீரடி யார்க்கு
இகபர சாதன மிரண்டு முதவி
அகவினைத் துன்ப மகந்தை யறுத்து
மூலா தார முச்சுடர் காட்டி
வாலாம் பிகைதன் வடிவையுங் காட்டி
மாணிக்க மேனி மலர்ப்பதங் காட்டிப்
பேணிப் பணியப் பீஜா க்ஷரமும்
ஓமென்று உதித்த ஓங்காரத் துள்ளே
ஆமென் றெழுந்த அக்ஷர வடிவும்
இடைபிங் கலைகள் இரண்டின் நடுவே
கடைமுனை சுழிமுனைக் கபாலமுங் குறிக்கு
மண்டல மூன்றும் வாய்வோர் பத்துங்
குண்டலி யசைவிலி கூறிய நாடியும்
பூதமும் பொறியும் புகழ்குண மூன்றும்
வாதனை செய்யு மறிவையும் காட்டி
ஆறா தார அங்குச நிலையைப்
பேறாகி நின்ற பெருமையுங் காட்டிப்
பஞ்ச மூர்த்திகள் பாகத் தமர்ந்த
பஞ்சசத் திகளின் பாதமும் காட்டி
நவ்விட மௌவும் நடுவணை வீட்டில்
அவ்வு மாக்கினை அனாதி சதாசிவம்
மைவிழி ஞான மனோன்மணி பாதமும்
நைவினை நணுகா நாத கீதமும்
கண்டு வணங்கக் கண்ணைத் திறந்து
விண்டலூ மான வெளியையும் காட்டி
ஐம்பத் தோரெழுத் தக்ஷர நிலையை
இன்பச் சக்கர விதிதனைக் காட்டிப்
புருவ நடுவிணைப் பொற்கம லாசனன்
திருவிளை யாடலின் திருவடி காட்டி

நாதமும் விந்தும் நடுநிலை காட்டிப்
போத நிறைந்த பூரணங் காட்டி
உச்சி வெளிதனி லுள்ளொளி காட்டி
வச்சிரம் பச்சை மரகத முத்துப்
பவள நிறைந்த பளிங்கொளி காட்டிச்
சிவகயி லாசச் சேர்வையுங் காட்டிச்
சத்தம் பிறந்த தலத்தையுங் காட்டித்
தத்துவந் தொண்ணூற் றாறையு நீக்கிக்
கருவி கரணக் களங்க மறுத்து
மருவிய பிறவி மாயையை நீக்கி
உம்பர்கள் ரிஷிகள் ஒருவருங் காணா
அம்பர வெளியி னருளையுங் காட்டிச்
சத்தி பராபரை சதானந்தி நிராமய
நித்திய ரூபி நிலைமையுங் காட்டி
அடியவர் ஞான மமிர்தமா யுண்ணும்
வடிவை யறியும் வழிதனைக் காட்டி
நாசி நுனியில் நடக்குங் கலைகள்
வாசிவா வென்று வாங்கிப் பிடித்து
நின்மல வடிவாய் நிறுவித் தப்புறம்
வின்மய மான வித்தையுங் காட்டித்
தராதல முழுதுந் தானாய் நிறைந்த
பராபர வெளியைப் பணிந்திடக் காட்டி
என்னுட லாவி யிடம்பொரு ளியாவுந்
தன்னுடை வசமாந் தவனிலை காட்டி
நானெனு மாணவம் நாசம தாகத்
தானென வந்து தயக்கந் தீர
ஆன குருவா யாட்கொண் டருளி
மோன ஞான முழுது மளித்துச்
சிற்பரி பூரண சிவத்தைக் காண
நற்சிவ நிஷ்களி நாட்டமும் தந்து
குருவுஞ் சீஷனுங் கூடிக் கலந்து
இருவரு மொருதனி இடந்தனிற் சேர்ந்து
தானந்த மாகித் தற்பர வெளியில்
ஆனந்த போத அறிவைக் கலந்து
புவனத் தொழிலைப் பொய்யென் றுணர்ந்து
மவுனமுத் திரையை மனத்தினி லிருத்திப்
பெண்டு பிள்ளை பண்டு பதார்த்தங்

கண்டது மாயைக் கனவெனக் காட்டிப்
பாச பந்தப் பவக்கடல் நீக்கி
ஈச னிணையடி யிருத்தி மனத்தே
நீயே நானாய் நானே நீயாய்
காயா புரியைக் கனவென வுணர்ந்து
எல்லா முன்செய லென்றே யுணர
நல்லா யுன்னருள் நாட்டந் தருவாய்
காரண குருவே கற்பகக் களிறே
வாரண முகத்து வள்ளலே போற்றி
நித்திய பூஜை நைவேத் தியமும்
பத்தியாய்க் கொடுத்தேன் பரமனே போற்றி!
ஏத்தி யனுதின மெளியேன் பணியக்
கூற்றினை யுதைத்துக் குளிர்பதந் தந்து
ஆசு மதுர வமிர்த மளித்துப்
பேசு ஞானப் பேறெனக் கருளி
மனத்தில் நினைத்த மதுர வாசகம்
நினைவினுங் கனவிலும் நேசம் பொருந்தி
அருண கிரியா ரவ்வை போலக்
கருத்து மிகுந்து கவிமழை பொழிய
வாக்குக் கெட்டா வாழ்வை அளித்து
நோக்கரு ஞான நோக்கு மளித்து
இல்லற வாழ்வை யிடையூ றகற்றிப்
புல்ல ரிடத்திற் புகுந்துழ லாமல்
ஏற்ப திகழ்ச்சி என்ப தகற்றிக்
காப்ப துனக்குக் கடன்கண் டாயே!
நல்வினை தீவினை நாடி வருகினுஞ்
செல்வினை யெல்லாஞ் செயலுன தாமால்
தந்தையும் நீயே தாயும் நீயே
எந்தையும் நீயே ஈசனும் நீயே
போத ஞானப் பொருளும் நீயே
நாதமும் நீயே நான்மறை நீயே
அரியும் நீயே அயனும் நீயே
திரிபுர தகனஞ் செய்தவன் நீயே
சத்தியும் நீயே சதாசிவம் நீயே
புத்தியும் நீயே புராந்தகன் நீயே!
பத்தியும் நீயே பந்தமும் நீயே
முத்தியும் நீயே மோட்சமும் நீயே

ஏகமும் நீயே என்னுயிர் நீயே
தேகமும் நீயே தேவனும் நீயே!
உன்னரு ளன்றி உயிர்த்துணை காணேன்
பின்னொரு தெய்வம் பேசவு மறியேன்
வேதனை கொடுத்த மெய்யிது தன்னில்
வாத பித்தம் வருத்திடு சிலேத்துமம்
மூன்று நாடியும் முக்குண மாகித்
தோன்றும் வினையின் துன்ப மறுத்து
நாலா யிரத்துநா னூற்றுநாற் பத்தெண்
மேலாம் வினையை மெலியக் களைந்து
அஞ்சா நிலைமை யருளிய நித்தன்
பஞ்சா க்ஷரநிலை பாலித் தெனக்குச்
செல்வமுங் கல்வியும் சீரும் பெருக
நல்வர மேதரும் நால்மறை விநாயகா!
சத்திய வாக்குச் சத்தா யுதவிப்
புத்திர னேதரும் புண்ணிய முதலே
வெண்ணீ றணியும் விமலன் புதல்வா
பெண்ணா முமையாள் பெற்றிடுந் தேவே!
அரிதிரு மருகா அறுமுகன் துணைவா
கரிமுக வாரணக் கணபதி சரணம்
குருவே சரணம் குணமே சரணம்
பெருவயிற் றோனே பொற்றாள் சரணம்!
கண்ணே மணியே கதியே சரணம்
விண்ணே யொளியே வேந்தே சரணம்!
மானத வாவி மலர்த்தடத் தருகில்
தானத்தில் வாழும் தற்பரா சரணம்!
உச்சிப் புருவத் துதித்துல களிக்குஞ்
சச்சிதா னந்த சற்குரு சரணம்
விக்கிந விநாயகா தேவே ஓம்
ஹர ஹர ஷண்முக பவனே ஓம்
சிவசிவ மஹா தேவ சம்போ ஓம்!!

**(நல்லனவெல்லாம் தரும்) நக்கீரர் அருளிய**
**திரு விநாயகர் திருவகவல்**
**நிறைவுற்றது.**

# கணேச புஜங்கம்

களத்தாந கண்டம் மிளத் ப்ருங்க ஷண்டம்
சலச்சாரு சுண்டம் ஜகத்ராண சௌண்டம்
லஸத்தாந்த காண்டம் விபத் பங்க சண்டம்
சிவப்ரேம பிண்டம் பஜே வக்ரதுண்டம் 1

ரணத்க்ஷுத்ர கண்டாநி நாதாபிராமம்
சலத்தாண்ட வோத்தண்ட சுண்டாக்ரதண்டம்
லஸத்துந்திலாங்கோ பரிவ்யான ஹாரம்
கணாதீசமீ சாநஸூநும் தமீடே 2

த்வநத் தம்ஸவீ ணாலயோல்லாஸி வக்த்ரம்
ஸ்புரச் சுண்டதண்டோல்லஸத் பீஜபூரம்
களத்தர்ப ஸௌகந்த்ய லோலாளிமாலம்
கணாதீச மீசாநஸூநும் தமீடே 3

சகாஸஜ்ஜபாரக்த ரத்நப்ரஸூந
ப்ரவாள ப்ரபாதாருணஜ்யோதி ரேகம்
ப்ரலம்போதரம் வக்ர துண்டைகதந்தம்
கணாதீசமீசாந ஸூநும் தமீடே 4

விசித்ரஸ் புரத்ரத்ந மாலாகிரீடம்
கிரீடோல்லஸச் சந்த்ரரேகா விபூஷம்
விபூஷைகபூஷம் பவத்வம்ஸ ஹேதும்
கணாதீச மீசாநஸூநும் தமீடே. 5

உதஞ்சத் புஜாவல்லரீ த்ருஸ்யமூலோ
ல்லஸத் ப்ரூலதா விப்ரமப் ராஜதக்ஷம்
மருத்ஸூந்தரீ சாமரை: ஸேவ்யமாநம்
கணாதீச மீசாநஸூநும் தமீடே 6

ஸ்புரந்நிஷ்டுரோலோல பீங்காக்ஷி தாரம்
க்ருபாகோம லோதார லீலாவதாரம்
கலாபிந்து மார்கஸ்த யோகீந்த்ர வந்த்யம்
கணாதீச மீசாநஸூநும் தமீடே 7


யமேகாக்ஷரம் நிர்மலம் நிர்விகல்பம்
குணாதீதமாநந்த மாகார சூன்யம்
ச்ருதே: பாரமோங்காரரூபம் ச தீரா
வதந்தி ப்ரகல்பம் புராணம் தமீடே 8

சிதாநந்த ஸாந்த்ராய சாந்தாய துப்யம்
நமோ விச்வகர்த்ரே விச்வ ப்ரஹர்த்ரே
நமோநந்தலீ லாய கைவல்ய பாஸே
நமோவிச்வ பீஜ ப்ரஸீதே ச ஸூநோ 9

இமம் ஸூஸ்தவம் ப்ராதருத்தாய பக்த்யா
படேத் யஸ்து மர்த்யோ லபேத் ஸர்வகாமாந்
கணேச ப்ராஸாதேந ஸத்த்யந்திவாசோ
கணேச ப்ரஸந்நே விபௌள துர்லபம் கிம். 10



சக்தி கணபதி



பஞ்சமுக கணபதி

# விநாயகர் கவசம்

**காசிப முனிவர்**

**(தமிழில் கச்சியப்ப சுவாமிகள்)**

வளர்ச்சிகையைப் பராபரமாய் வயங்குவிநா
யகர்காக்க; வாய்ந்த சென்னி
அளவுபடா அதிகசவுந் தரதேகம்
மதோற்கடர்தாம் அமர்ந்து காக்க;
விளரறநெற் றியைஎன்றும் விளங்கியகா
சிபர்காக்க; புருவம் தம்மைத்
தளர்வில் மகோதரர்காக்க; தடவிழிகள்
பால சந்திரானார் காக்க 1

கவின் வளரும் அதரங்கச முகர்காக்க;
தால் அங்கணக் கிரீடர் காக்க;
நலில் சிபுகம் கிரிசைசுதர் காக்க; நனி
வாக்கைவிநா யகர்தாம் காக்க;
அவிர் நகைதுன் முகர்காக்க; அள்ளெழிற்செஞ்
செவிபாச பாணி காக்க;
தவிர்தலுறா திளங்கொடிபோல் வளர்மணிநா
சியைச் சிந்தி தார்த்தர் காக்க; 2

காமருபூ முகந்தன்னைக் குணேசர்நனி
காக்க; களங்கணேசர் காக்க
வாமமுறும் இருதோளும் வயங்குகந்த
பூர்வசர் தாம் மகிழ்ந்து காக்க;
ஏமமுறு மணிமுலைவிக் கினவிநா
சன்காக்க; இதயந் தன்னைத்
தோமகலுங் கணநாதர் காக்க; அகட்
டினைத் துலங்கே ரம்பர் காக்க; 3

பக்கமிரண் டையுந்தரா தரர்காக்க;
பிருட்டத்தைப் பாவம் நீக்கும்
விக்ககினக வன்காக்க; விளங்கிலிங்கம்
வியாளபூ டணர்தாம் காக்க;
தக்குய்யந் தன்னைவக் கிரதுண்டர்
காக்க; சகனத்தை அல்லல்
உக்ககண பன்காக்க; ஊருவைமங்
களமூர்த்தி உவந்து காக்க; 4

தாழ்முழந்தாள் மகாபுத்தி காக்க; இரு
பதம் ஏக தந்தர் காக்க;
வாழ்கரம்கிப் பிரப்பிரசா தனர்காக்க;
முன்கையை வணங்குவார் நோய்
ஆழ்தரச்செய் ஆசாபூ ரகர்காக்க;
விரல்பதும அத்தர் காக்க;
கேழ்கிளரும் நகங்கள்விநா யகர்காக்க;
கிழக்கினிற்புத் தீசர் காக்க 5

அக்கினியில் சித்தீசர் காக்க;
உமாபுத்திரர் தென்திசை காக்க;
மிக்மநிரு தியிற்கணே சுரர்காக்க;
விக்கினவர்த் தனர்மேற் கென்னுந்
திக்கதனிற் காக்க; வாயுவிற்கசகன்
னர்காக்க; திகழ்உ தீசி
தக்கநிதி பன்காக்க; வடகிழக்கில்
ஈசநந் தன்ரே காக்க; 6

ஏகதந்தர் பகல்முழுதும் காக்க; இர
வினும்சந்தி இரண்டன் மாட்டும்
ஓகையின்விக் கினகிருது காக்க; இராக்
கதர்பூதம் உறுவே தாளம்
மோகினிபேய் இவையாதி உயிர்த்திற த்தால்
வருந்துயரும், முடிவி லாத
வேகமுறு பிணிபலவும் விலக்குபு பா
சாங்குசர்தாம் விரைந்து காக்க; 7

மதி,ஞானம், தவம்,தானம், மானம்,ஒளி,
புகழ்,குலம், வண்சரீரம், முற்றும்
பதிவான தனம்,தானி யம்,கிரகம்
மனைவி,மைந்தர், பயில்நட் பாதிக்
கதியாவும் கலந்துசர்வா யுதர்காக்க;
காமர்பவுத் திரர்முன் னான
விதியாரும் சுற்றமெலாம் மயூரேசர்
எஞ்ஞான்றும் விரும்பிக் காக்க 8

வென்றி, சீவிதங் கபிலர் காக்க;கரி
யாதியெலாம் விகடர் காக்க;
என்றிவ்வா றிதுதனைமுக் காலமும்
ஓதிடின் நும்பால் இடையூ றொன்றும்
ஒன்றுறா; முனிவரர்கள்; அறிமின்கள்;
யார் ஒருவர் ஓதினாலும்
மன்றவாங் கவர்தேகம் பிணியற;வச்
சிரதேகம் ஆகி மன்னும். 9



மூஷிக கணபதி

அருணகிரிநாத சுவாமிகள்

# திருப்புகழும் விநாயகரும்

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவ
கற்பகம் எனவினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புள மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகெட சுப்பிர மணிபடும்
அப்புனம் அதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே!

உம்பர்தரு தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலில் தேனமுதத் துணர்வூறி
இன்பரசத்தே பருகப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே!

பக்கரை விசித்ர மணி பொற்கலணையிட்ட நட
பக்ஷியெனு முக்ரதுர கமுநீபப்

பக்குவம லர்த்தொடையும் அக்குவடு புக்கொர்தொளை
    பட்டுருவ விட்டருள் கை வடிவேலும்
திக்கதும திக்கவரு குக்குடமும் ரக்ஷைதரு
    சிற்றடியு முற்றியபன் னிருதோளும்
செய்ப்பதியும் வைத்துயர் திருப்புகழ்வி ருப்பமொடு
    செப்பெனஎ னக்கருள்ஸக மறவேனே
இக்கவரை நற்கனிகள் சர்க்கரைப ருப்புடன் நெய்
    எள்பொரிய வல்துவரை இளநீர் வண்
டெச்சில் பய றப்பவகை பச்சரிசி பிட்டுவெள
    ரிப்பழ மிடிப்பல் வகை தனிமூலம்
மிக்கஅடி சிற்கடலை பக்ஷணமெனக்கொளொரு
    விக்கினச மார்த்தனெனும் அருளாழி
வெற்பகுடி லச்சலடி விற்பரம ரப்பரருள்
    வித்தகம ருப்புடைய பெருமாளே

விடமடைசு வேலை அமரர் படை சூலம்
    விசையன் விடு பாணம் எனவேதான்
விழியுமதி பார தனமுமுடை மாதர்
    விழியின் விளை வேதும் அறியாதே
கடியுலவு பாயல் பகலிரவெனாது
    கலவிதனில் மூழ்கி வறிதாய
கயவனறி வீனனிவனுமுயர் நீடு
    கழலிணைகள் சேர அருள்வாயே
இடையர் சிறு பால்நெய் திருடிநெடி தேக
    இறைவன் மகள் வாய்மை அறியாதே
இதய மிக வாடி உடைய பிளைநாத
    கணபதி யெனாமும் முறைகூற
அடைய லவ ராவிவெருவ அடிகூர
    அசலு மறி யாமல் அவரோட
அகல்வதென டாசொ லெனவுமுடிசாட
    அறிவருளும் ஆனை முகவோனே

நினது திருவடி சத்தி மயிற் கொடி
  நினைவு கருதிடு புத்தி கொடுத்திட
    நிறைய அமுதுசெய் முப்பழம் அப்பமும்
      நிகழ்பால்தேன்

நெடிய வளைமுறி இக்கொடு லட்டுகம்
நிரவில் அரிசிப ருப்பவல் எள்பொரி
நிகரில் இனிகத லிக்கனி வர்க்கமும் இளநீரும்
மனது மகிழ்வொடு தொட்ட கரத்தொரு
மகர சலநிதி வைத்தது திக்கர
வலிய கரிமுக ஒற்றை மருப்பனை வலமாக
மருவு மலர்புனை தொத்திர சொற்கொடு
வளர்கை குழைபிடி தொப்பண குட்டொடு
வனச புரிபுர பொற்பத அர்ச்சனை மறவேனே
தெனன தெனதென தெத்தனெ னப்பல
சிறிய அறுபத மொய்த்து திரப் புனல்
திரளு முறுசதை பித்த நிணக் குடல்செறிமூளை
செரும வதரநி ரப்புசெ ருக்குட
னிரைய விரவநி றைத்த களத்திடை
திமித திமிதிமி மத்தளி டக்கைகள் செகசேசே
எனவெ துகுதுகு துத்தென வொத்துகள்
துடிக ளிடிமிக வொத்துமு ழக்கிட
டிமுட டிமுடிமு டிட்டிமெனத்தவில்எழு மோசை
இகலி யலகைகள் கைப்பறை கொட்டிட
இரண பயிரவி சுற்றுந டித்திட
எதிரும் நிசிசர ரைப் பலியிட்டருள்—பெருமாளே

**அருணகிரியாரருளிய திருப்புகழும் விநாயகரும்**
**நிறைவுற்றது**



## சீனாவில் விநாயகர்

*இராமலிங்க சுவாமிகள் அருளிய*

# திரு அருட்பாவும் விநாயகரும்

முன்னவனே யானை முகத்தவனே முத்திநலம்
சொன்னவனே தூய்மெய்ச் சுகத்தவனே-மன்னவனே
சிற்பரனே ஐங்கரனே செஞ்சடையஞ் சேகரனே
தற்பரனே நின்தாள் சரண்.

உலகெலாந் தழைப்ப வருன்மத வருவி
ஒழுகுமா முகமும் ஐங்கரமும்
இலகு செம்மேனிக் காட்சியும் இரண்டோடு
இரண்டன ஓங்கு திண்டோளுந்
திலகா வாணுதலார் சித்தி புத்திகளைச்
சேர்த்தணைத் திடும்இரு மருங்கும்
விலகுறா தெளியேன் விழைந்தனன் சித்தி
விநாயக விக்கினேச் சுரனே! 1

நாதமுங் கடந்து நிறைந்து நின்மயமே
நானென அறிந்துநான் தானாய்
பேதமுங் கடந்த மௌன ராச்சியத்தைப்
பேதையேன் பிடிப்பதெந் நாளோ?
ஏதமுஞ் சமய வாதமும் விடுத்தோர்
இதயமும் ஏழையேன் சிரமும்
வேதமுந் தாங்கும் பாதனே சித்தி
விநாயக விக்கினேச் சுரனே!

கானல் நீர்விழைந்த மானென வுலகக்
கட்டினை நட்டுழன் றலையும்
ஈன வஞ்சக நெஞ்சகப் புலையேனை
யேன்று கொண்டரு நாளுளதோ?
ஊனமொன் றில்லா உத்தம ருள்ளத்தே
ஓங்குசீர்ப் பிரணவ வொளியே

வேனவில் கரத்தோர்க் கினியவா சித்தி
விநாயக விக்கினேச் சுரனே! 3

முன்னருந் தவத்தோன் முற்கலன் முதலா
முனிவர்கள் இனிது வீடடைய
இன்னருள் புரியு நின்னருட் பெருமை
இரவினும் பகலினும் மறவேன்,
என்னரும் பொருளே என்னுயிர்க் குயிரே
என்னர சே!என துறவே
மன்னரு நெறியின் மன்னிய வறிவே
வல்லபைக் கணேச மாமணியே! 4

திருவுங் கல்வியுஞ் சீருஞ் சிறப்புமுன்
திருவடிப் புகழ்பாடுந் திறமும்நல்
உருவுஞ் சீலமும் ஊக்கமுந் தாழ்வுறா
உணர்வுந் தந்தென துள்ளத் தமர்ந்தவா
குருவுந் தெய்வமு மாகி அன்பாளர்தங்
குறைதவிர்க்குங் குணப்பெருங் குன்றமே
வெருவுஞ் சிந்தை விலகக் கஜானனம்
விளங்குஞ் சித்தி விநாயக வள்ளலே! 5

சீத நாண்மலர்ச் செல்வனு மாமலர்ச்
செல்வீமார்பகச் செல்வனுங் காண்கிலாப்
பாத நாடொறுப் பற்றறப் பற்றுவோர்
பாத நாடப் பரிந்தருள் பாலிப்பாம்
நாத நாடிய வந்தத் திலோங்குமெய்ஞ்
ஞான நாடாக நாயக நான்கெனும்
வேத நாடிய மெய்ப்பொருளே யருள
விளங்குஞ் சித்தி விநாயக வள்ளலே! 6

தஞ்ச மென்றுனைச் சார்ந்தன னெந்தைநீ
தானு மிந்தச் சகத்தவர் போலவே
வஞ்ச மெண்ணி இருந்திடில் என்செய்வேன்?
வஞ்சமற்ற மனத்துறை அண்ணலே
பஞ்ச பாதகந் தீர்த்தனை என்றுநின்
பாதபங்கயம் பற்றினன் பாவியேன்
விஞ்ச நல்லருள் வேண்டித் தருதியோ
விளங்குஞ் சித்தி விநாயக வள்ளலே! 7

கள்ள நெஞ்சகன் ஆயினும் ஐயநான்
கள்ளமின்றிக் கழறுகின் றேன்எனது
உள்ள நின்றிரு வுள்ளம் அறியுமே
ஓதுகின்ற தென்போது கழித்திடேல்
வள்ள மாமலர்ப் பாதப் பெரும்புகழ்
வாழ்த்தி நாத்தழும்பேற வழங்குவாய்
வெள்ள வேணிப் பெருந்தகை யேஅருள்
விளங்குஞ் சித்தி விநாயக வள்ளலே! 8

மண்ணி லாசையை மயக்கற வேண்டிய
மாதவர்க் குமதிப் பரியாயுனை
எண்ணிலார்ச் சிறியேனையு முன்னின்றே
யேன்றுகொண்டனை இன்று விடுத்தியோ
உன்னி லாவிய நின்றிரு வுள்ளமும்
ஆசையோ டுவர்ப்புங்கொள வெண்ணுமோ
வெண்ணிலா முடியு புண்ணிய மூர்த்தியே
விளங்குஞ் சித்தி விநாயக வள்ளலே! 9

ஆணிலே யன்றி ஆருயிர் பெண்ணிலே
அலியிலே இவ்வடியானைப் போலவே
காணி லேன்ஒரு பாவியை இப்பெருங்
கள்ள நெஞ்சகக் கடையனை ஆளையா
ஏணிலே யிடரெய்த விடுத்தியேல்
என்செய்கேன் இனிஇவ்வுல கத்திலே
வீணி லேயு ழைப்பே னருளையனே
விளங்குஞ் சித்தி விநாயக வள்ளலே! 10

நாவி னாலுனை நாடொறும் பாடுவார்
நாடுவார் தமைநண்ணிப் புகழவும்
ஒய்வி லாதுனைப் பாடவுந் துன்பெலாம்
ஓடவும் மகிழ்ோங்கவுஞ் செய்குவாய்
காவி நேர்களத் தான்மகிழ் ஐங்கரக்
கடவுளே நற்கருங்குழி யென்னுமூர்
மேவி யன்பர்க் கருள்கண நாதனே
விளங்குஞ் சித்தி விநாயக வள்ளலே! 11

**திரு அருட்பாவும் — விநாயகரும் நிறைவுற்றது.**

## போற்றித் திரு அகவல்


அருள்புரிந்து அருளும் அரசே போற்றி
இருவினை துடைக்கும் இறைவா போற்றி
மறைமுனி ஒருவன் மாங்கனி கொணர்ந்து
கறைமிடற்று இறைவன் கையில் கொடுப்ப
வேலனும் நீயும் விரும்பி முன்நிற்ப
ஒருநொடி அதனில் உலகெலாம் வலமாய்
வரும்அவர் தமக்கு வழங்குவோம் யாம்என
விரைவுடன் மயில்மிசை வேலோன் வருமுனர்
அரனை வலம்வந்து அக்கனி வாங்கிய
விரகுள விக்கின விநாயக போற்றி
முன்னடி தெரியா முதல்வனைப் போற்றிப்
பின்னடி தெரியாப் பெருங்கவிப் பெருமான்
மண்மிசை வைத்துஉனை வாவியில் செல்லக்
கண்ணிலான் இவனெனக் கரந்துஅவன் போக
கரைமிசை ஏறிக் காணாது இரங்கி
உரைதடு மாறி உள்ளம் கலங்கிக்
கூகூ கணபதி கூகூ என்னக்
கூகூ என்றருள் குன்றே போற்றி
அப்பணி சடையோன் முப்புரம் எரிக்க
இப்புவி அதனை இரதம் ஆக்கித்
தினகரன் மதிதேர்ச் சில்இல தாகப்
பொருவரு மறைகளே புரவி யாகச்
சங்கைசேர் நான்முகன் சாரதி யாகப்
பங்கயக் கண்ணன் பகழி யாக
மலைசிலை யாக வாசுகி நாணா
நிலைபெற நிற்கும் நெடுந்தேர் தன்னில்
விக்கினம் தீர்க்கும் விநாயக நமஎனச்

சிக்கென இறைவன் செப்பா தேறலின்
தச்சுறச் சமைத்த தகைமணி நெடுந்தேர்
அச்சறுத்து அருளும் அரசே போற்றி
வேதப் பொருளாம் விமலா போற்றி
பூதப் படையுடைப் புனிதா போற்றி
கரமைந்து உடைய களிறே போற்றி
பரமன் பயந்த பாலா போற்றி
அகிலம் ஈன்று அருளும்அம்மை தமக்குத்
திருமகன் ஆகிய செல்வா போற்றி
அற்றவர்க்கு அருள்புரி அரசே போற்றி
கற்றவர் மனத்திற் காண்பாய் போற்றி
பாசாங் குசம்கை பரித்தாய் போற்றி
தேசார் மணிமுடித் தேவே போற்றி
எழுநரகு எழுபிறப்பு அறுப்பாய் போற்றி
எழுமையும் எமக்குஇங்கு இரங்குவாய் போற்றி
துளைசெறி வக்கிர துண்டா போற்றி
வளநிகர் ஒற்றை மருப்பா போற்றி
சுரர்தொழும் முருகன் துணைவா போற்றி
நல்லவர் புகழும் நம்பா போற்றி
வல்லபைக்கு உரிய மணாளா போற்றி
கயமுகத்து அவுணனைக் காய்ந்தாய் போற்றி
வயமுக மூஷிக வாகனா போற்றி
ஓங்கா ரத்தனி உருவே போற்றி
நீங்காக் கருணை நிமலா போற்றி
துறவர் தமக்குஒரு துணைவா போற்றி
முறநிகர் தழைசெவி முதல்வா போற்றி
துண்டமா மதிபோல் துலங்கிய கோட்டைக்
கண்டகம் ஆகக் கைதனில் பிடித்துப்
பண்டு பாரதப் பழங்கதை பசும்பொன்
விண்டுவில் வரைந்த விமலா போற்றி
போற்றி போற்றியுன் பொற்பதம் போற்றி.

## வருக்கைக் கோவை

அன்புடைக் கடவுளர்க்கு அதிபதி செயசெய
ஆபத்து அகற்றும் ஐங்கர செயசெய
இந்துச் சடைமுடி இறைவா செயசெய
ஈசன் பெற்ற எம்மான் செயசெய
உன்னிய முடிக்கும் ஒருவா செயசெய
ஊர்மனை சந்தி உகந்தாய் செயசெய
எம்பெரு மானே ஏகனே செயசெய
ஏழுல குந்தொழ இருப்பாய் செயசெய
ஐயா கணங்கட்கு ஆதீ செயசெய
ஒற்றை மருப்பை உடையாய் செயசெய
ஓங்கிய கரிமுகம் உற்றாய் செயசெய
ஔவியம் இல்லா தவனே செயசெய
அ,ஃகர அணிந்த ஆதீ செயசெய
கண்மூன்று உடைய களிறே செயசெய
ஙப்போல் மழுஒன்று ஏந்தீ செயசெய
சங்கரன் தேரச் சறுத்தாய் செயசெய
ஞயமுடை வித்தக நம்பீ செயசெய
இ,டமுடை விக்கி னேசுரா செயசெய
இ,ணங்கிய அன்பர்க்கு இனியாய் செயசெய
தத்துவம் உறைதரு சாமீ செயசெய
நன்னெறி வித்தக நம்பீ செயசெய
பகீரதிக்கு இனிய பாலா செயசெய
மன்றுள் ஆடி மகனே செயசெய
இ,யக்கரைக் களையும் இறைவா செயசெய
அ,ரவக் கிங்கிணி அணிவாய் செயசெய
இ,லகக் கொம்பு ஒன்று ஏந்தீ செயசெய
வஞ்சனைப் பழவினை மாற்றுவாய் செயசெய

அ,ழகிய வேலனுக்கு அண்ணா செயசெய
இ,ளமத யானை முகத்தாய் செயசெய
இ,றக்கரி சாடும் இறைவா செயசெய
அ,னந்தல் ஆடும் அரசே செயசெய
கரமைந்து' உடைய கணபதி செயசெய
காமன் பகைவன் காதல செயசெய
கிரியில் பாரதம் தீட்டினாய் செயசெய
கீழ்மை ஒழித்துக் கிளர்வாய் செயசெய
குண்டப் பண்டிக் குருவே செயசெய
கூறிய மும்மதக் கோவே செயசெய
கெண்டையம் கண்ணுமை மகனே செயசெய
கேதார ப்ரியம் ஆனாய் செயசெய
கையில் சக்கரம் உடையாய் செயசெய
கொவ்வைக் கனிவாய் மதலாய் செயசெய
கோலக் குடநிகர் வயிற்றாய் செயசெய
கௌவைப் பழவினை தீர்ப்பாய் செயசெய.



**பஞ்சபூத கணபதி**

*மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின்*

## விநாயகர் நான்மணி மாலை

### வெண்பா

சக்திபெறும் பாவாணர் சாற்றுபொருள் யாதெனினும்
சித்திபெறச் செய்வாக்கு வல்லமைக்கா—அத்தனே
நின்றனக்குக் காப்புரைப்பார் நின்மீது செய்யுநூல்
இன்றிதற்குங் காப்புநீ யே. 1

### கலித்துறை

நீயே சரண நினதருளே சரணஞ் சரணம்
நாயேன் பலபிழை செய்து களைத்துனை நாடிவந்தேன்
வாயே திறவாத மௌனத் திருந்துன் மலரடிக்குத்
தீயே நிகர்த்தொளி வீசுந் தமிழ்க்கவி செய்குவனே. 2

### விருத்தம்

செய்யுந் தொழிலுன் தொழிலேகாண்;
சீர்பெற்றிட நீயருள் செய்வாய்,
வையந் தனையும் வெளியினையும்
வானத் தையுமுன் படைத்தவனே!
ஐயா, நான்முகப் பிரமா,
யானை முகனே, வாணிதனைக்
கையா லணைத்துக் காப்பவனே,
கமலா சனத்துக் கற்பகமே. 3

### அகவல்

கற்பக விநாயகக் கடவுளே போற்றி!
சிற்பர மோனத் தேவன் வாழ்க!
வாரண முகத்தான் மலர்த்தாள் வெல்க!
ஆரண முகத்தான் அருட்பதம் வெல்க!
படைப்புக் கிறையவன் பண்ணவர் நாயகன்

இந்திர குருஎன திதயத் தொளிர்வான்
சந்திர மவுலித் தலைவன் மைந்தன்
கணபதி தாளைக் கருத்திடை வைப்போம்;
குணமதிற் பலவாம்; கூறக் கேளீர்;
உட்செவி திறக்கும்; அகக்கண் ஒளிதரும்;
அக்கினி தோன்றும்; ஆண்மை வலியுறும்;
திக்கெலாம் வென்று ஜயக்கொடி நாட்டலாம்;
கட்செவி தன்னைக் கையிலே யெடுக்கலாம்;
விடத்தையும் நோவையும் வெம்பகை யதனையும்
துச்ச மென்றெண்ணித் துயரிலா திங்கு
நிச்சலும் வாழ்ந்து நிலைபெற் றோங்கலாம்;
அச்சந் தீரும்; அமுதம் விளையும்;
வித்தை வளரும்; வேள்வி யோங்கும்;
அமரத் தன்மையு மெய்தவும்
இங்கு நாம் பெறலாம்; இஃதுணர் வீரே. 4

**வெண்பா**

உணர்வீர் உணர்வீர் உலகத்தீ ரிங்குப்
புணர்வீர் அமருறும் போகம் — கணபதியைப்
போத வடிவாகப் போற்றிப் பணிந்திடுமின்
காதலுடன் கஞ்சமலர்க் கால். 5

**கலித்துறை**

காலைப் பிடித்தேன் கணபதி நின்பதங் கண்ணிலொற்றி
நூலைப் பலபல வாகச் சமைத்து நொடிப்பொழுதும்
வேலைத் தவறு நிகழாது நல்ல வினைகள் செய்துன்
கோலை மனமெனு நாட்டி னிறுத்தல் குறியெனக்கே. 6

**விருத்தம்**

எனக்கு வேண்டும் வரங்களை
யிசைப்பேன் கேளாய் கணபதி,
மனத்திற் சலன மில்லாமல்
மதியி லிருளே தோன்றாமல்,
நினைக்கும் பொழுது நின்மவுன
நிலைவந்திட நீசெயல் வேண்டும்,
கனக்குஞ் செல்வம் நூறுவய
திவையுந் தரநீ கடவாயே. 7

### அகவல்

கடமை யாவன தன்னைக் கட்டுதல்,
பிறர்துயர் தீர்த்தல், பிறர்நலம் வேண்டுதல்,
விநாயக தேவனாய், வேலுடைக் குமரனாய்,
நாரா யணனாய் நதிச்சடை முடியனாய்,
பிறநாட் டிருப்போர் பெயர்பல கூறி
அல்லா, யெஹோவா எனத்தொழு தன்புறும்
தேவருந் தானாய், திருமகள், பாரதி,
உமையெனுந் தேவிய ருகந்தவான் பொருளாய்,
உலகெலாங் காக்கு மொருவனைப் போற்றுதல்
இந்நான் கேயிப் பூமியி லெவர்க்கும்
கடமை யெனப்படும்; பயனிதில் நான்காம்
அறம்பொருள் இன்பம் வீடெனு முறையே
தன்னை யாளுஞ் சமர்த்தெனக் கருள்வாய்;
மணக்குள விநாயகா, வான்மறைத் தலைவா,
தனைத்தா னாளுந் தன்மைநான் பெற்றிடில்
எல்லாப் பயன்களுந் தாமே யெய்தும்;
அசையா நெஞ்ச மருள்வாய்; உயிரெலாம்
இன்புற் றிருக்க வேண்டிநின் னிருதாள்
பணிவதே தொழிலெனக் கொண்டு
கணபதி தேவா, வாழ்வேன் களித்தே. 8

### வெண்பா

களியுற்று நின்று கடவுளே யிங்குப்
பழியற்று வாழ்ந்திடக்கண் பார்ப்பாய் — ஒளிபெற்றுக்
கல்விபல தேர்ந்து கடமையெலா நன்காற்றித்
தொல்வினைக்கட் டெல்லாம் துறந்து. 9

### கலித்துறை

துறந்தார் திறமை பெரிததினும் பெரிதாகு மிங்குக்
குறைந்தாரைக் காத்தெளியார்க் குணவீந்து குலமகளும்
அறந்தாங்கு மக்களு நீடூழி வாழ்கென அண்டமெலாம்
சிறந்தாளு நாதனைப் போற்றிடுந் தொண்டர் செயுந்
தவமே. 10

### விருத்தம்

தவமே புரியும் வகை யறியேன்,
சலியாதுற நெஞ்சறியாது,
சிவமே நாடிப் பொழுதனைத்துந்
தியங்கித் தியங்கி நிற்பேனை
நவமா மணிகள் புனைந்தமுடி
நாதா, கருணா லயனே,தத்
துவமாகியதோர் பிரணவமே,
அஞ்சேல் என்று சொல்லுதியே. 11

### அகவல்

சொல்லினுக் கரியனாய்ச் சூழ்ச்சிக் கரியனாய்ப்
பல்லுரு வாகிப் படர்ந்த வான்பொருளை,
உள்ளுயி ராகி யுலகங் காக்கும்
சக்தியே தானாந் தனிச்சுடர்ப் பொருளை,
சக்தி குமாரனைச் சந்திர மவுலியைப்
பணிந்தவ னுருவிலே பாவனை நாட்டி,
ஓமெனும் பொருளை யுளத்திலே நிறுத்தி,
சக்தியைக் காக்குந் தந்திரம் பயின்று,
யார்க்கும் எளியனாய் யார்க்கும் வலியனாய்
யார்க்கும் அன்பனாய் யார்க்கு மினியனாய்
வாழ்ந்திட விரும்பினேன்; மனமே நீயிதை
ஆழ்ந்து கருதி, யாய்ந்தாய்ந்து பலமுறை
சூழ்ந்து தெளிந்துபின் சூழ்ந்தார்க் கெல்லாம்
கூறிக் கூறிக் குறைவறத் தேர்ந்து
தேறித் தேறிநான் சித்தி பெற்றிடவே,
நின்னா லியன்ற துணைபுரி வாயேல்,
பொன்னா லுனக்கொரு கோயில் புனைவேன்;
மனமே, எனைநீ வாழ்வித் திடுவாய்,
வீணே யுழலுதல் வேண்டா,
சக்தி குமாரன் சரண்புகழ் வாயே. 12

### வெண்பா

புகழ்வோங் கணபதிநின் பொற்கழலை நாளுந்
திகழ்வோம் பெருங்கீர்த்தி சேர்ந்தே — இகழ்வோமே
புல்லரக்கப் பாதகரின் பொய்யையெலாம் ஈங்கிதுகாண்
வல்லபைகோன் தந்த வரம். 13

**கலித்துறை**

வரமே நமக்கிது கண்டீர் கவலையும் வஞ்சனையும்
கரவும் புலைமை விருப்பமு மையமுங் காய்ந்தெறிந்து
''சிரமீது நங்கள் கணபதி தாண்மலர் சேர்த்தெமக்குத்
தரமேகொல் வானவர்'' என்றுளத்தே களிசார்ந்
ததுவே. 14

**விருத்தம்**

சார்ந்து நிற்பா யெனதுளமே,
சலமுங் கரவுஞ் சஞ்சலமும்
பேர்ந்து, பரம சிவாநந்தர்
பேற்றை நாடி, நாடோறும்
ஆர்ந்த வேதப் பொருள்கர்ட்டும்
ஐயன், சக்தி தலைப்பிள்ளை,
கூர்ந்த விடர்கள் போக்கிடுநங்
கோமான் பாதக் குளிர்நிழலே. 15

**அகவல்**

நிழலினும் வெயிலினு நேர்ந்தநற் றுணையாய்த்
தழலினும் புனலினு மபாயந் தவிர்த்து
மண்ணினுங் காற்றினும் வானினு மெனக்குப்
பகைமை யொன்றின்றிப் பயந்தவிர்த் தாள்வான்.
உள்ளத் தோங்க நோக்குறும் விழியும்
மௌன வாயும் வரந்தரு கையும்
உடையநம் பெருமான் உணர்விலே நிற்பான்
ஓமெனு நிலையி லொளியாத் திகழ்வான்
வேத முனிவர் விரிவாப் புகழ்ந்த
பிருஹஸ் பதியும் பிரமனும் யாவுந்
தானே யாகிய தனிமுதற் கடவுள்
யானென தற்றார் ஞானமே தானாய்
முக்தி நிலைக்கு மூல வித்தாவான்
ஸத்தெனத் தத்தெனச் சதுர்மறை யாளர்
நித்தமும் போற்று நிர்மலக் கடவுள்
ஏழையர்க் கெல்லா மிரங்கும் பிள்ளை
வாழும் பிள்ளை மணக்குளப் பிள்ளை
வெள்ளாடை தரித்த விட்டுணு வென்று
செப்பிய மந்திரத் தேவனை
முப்பொழு தேத்திப் பணிவது முறையே. 16.

### வெண்பா

முறையே நடப்பாய், முழுமூட நெஞ்சே
இறையேனும் வாடா யினிமேல் — கறையுண்ட
கண்டன் மகன்வேத காரணன் சக்திமகன்
தொண்டருக் குண்டு துணை. 17

### கலித்துறை

துணையே யெனதுயி ருள்ளே யிருந்து சுடர்விடுக்கும்
மணியே யெனதுயிர் மன்னவனே யென்றன்
வாழ்வினுக்கோர்
அணியே யெனுள்ளத்தி லாரமுதே யெனதற்புதமே
இணையே துனக்குரைப்பேன் கடைவானில்
எழுஞ்சுடரே. 18

### விருத்தம்

சுடரே போற்றி, கணத்தேவர்
துரையே போற்றி, எனக்கென்றும்
இடரே யின்றிக் காத்திடுவாய்,
எண்ணா யிரங்கால் முறையிட்டேன்,
படர்வான் வெளியிற் பலகோடி
கோடி கோடிப் பல்கோடி
இடரா தோடு மண்டலங்க
ளிசைத்தாய், வாழி யிறையவனே. 19

### அகவல்

இறைவி இறையவ னிரண்டு மொன்றாகித்
தாயாய்த் தந்தையாய் சக்தியும் சிவனுமாய்
உள்ளொளி யாகி யுலகெலாந் திகழும்
பரம்பொரு ளேயோ! பரம்பொரு ளேயோ!
ஆதி மூலமே! யனைத்தையுங் காக்கும்
தேவ தேவா, சிவனே, கண்ணா,
வேலா, சாத்தா, விநாயகா, மாடா,
இருளா, சூரியா, இந்துவே, சக்தியே,
வாணீ, காளீ, மாமக ளேயோ,
ஆணாய்ப் பெண்ணாய் அலியாய் உள்ள
தியாதுமாய் விளங்கு மியற்கைத் தெய்வமே,
வேதச் சுடரே, மெய்யாங் கடவுளே,

அபயம் அபயம் அபயநான் கேட்டேன்,
நோவு வேண்டேன், நூறாண்டு வேண்டினேன்;
அச்சம் வேண்டேன், அமைதி வேண்டினேன்;
உடைமை வேண்டேன், உன்துணை வேண்டினேன்;
வேண்டா தனைத்தையு நீக்கி
வேண்டிய தனைத்தும் அருள்வதுன் கடனே. 20

### வெண்பா

கடமைதா னேது கரிமுகனே வையத்
திடநீ யருள்செய்தா யெங்க - ளுடைமைகளு
மின்பங் களுமெல்லா மீந்தாய்நீ யாங்களுனக்
கென்புரிவோம் கைம்மா றியம்பு. 21

### கலித்துறை

இயம்பு மொழிகள் புகழ்மறை யாகு மெடுத்தவினை
பயன்படும் தேவர் இருபோதும் வந்து பதந்தருவார்,
அயன்பதி முன்னோன் கணபதி சூரியன் ஆனைமுகன்
வியன்புகழ் பாடிப் பணிவார் தமக்குறு
மேன்மைகளே. 22

### விருத்தம்

மேன்மைப் படுவாய் மனமேகேள்
விண்ணி னிடிமுன் விழுந்தாலும்
பான்மை தவறி நடுங்காதே
பயத்தா லேதும் பயனில்லை
யான்முன் னுரைத்தேன் கோடிமுறை
இன்னுங் கோடி முறைசொல்வேன்
ஆன்மா வான கணபதியின்
அருளுண் டச்ச மில்லையே. 23

### அகவல்

அச்ச மில்லை, அமுங்குத லில்லை,
நடுங்குத லில்லை, நாணுத லில்லை
பாவ மில்லை, பதுங்குத லில்லை
ஏது நேரினு மிடர்ப்பட மாட்டோம்;
அண்டஞ் சிதறினா லஞ்ச மாட்டோம்;
கடல்பொங்கி எழுந்தாற் கலங்க மாட்டோம்;

யார்க்கு மஞ்சோம், எதற்கு மஞ்சோம்;
எங்கு மஞ்சோம், எப்பொழுது மஞ்சோம்;
வான முண்டு, மாரி யுண்டு,
ஞாயிறுங் காற்றும் நல்ல நீரும்
தீயு மண்ணுந் திங்களு மீன்களும்
உடலு மறிவு முயிரு முளவே;
தின்னப் பொருளுஞ் சேர்ந்திடப் பெண்டும்
கேட்கப் பாட்டுங் காணநல் லுலகும்
களித்துரை செய்யக் கணபதி பெயரும்
என்றுமிங் குளவாம்; சலித்திடாய், ஏழை
நெஞ்சே வாழி, நேர்மையுடன் வாழி,
வஞ்சகக் கவலைக் கிடங்கொடேல் மன்னோ!
தஞ்ச முண்டு, சொன்னேன்,
செஞ்சுடர்த் தேவன் சேவடி நமக்கே. 24

**வெண்பா**

நமக்குத் தொழில்கவிதை நாட்டிற் குழைத்தல்
இமைப்பொழுதுஞ் சோரா திருத்தல்—உமைக்கினிய
மைந்தன் கணநாதன் நங்குடியை வாழ்விப்பான்;
சிந்தையே யிம்மூன்றுஞ் செய். 25

**கலித்துறை**

செய்யுங் கவிதை பராசக்தி யாலே செயப்படுங்காண்
வையத்தைக் காப்பவ ளன்னை சிவசக்தி வண்மையெலாம்
ஐயத்திலுந் துரிதத்திலுஞ் சிந்தி யழிவ தென்னே
பையத் தொழில்புரி நெஞ்சே கணாதிபன் பக்தி
கொண்டே 26

**விருத்தம்**

பக்தி யுடையார் காரியத்திற்
  பதறார், மிகுந்த பொறுமையுடன்
வித்து முளைக்குந் தன்மைபோல்
  மெல்லச் செய்து பயனடைவார்,
சக்தி தொழிலே யனைத்துமெனிற்
  சார்ந்த நமக்குச் சஞ்சலமேன்?
வித்தைக் கிறைவா, கணநாதா,
  மேன்மைத் தொ.ழிலிற் பணியெனையே. 27

### அகவல்

எனைநீ காப்பாய், யாவுமாந் தெய்வமே!
பொறுத்தா ரன்றே பூமி யாள்வார்;
யாவு நீயாயி னனைத்தையும் பொறுத்தல்
செவ்விய நெறியதிற் சிவநிலை பெறலாம்;
பொங்குதல் போக்கிப் பொறையெனக் கீவாய்;
மங்கள குணபதி மணக்குளக் கணபதி
நெஞ்சக் கமலத்து நிறைந்தருள் புரிவாய்;
அகல்விழி யுமையா ளாசை மகனே,
நாட்டினைத் துயரின்றி நன்கமைத் திடுவதும்
உள்ளமெனு நாட்டை யொருபிழை யின்றி
ஆள்வதும் பேரொளி ஞாயிறே யனைய
சுடர்தரு மதியொடு துயரின்றி வாழ்தலும்
நோக்கமாக் கொண்டு நின்பத நோக்கினேன்;
காத்தருள் புரிக கற்பக விநாயகா,
காத்தருள் புரிக கடவுளே யுலகெலாம்
கோத்தருள் புரிக குறிப்பரும் பொருளே!
அங்குச பாசமுங் கொம்புந் தரித்தாய்
எங்குல தேவா போற்றி!
சங்கரன் மகனே தாளிணை போற்றி! 28

### வெண்பா

போற்றி கலியா ணிபுதல்வனே பாட்டினிலே
ஆற்ற லருளி யடியேனைத்—தோற்றமுடன்
வாணிபதம் போற்றுவித்து வாழ்விப்பாய் வாணியருள்
வீணையொலி என்னாவில் விண்டு. 29

### கலித்துறை

விண்டுரை செய்குவன் கேளாய் புதுவை விநாயகனே!
தொண்டுன தன்னை பராசக்திக் கென்றுந்
தொடர்ந்திடுவேன்;
பண்டைச் சிறுமைகள் போக்கி யென்னாவிற்
பழுத்தசுவைத்
தெண்டமிழ் பாட வொருகோடி மேவிடச்
செய்குவையே. 30

### விருத்தம்

செய்யா ளினியாள் ஸ்ரீதேவி,
செந்தா மரையிற் சேர்ந்திருப்பாள்
கையா ளெனநின் றடியேன்செய்
தொழில்கள் யாவும் கைகலந்து
செய்வாள்; புகழ்சேர் வாணியுமென்
னுள்ளே நின்று தீங்கவிதை
பெய்வாள், சக்தி துணைபுரிவாள்
பிள்ளாய், நின்னைப் பேசிடிலே. 31

### அகவல்

பேசாப் பொருளைப் பேசநான் துணிந்தேன்,
கேட்கா வரத்தைக் கேட்கநான் துணிந்தேன்,
மண்மீ துள்ள மக்கள், பறவைகள்,
விலங்குகள், பூச்சிகள், புற்பூண்டு, மரங்கள்
யாவுமென் வினையா லிடும்பை தீர்ந்தே
இன்பமுற் றன்புட னிணங்கி வாழ்ந்திடவே
செய்தல் வேண்டும் தேவ தேவா!
ஞானா காசத்து நடுவே நின்றுநான்
'பூமண் டலத்தில் அன்பும் பொறையும்
விளங்குக, துன்பமு மிடிமையு நோவுஞ்
சாவு நீங்கிச் சார்ந்தபல் லுயிரெலாம்
இன்புற்று வாழ்க' என்பேன்! இதனைநீ
திருச்செவி கொண்டு திருவுள மிரங்கி
'அங்ஙனே யாகுக' என்பதாய், ஐயனே!
இந்நாள், இப்பொழு தெனக்கிவ் வரத்தினை
அருள்வாய்; ஆதி மூலமே! அநந்த
சக்தி குமாரனே! சந்திர மவுலீ!
நித்தியப் பொருளே! சரணம்
சரணம் சரணம் சரணமிங் குனக்கே. 32

### வெண்பா

உனக்கேயென் னாவியு முள்ளமுந் தந்தேன்
மனக்கேதம் யாவினையு மாற்றி—எனக்கேநீ
நீண்டபுகழ் வாணாள் நிறைசெல்வம் பேரழகு
வேண்டுமட்டும் ஈவாய் விரைந்து. 33

**கலித்துறை**

விரைந்துன் திருவுள மென்மீ திரங்கிட வேண்டுமையா
குரங்கை விடுத்துப் பகைவரின் தீவைக் கொளுத்தியவன்
அரங்கத்திலே திருமாதுடன் பள்ளி கொண்டான் மருகா!
வரங்கள் பொழியு முகிலே என் னுள்ளத்து
வாழ்பவனே! 34

**விருத்தம்**

வாழ்க புதுவை மணக்குளத்து
வள்ளல் பாத மணிமலரே!
ஆழ்க வுள்ளஞ் சலனமிலா
தகண்ட வெளிக்கண் அன்பினையே
சூழ்க; துயர்கள் தொலைந்திடுக;
தொலையா...... வினம்?
வீழ்க கலியின் வலியெல்லாம்
கிருத யுகந்தான் மேவுகவே 35

**அகவல்**

மேவி மேவித் துயரில் வீழ்வாய்,
எத்தனை கூறியும் விடுதலைக் கிசையாய்
பாவி நெஞ்சே, பார்மிசை நின்னை
இன்புறச் செய்வேன்; எதற்குமினி யஞ்சேல்;
ஐயன் பிள்ளையார் அருளால் உனக்குநான்
அபயமிங் களித்தேன்... நெஞ்சே
நினக்கு நானுரைத்தன நிலைநிறுத் திடவே
தீயிடைக் குதிப்பேன், கடலுள் வீழ்வேன்,
வெவ்விட முண்பேன், மேதினி யழிப்பேன்,
ஏதுஞ் செய்துனை யிடரின்றிக் காப்பேன்;
மூட நெஞ்சே, முப்பது கோடி
முறையுனக் குரைத்தேன்; இன்னு மொழிவேன்;
தலையிலிடி விழுந்தால் சஞ்சலப் படாதே;
ஏது நிகழினு 'நமக்கேன்' என்றிரு;
பராசக்தி யுளத்தின்படி யுலக நிகழும்
நமக்கேன் பொறுப்பு? ''நான் என்றோர் தனிப்பொருள்
இல்லை. நானெனும் எண்ணமே வெறும்பொய்''
என்றான் புத்தன்; இறைஞ்சுவோ மவன்பதம்.
இனியெப் பொழுது முரைத்திடேன். இதை நீ

மறவா திருப்பாய், மடமை நெஞ்சே!
கவலைப் படுதலே கருநர கம்மா!
கவலையற் றிருத்தலே முக்தி;
சிவனொடு மகனிதை நினக்கருள் செய்கவே! 36

### வெண்பா

செய்கதவம்! செய்கதவம்! நெஞ்சே! தவம்செய்தால்
எய்த விரும்பியதை யெய்தலாம்—வையகத்தில்
அன்பிற் சிறந்த தவமில்லை; அன்புடையார்
இன்புற்று வாழ்த லியல்பு. 37

### கலித்துறை

இயல்பு தவறி விருப்பம் விளைத லியல்வதன்றாம்
செயலிங்கு சித்த விருப்பினைப் பின்பற்றும்; சீர்மிகவே
பயிலு நல்லன்பை யியல்பெனக் கொள்ளுதிர் பாரிலுள்ளீர்
முயலு வினைகள் செழிக்கும் விநாயகன் மொய்ம்பினையே. 38


### விருத்தம்

மொய்க்குங் கவலைப் பகைபோக்கி,
முன்னோன் அருளைத் துணையாக்கி,
எய்க்கு நெஞ்சை வலியுறுத்தி,
யுடலை யிரும்புக் கிணையாக்கிப்
பொய்க்குங் கலியை நான்கொன்று,
பூலோ கத்தார் கண்முன்னே,
மெய்க்குங் கிருத யுகத்தினையே
கொணர்வேன் தெய்வ விதியிஃதே. 39

### அகவல்

விதியே வாழி, விநாயகா வாழி,
பதியே வாழி, பரமா வாழி,
சிதைவினை நீக்கும் தெய்வமே, போற்றி!
புதுவினை காட்டும் புண்ணியா, போற்றி!
மதியினை வளர்க்கு மன்னே, போற்றி!
இச்சையுங் கிரியையு ஞானமு மென்றாக்கு
மூல சக்தியின் முதல்வா, போற்றி!

பிறைமதி சூடிய பெருமான் வாழி,
நிறைவினைச் சேர்க்கு நிர்மலன் வாழி,
கால மூன்றையுங் கடந்தான் வாழி!
சக்தி தேவி சரணம் வாழி
வெற்றி வாழி, வீரம் வாழி!
பக்தி வாழி, பலபல காலமும்
உண்மை வாழி, ஊக்கம் வாழி!
நல்ல குணங்களே நம்மிடை யமரர்
பதங்களாம், கண்டீர், பாரிடை மக்களே!
கிருத யுகத்தினைக் கேடின்றி நிறுத்த
விரதநான் கொண்டனன்; வெற்றி
தருஞ்சுடர் விநாயகன் தாளிணை வாழியே.



சித்திபுத்தி விநாயகர்


# கணபதி போற்றி

1. அருள்மிகு முகனே அழகா போற்றி
அரனின் மகனே குழகா போற்றி
ஆனை முகத்தவா அருளே போற்றி
ஆதி பரம்பொருள் ஆனாய் போற்றி
இகபர சுகமது அருள்வாய் போற்றி
உடுக்குல பதியைக் கடிந்தாய் போற்றி
உமையின் சீர்பெறும் மைந்தா போற்றி
ஊரும் ஆகு வாகனா போற்றி
எழில்நடம் புரியும் இறைவா போற்றி
10. ஏரம் பனெனும் பொருளே போற்றி
ஐங்கர முடைய ஐயா போற்றி
ஒப்பிலா மணியே உயர்வே போற்றி
ஓசித்த கொம்பினை யுடையாய் போற்றி
ஓரெழுத் தாகிய தாரக போற்றி
கணபதி யெனும்கண நாதா போற்றி
கரியுருக் கொண்டாய் கண்ணே போற்றி
காவிய பாரதம் வரைந்தாய் போற்றி
காவிரி தோன்றக் காரணா போற்றி
கைலையை ஔவைக் கீந்தாய் போற்றி
20. கரும்பினை விரும்பும் கண்ணே போற்றி
முப்பழ மதிரசம் கொள்வாய் போற்றி
அப்பம் அவல்பொரி விழைந்தாய் போற்றி
கைத்தலம் நிறைகனி யுடையாய் போற்றி
உத்தமி புதல்வா உறவே போற்றி
பந்த மனைத்தும் தகர்ப்பாய் போற்றி
தேரச்சது பொடிசெய் தீரா போற்றி
தீராப் பிணியும் தீர்ப்பாய் போற்றி

ஆராத இன்பம் அருள்வாய் போற்றி
பக்தருக் கருளும் பரமா போற்றி
30. பன்னிரு கரத்தவன் முதல்வா போற்றி
பாம்பணை யானின் மருகா போற்றி
சக்கரம் மாலுக் கீந்தாய் போற்றி
சடுதியில் வரமருள் இறைவா போற்றி
சுந்தர ரூபா சிறுவா போற்றி
சீதப் பனிமதி முடியாய் போற்றி
ஈசனின் மைந்தா உயிரே போற்றி
மூலப் பொருளே முதல்வா போற்றி
முக்கணான் மைந்தா பாலா போற்றி
தொப்பண குட்டு முகப்பாய் போற்றி
40. தற்பர சிற்பர சுகத்தாய் போற்றி
செம்ப வளக்குன் றனையாய் போற்றி
வேதமும் தாங்கும் பாதா போற்றி
நாதமும் கடந்து நிறைந்தாய் போற்றி
இன்னருள் புரியும் நின்னருள் போற்றி
என்னரும் பொருளே அரசே போற்றி
வல்லபைக் கணேச குருவே போற்றி
திருவுங் கல்வியும் தருவாய் போற்றி
திருவடி பணிவோர்க் கருள்வாய் போற்றி
விளங்கு சித்தி விநாயகா போற்றி
50. கருங்குழி விளங்கும் கண்ணே போற்றி
குருவும் தெய்வமும் ஆனாய் போற்றி
பரம்பினை நூலாய்க் கொண்டாய் போற்றி
பரம பதமதுன் பதமே போற்றி
அட்ச மாலையது உகந்தாய் போற்றி
வல்லமை அனைத்தும் தருவாய் போற்றி
வாதாபி கணபதி நாதா போற்றி
வரமருள் தயாள குருவே போற்றி
வருத்தும் துயரது துடைப்பாய் போற்றி
வந்த வினையது போக்குவாய் போற்றி
60. நினைத்ததை முடிக்கும் நிமலா போற்றி
அறிவாய் ஒளிரும் நின்னுரு போற்றி
மாதுளை மாங்கனி உவந்தாய் போற்றி
என்றும் இளையாய் இறைவா போற்றி

அரக்கனைப் போரில் கொன்றாய் போற்றி
மங்களம் புரியும் மன்னா போற்றி
திங்களைக் கடிந்த பாலா போற்றி
வித்தக மருப்புடை பெருமா போற்றி
மத்தள வயிறினை யுடையாய் போற்றி
உலகுக்கு உயிராய் நிறைந்தாய் போற்றி
70. செய்ப்பதி மேவிய புண்ணியா போற்றி
சிற்றடி போற்றினேன் தலைவா போற்றி
கழலிணை சேர அருள்வாய் போற்றி
சம்புவின் குமார அமரா போற்றி
அறுகினை முடிமேல் அணிவோய் போற்றி
எருக்கினை விரும்பிச் சேர்ப்பாய் போற்றி
தும்பை துலங்கும் மார்பா போற்றி
அம்பை அருளிய சேயே போற்றி
கம்பை மேவும் கணபதி போற்றி
நம்பினார்க் கருள்புரி மூர்த்தியே போற்றி
80. திக்கெலாம் புகழ்பெறு தீரா போற்றி
தியான மூர்த்தியே வீரா போற்றி
மந்த்ர மூர்த்தியே மூலா போற்றி
தந்த்ர மூர்த்தியே தலைவா போற்றி
யந்த்ர மூர்த்தியே தேவா போற்றி
யோக மூர்த்தியே நாதா போற்றி
வேண்டுவ தருளும் வீரா போற்றி
வெற்றியை அருளும் கருணை போற்றி
புத்தியை வளர்க்கும் புனிதா போற்றி
அத்தி முகத்தவா அருள்வாய் போற்றி
90. ஆறு முகத்தனுக் கண்ணா போற்றி
மூவுல காளும் முதல்வா போற்றி
முக் குணங் கடந்த நாதா போற்றி
மூன்று கண்ணுடை இறைவா போற்றி
கற்பகக் களிறே குருவே போற்றி
நாலிறு புயத்தாய் நாயகா போற்றி
நாற்றிசை போற்றும் தலைவா போற்றி
நானற்ற விடமே நிற்பாய் போற்றி
அல்லல் களையும் அன்பே போற்றி
எல்லாம் வல்ல இறைவா போற்றி
100. அஞ்சக் கரத்தின் பொருளே போற்றி

பூத மைந்தும் ஆனாய் போற்றி
வேத நான்கின் பொருளே போற்றி
நாத முடிவின் முடிவே போற்றி
முடிவும் வடிவும் இல்லாய் போற்றி
அடியும் முடியும் நீயே போற்றி
கடிமலர் பூசை ஏற்பாய் போற்றி
வடிவ மனைத்தும் ஆனாய் போற்றி
108. வேத முதல்வா விநாயக போற்றி
வேழ முகத்தரசே போற்றி செயபோற்றி.



பிங்கள கணபதி

## காத்தருள்வாய் கணநாதா!

**ராகம்:** பேஹாக்

**பல்லவி**

காத்தருள்வாய் கணநாதா!—கஜானனா!
கலியுக வரதா கரையேற் றிடவா!
(காத்தருள்)

**அனுபல்லவி**

ஆத்ம சுகம்பெற அருள்வாய் தேவா!
ஆகம வேதக லாமய னேவா!
(காத்தருள்)

**சரணங்கள்**

மூர்த்தியுன் திருவடி முதன்முதல் வணங்கி
முயற்சியைத் தொடங்கிட முழுமன மிரங்கி
பூர்த்திய டையச்செய்து புகழளிப் பாயே!
பூமியில் எங்களுக்குப் புகலிடம் நீயே! 1
(காத்தருள்)

மூடனின் நாவிலும் முத்தும ணித்தமிழ்
பாடலை யருளிய பரமத யாநிதி!
மூடிய பனியொக்கும் முன்வினை யாவும்
ஓடிம றையவைக்கும் ஒளிக்கதிர் நீயே! 2
(காத்தருள்)

# கால்பிடித் தேனையா கணபதியே

### பல்லவி

கால்பிடித் தேனையா கணபதியே!—எம்மைக்
காத்தருள் செய்வாய் அருள்நிதியே!

### அனுபல்லவி

வால்பிடித் தேநரர் வாசலை யடைந்தே
வாழ்ந்திடும் கேவல வாழ்வினை வெறுத்தே
(கால்)

### சரணங்கள்

தையல் வள்ளிமுன்பு தம்பியாம் பன்னிரு
கையன் வந்துநின்று வாதிட்ட வேளையில்
ஐயன் உன்னையெண்ண ஆட்கொண்ட வாயின்று
உய்ய எமக்கும்நீ ஓர்வழி காட்டுவாய்! 1
(கால்)

தந்தம் ஒடித்தொரு சூரனை வென்றனை
முந்தி விநாயகா முக்தியின் நாயகா!
சந்தம் நிறைந்திடும் முத்தும ணித்தமிழ்
தந்தெ மையாட்கொண்டு தாங்கிடு தாயகா! 2
(கால்)

# கணமதிலே வினைவிலகும்

ராகம்: ஆரபி தாளம்: ஆதி

**பல்லவி**

கணபதி யேஉன்தன் கால்பிடித் தாலந்தக்
கணமதி லேவந்த வினைவிலகும்!
(கணபதி)

**அனுபல்லவி**

வணங்கிடு வோருக்கும் வலம்வரு வோருக்கும்
மனங்கனிந் தேயருள் வழங்கிடும் தெய்வமே!
(கணபதி)

**சரணங்கள்**

மோதகம் கையினில் ஏந்திய மூர்த்தி!
முழுமுதற் பொருளுன்னை எண்ணிட முக்தி!
சாதக மாய்நின்று சார்ந்தவர் யாருக்கும்
சர்வமங் களமும் தந்தருள் செய்திடும் 1
(கணபதி)

ஆரபி மானங்கொண் டடிபணிந் தாலும்
அருளொடு பொருளுந்தந் தவர்களை யாளும்
வாரண ரூபனே! வானவர் தேவனே!
வழிபட வேமுத்து மணித்தமிழ் தாருமே! 2
(கணபதி)

## ஆண்டருள்வாய் நாயகனே!

(''பனைமரமே பனைமரமே'' என்ற பாடல் மெட்டு)

யானுமுன்னைப் பாடுகின்றேன்
ஆண்டருள்வாய் நாயகனே!
ஆனைமுகத் தாண்டவனே!
அருள்வடிவே யானவனே! 1

தும்பிக்கையைக் கொண்டவனே!
தம்பிக்கருள் தந்தவனே!
அம்பிகையின் பாலகனே!
ஆண்டருள்வாய் நாயகனே! 2

வஞ்சம்நிறை பூமியிலே
நெஞ்சுரமே நீதருவாய்!
அஞ்சலென ஆதரிப்பாய்!
ஆண்டருள்வாய் நாயகனே! 3

சேவடிகள் நினைப்பவர்க்கு
க்ஷேமநலம் நீதருவாய்!
ஆவலுடன் வேண்டுகின்றேன்;
ஆண்டருள்வாய் நாயகனே! 4

நைந்திருக்கும் நெஞ்சமதில்
நிம்மதியே நீதருவாய்
ஐந்துகரம் கொண்டவனே!
ஆண்டருள்வாய் நாயகனே! 5

முத்துமணிச் சொல்லெடுத்து
முக்கனியின் சுவைதொடுத்து,
அத்தன் உன்னைப் பாடிடவே
ஆண்டருள்வாய் நாயகனே! 6

# வாழ வைக்கும் ஒரு தெய்வம்!

**பல்லவி**

வாழவைக் கவென்று வந்துநின் றானவன்!
வேழமு கம்கொண்ட விக்னவி நாயகன்!
(வாழவைக்க)

**சரணங்கள்**

சூழவ ருந்துயர் யாவையும் நீக்கி,
சுந்தர மானதோர் வாழ்வையுண் டாக்கி,
பாழும் பிறவியின் பாவங்கள் போக்கி,
பாரினி லேவுயர் மேன்மையுண் டாக்கி 1
(வாழவைக்க)

தண்ணெனக் குளிர்செயும் அன்பினைக் காட்டி,
தேகத்தி லேநல்ல தெம்பினை யூட்டி,
தின்னவ ருகின்ற தீமையை ஓட்டி,
சிந்தையி லேயென்றும் தூய்மையை நாட்டி 2
(வாழவைக்க)

பவ்வினை போக்கிடும் பாதமே நாடு
அவன்புகழ் போற்றிடும் பாடலே பாடு
அவனியில் இன்பமே வேறேது ஈடு?
அவனருள் உண்டெனில் சூழாது கேடு! 3
(வாழவைக்க)

அணுவொன்றும் அவனன்றி யேயசை யாது!
அவனன்றி எதுவொன்று மேநட வாது!
நினைவென்றும் வைத்திரு நீயவன் மீது!
நீங்காத நிம்மதி நிலவுமப் போது! 4
(வாழவைக்க)

முக்தியி னைத்தரும் முதல்வனை நாடி,
முத்தும ணித்தமிழ் மொழியினில் பாடி,
பக்திசெய் வாயவன் பாதங்கள் தேடி!
பற்றிய மாயைகள் பறந்திடும் ஓடி! 5
(வாழவைக்க)

வரதபண்டிதர்

# பிள்ளையார் கதை

### காப்பு

கரும்பும் இளநீருங் காரெள்ளுந் தேனும்
விரும்பும் அவல்பலவும் மேன்மேல் — அருந்திக்
குணமுடைய னாய்வந்து குற்றங்கள் தீர்க்குங்
கணபதியே இக்கதைக்குக் காப்பு.

திருவிளங்கு மான்மருகா சேவதனில் ஏறி
வரும்அரன்றான் ஈன்றருளும் மைந்தா — முருகனுக்கு
முன்பிறந்த யானை முகவா உனைத்தொழுவேன்
என்கதைக்கு நீஎன்றுங் காப்பு.

### விநாயகர் துதி

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் — உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமு கத்தானைக்
காதலாற் கூப்புவர்தம் கை.

ஒற்றை மருப்பும் ஓரிரண்டு கைத்தலமும்
வெற்றி புனைந்த விழிமூன்றும் — பெற்றதொரு
தண்டைக்கால் வாரணத்தைத் தன்மனத்தில் எப்பொழுதுங்
கொண்டக்கால் வாராது கூற்று.

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலுந்துஉனக்கு நான்தருவேன் — கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீஎனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா.

எள்ளு பொரிதேன் அவல்அப்ப
    மிக்கும் பயறும் இளநீரும்
வள்ளிக் கிழங்கும் மாம்பழமும்,
    வாழைப் பழமும், பலாப்பழமும்,
வெள்ளைப் பாலும், மோதகமும்
    விரும்பிப் படைத்தேன் சந்நிதியில்
கொள்ளைக் கருணைக் கணபதியே
    கொட்டி அருள்க சப்பாணி.
சண்டப் பெருச்சாளி ஏறிச்
    சடைகொண்டு வையத் துலாவி,
அண்டத்து அமரர் துதிக்க
    அடியார்க்கு அருளும் பிரானே,
எண்திக்கும் அன்பர்கள் பார்க்க்
    இணையற்ற பேரொளி வீசக்,
குண்டைக் கணபதி நம்பி
    கொடுங்கையாற் சப்பாணி கொட்டே.

### சரஸ்வதி துதி

புத்தகத் துள்ளுறை மாதே
    பூவில் அமர்ந்திடு வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளாய் நங்காய்
    வேதப் பொருளுக்கு இறைவீ
முத்தின் குடைஉடை யாளே
    மூவுல குந்தொழுது ஏத்துஞ்
செப்புக் கவித்த முலையாய்
    செவ்வரி ஓடிய கண்ணாய்
தக்கோலந் தின்னும் வாயாய்
    சரஸ்வதி என்னுந் திருவே
எக்காலமும் உன்னைத் தொழுவேன்
    இயல்இசை நாடகம் என்னும்
முத்தமிழ்க் கல்விகள் எல்லாம்
    முழுதும் எனக்கருள் செய்துஎன்
சித்தந் தனில்நீ இருந்து
    திருவருள் செய்திடு வாயே.

### அதிகாரம்

பொன்னிறங் கடுக்கும் புனற்செறி குடுமித்
தென்மலை இருந்த சீர்சால் முனிவன்
கந்த மும்மதக் கரிமுகன் கதைதனைச்
செந்தமிழ் வகையால் தெளிவுறச் செப்பினன்
அன்னதிற் பிறவில் அரில்தபத் திரட்டித்
தொன்னெறி விளங்கச் சொல்லுவன் கதையே.

### கதை

மந்திர கிரியில் வடபால் ஆங்குஓர்
இந்துதவழ் சோலை இராசமா நகரியில்
அந்தணன் ஒருவனும் ஆயிழை ஒருத்தியுஞ்
சுந்தரப் புதல்வரைப் பெறுதல் வேண்டிக்
கடவுள் ஆலயமுங் கடிமலர்ப் பொய்கையும்
தடநிழற் பள்ளியுந் தாம்பல சமைத்துப்
புதல்வரைத் தருகெனப் பொருப்புஅரசு ஈன்ற
மதர்விழி பாகனை வழிபடும் நாளில்
மற்றவர் புரியும் மாதவங் கண்டு
சிற்றிடை உமையாள் சிவன்அடி வணங்கிப்
பரனே சிவனே பல்லுயிர்க்கு உயிரே
அரனே மறையவர்க்கு அருள்புரிந்து அருளென
அந்தஅந் தணனுக்கு இந்தநற் பிறப்பில்
மைந்தரில் லைஎன்று மறுத்துஅரன் உரைப்ப
எப்பரிசு ஆயினும் எம்பொருட்டு ஒருசுதன்
தப்பிலா மறையோன் தனக்குஅருள் செய்கென
எமைஆ ளுடைய உமையாள் மொழிய
இமையா முக்கண் இறைவன் வெகுண்டு
பெண்சொற் கேட்டல் பேதைமை என்று
பண்சொற் பயிலும் பாவையை நோக்கிப்
பேதாய் நீபோய்ப் பிறஎன மொழிய
மாதுவை அவளும் மனந்தளர்வு உற்றுப்
பொன்றிடும் மானிடப் புன்பிறப்பு எய்துதல்
நன்றல என்றே நடுக்கமுற்று உரைப்பக்
கறைமிடற்று அண்ணல் கருணை கூர்ந்து
பிறைநுதல் அவட்குநீ பிள்ளை யாகச்
சென்றுஅவண் வளர்ந்து சிலபகல் கழித்தால்

மன்றல்செய்து அருள்வோம் வருந்தலை என்று
விடைகொடுத்து அருள விலங்கல்மா மகளும்
பெடைமயிற் சாயற் பெண்மக வுஆகித்
தார்மலி மார்பன் சதுர்மறைக் கிழவன்
சீர்மலி மனைவி திருவயிற்று உதித்துப்
பாவையுஞ் சிற்றிலும் பந்தொடு கழங்கும்
யாவையும் பயின்ற இயல்பினள் ஆகி
ஐயாண்டு அடைந்தபின் அன்னையும் அத்தனும்
மையார் கருங்குழல் வாணுதல் தன்னை
மானுட மறையோர்க்கு வதுவை செய்திடக்
கான்அமர் குழலியைக் கருதிக் கேட்பப்
பிறப்புஇறப்பு இல்லாப் பெரியோற்கு அன்றி
அறத்தகு வதுவைக்கு அமையேன் யான்என
மற்றவன் தன்னைஉன் மணமக னாகப்
பெற்றிடல் அரிதெனப் பெயர்த்துஅவர் பேச
அருந்தவ முயற்சியால் அணுகுவேன் யான்எனக்
கருந்தட நெடுங்கண் கவுரிஅங்கு உரைப்ப
மருமலி கமல மலர்த்தடத்து அருகில்
தருமலி நிழல்தவச் சாலையது அமைத்துப்
பணியணி பற்பல பாங்கியர் சூழ
அணிமலர்க் குழல்உமை அருந்தவம் புரிதலும்
அரிவைதன் அருந்தவம் அறிவோம் யாம்என
இருவரும் அறியா இமையவர் பெருமான்
மான்இடம் ஏந்தும் வண்ணமது ஒழிந்து
மானிட யோக மறையவன் ஆகிக்
குடையொடு தண்டுநற் குண்டிகை கொண்டு
மடமயில் தவம்புரி வாவிக் கரையிற்
கண்ணுதல் வந்து கருணை காட்டித்
தண்நறுங் கூந்தல் தையலை நோக்கி
மின்பெறு நுண்இடை மெல்லிய லாய்நீ
என்பெறத் தவம்இங்கு இயற்றுவது என்றலுங்
கொன்றைவார் சடையனைக் கூடஎன்று உரைத்தலும்
நன்றுஎனச் சிரித்து நான்மறை யோனும்
மாட்டினில் ஏறி மான்மழு தரித்துக்
காட்டினிற் சுடலையிற் கணத்துடன் ஆடிப்
பாம்பும் எலும்பும் பல்தலை மாலையுஞ்
சாம்பரும் அணிந்து தலையோடு ஏந்திப்

பிச்சைகொண்டு உழலும் பித்தன் தன்னை
நச்சிநீர் செய்தவம் நகைதரும் நுமக்கெனப்
பூங்கொடி அருந்தவம் பூசுரன் குலைத்தலும்
ஆங்குஅவள் நாணமுற்று அணிமனை புகுதச்
சேடியர் வந்து செழுமலர்க் குழலியை
வாடுதல் ஒழிகென மனம்மிகத் தேற்றிச்
சிந்துர வாள்நுதற் சேடியர் சிலர்போய்த்
தந்தைதாய் இருவர் தாளிணை வணங்கி
வாவிக் கரையில் வந்துஒரு மறையோன்
பாவைதன் செங்கையைப் பற்றினன் என்றலுந்
தோடுஅலர் கமலத் தொடைமறை முனியை
ஆடக மாடத்து அணிமனை கொணர்களென
மாடக யாழ்முரல் மங்கையர் ஓடி
நீடிய புகழாய் நீஎழுந்து அருள்என
மைமலர்க் குழலி வந்துஎனை அழைக்கில்
அம்மனைப் புகுவன்என்று அந்தணன் உரைத்தலும்
பொற்றொடி நீபோய்ப் பொய்கையில் நின்ற
நற்றவ முனியை நடாத்திக் கொணர்கென
சிவனை இகழ்ந்த சிற்றறிவு உடையோன்
அவனையான் சென்றுஇங்கு அழைத்திடேன் என்று
சிற்றிடை மடந்தையுஞ் சீறின ளாகி
மற்றைய மாதர் மதிமுகம் நோக்கி
நெற்றியிற் கண்ணுடை நிமலனுக்கு அல்லவென்
பொற்புஅமர் கொங்கை பொருந்துதற்கு அரிதால்
மானிட வேட மறையவன் தனக்கு
யான்வெளிப் படுவ தில்லைஎன்று இசைப்ப
மனையிடை வந்த மாமுனி தன்னை
இணைஅடி தொழுதல் இளையோர்க்கு இயல்பெனத்
தந்தையுந் தாயுந் தகைபெற மொழியச்
சிந்தை குளிர்ந்து சீறுதல் ஒழிந்து
தாய்சொல் மறுத்தல் பாவம்என்று அஞ்சி
ஆயிழை தானும் அவன்எதிர் சென்று
சுற்றிவந்து அவனடி சுந்தரி வணங்கி
மற்றவன் தன்னை மனையிற் கொணர்ந்து
ஆதியம் பகவற்கு அன்பன் ஆகும்
வேதியன் பழைய விருத்தன்என்று எண்ணி
ஆசனம் நல்கி அருக்கியம் முதலாப்

பாதபூ சனைகள் பண்ணிய பின்னர்ப்
போனகம் படைத்துப் பொரிக்கறி பருப்புநெய்
ஆன்பால் மாங்கனி அழகிய பலாச்சுளை
தேன்கத லிப்பழஞ் சீர்பெறப் படைத்து
அந்தணன் தன்னை அமுது செய்வித்துச்
சந்தனங் குங்குமச் சாந்திவை கொடுத்துத்
தக்கோ லத்தொடு சாதிக் காயும்
கற்பூ ரத்தொடு கவின்பெறக் கொண்டு
வெள்ளிலை அடைக்காய் விளங்கிய பொன்னின்
ஒள்ளிய தட்டில் உவந்துமுன் வைத்துச்
சிவன்எனப் பாவனை செய்து நினைந்து
தவமுறை முனிவனைத் தாளிணை வணங்கத்
தேன்அமர் குழலி திருமுகம் நோக்கி
மோனமா முனிபுன் முறுவல் காட்டிக்
கற்றைச் சடையுங் கரமொரு நான்கும்
நெற்றியில் நயனமும் நீல கண்டமும்
மானும் மழுவும் மலர்க்கரத்து இலங்கக்
கூன்மதி நிலவுங் கொழித்திட முடிமேல்
வரந்தரு முதல்வன் மடமயில் காணக்
கரந்ததன் உருவங் காட்டிமுன் நிற்ப
மரகத மேனி மலைமகள் தானும்
விரைவொடுஅங் குஅவன்அடி வீழ்ந்துஇறைஞ் சினளே
அரிஅயன் இந்திரன் அமரர் விஞ்சையர்
கருடர் கின்னரர் காய வாசியர்
ஏதமில் முனிவர் அவுணர் இராக்கதர்
பூதர் இயக்கர்கிம் புருடர் அலகை
சித்தர் தாரகைகந் தருவர்கள் முதலாய்க்
கணிக்கரும் பதினெண் கணத்தில்உள் ளவரும்
மணிக்கருங் களத்தனை வந்தடைந்து அதன்பின்
மன்றல்அங் குழலிக்கு வதுவைநாள் குறித்துத்
தென்றல்வந்து இலங்கு முன்றில் அகத்துப்
பொன்திகழ் பவளப் பொற்கால் நாட்டி
மாணிக் கத்தால் வளைபல பரப்பி
ஆணிப்பொன் தகட்டால் அழகுற வேய்ந்து
நித்தில மாலை நிரைநிரை தூக்கிப்
பத்திகள் தோறும் பலமணி பதித்துத்
தோரணம் நாட்டித் துகில்விதா னித்துப்

பூரணப் பொற்குடம் பொலிவுற வைத்துத்
திக்குத் தோறுந் திருவிளக்கு ஏற்றிப்
பக்திப் படர்முளைப் பாலிகை பரப்பிக்
கன்னலுங் கமுகுங் கதலியும் நாட்டிப்
பன்மலர் நாற்றிப் பந்தர்சோ டித்து
நலமிகு கைவலோர் நஞ்சுஅணி மிடற்றனைக்
குலவிய திருமணக் கோலம் புனைந்தார்
வருசுரர் மகளிர் மலைமகள் தன்னை
திருமணக் கோலஞ் செய்தனர் ஆங்கே
எம்பி ரானையும் இளங்கொடி தன்னையும்
உம்பர் எல்லாம் ஒருங்குடன் கூடிக்
கடல்என விளங்குங் காவணந் தன்னிற்
சுடர்விடு பவளச் சுந்தரப் பலகையில்
மறைபுகழ்ந்து ஏத்த மகிழ்ந்துஉட னிருத்திப்
பறைஒலி யோடு பனிவளை ஆர்ப்ப
வதுவைக்கு ஏற்ற மறைவிதி நெறியே
சதுர்முகன் ஓமச் சடங்குகள் இயற்றத்
தறுகலன் ஒளிபொன் தாலி பூட்டிச்
சிறுமதி நுதலியைச் சிவன்கைப் பிடித்தபின்
அரிவலஞ் சூழ எரிவலம் வந்து
பரிவுடன் பரிமளப் பாயலில் வைகிப்
போதுஅணி கருங்குழற் பூவைதன் உடனே
ஓதநீர் வேலைசூழ் உஞ்சைஅம் பதிபுக
ஏரார் வழியின் எண்திசை தன்னைப்
பாரா தேவா பனிமொழி நீஎன
வரும்கருங் குழலாள் மற்றும்உண் டோஎனத்
திருந்துஇழை மடந்தை திரும்பினள் பார்க்கக்
களிறும் பிடியும் கலந்துவிளை யாடல்கண்டு
ஒளிர்மணி பூணாள் உரவோன் உடனே
இவ்வகை யாய்விளை யாடுவோம் ஈங்கென
அவ்வகை அரனும் அதற்குஉடன் பட்டு
மதகரி உரித்தோன் மதகரி யாக
மதர்விழி உமைபிடி வடிவம தாகிக்
கூடிய கலவியிற் குவலயம் விளங்க
நீடிய வானோர் நெறியுடன் வாழ
அந்தணர் சிறக்க ஆனினம் பெருகச்
செந்தழல் வேள்விவேத ஆகமஞ் சிறக்க

அறம்பல பெருக மறம்பல சுருங்கத்
திறம்பல அரசர் செகதலம் விளங்க
வெங்கரி முகமும் வியன்புழைக் கையொடு
ஐங்கர தலமும் மலர்ப்பதம் இரண்டும்
பவளத்து ஒளிசேர் பைந்துவர் வாயுந்
தவளக் கிம்புரித் தடமருப்பு இரண்டுங்
கோடிசூ ரியர்போற் குலவிடு மேனியும்
பேழைபோல் அகன்ற பெருங்குட வயிறும்
நெற்றியில் நயனமும் முப்புரி நூலுங்
கற்றைச் சடையுங் கனகநீள் முடியுந்
தங்கிய முறம்போல் தழைமடிச் செவியுமாய்
ஐங்கரத்து அண்ணல் வந்துஅவ தரித்தலும்
பொங்கரவு அணிந்த புண்ணிய மூர்த்தியும்
மங்கை மனமிக மகிழ்ந்துஉடன் நோக்கி
விண்ணு ளோர்களும் விரிந்தநான் முகனும்
மண்ணு ளோர்களும் வந்துஉனை வணங்க
ஆங்குஅவர் தங்கட்கு அருள்சுரந்து அருளித்
தீங்கது தீர்த்துச் செந்நெறி அளித்துப்
பாரண மாகப் பலகனி அருந்தி
ஏரணி ஆலின்கீழ் இனிதிரு என்று
பூதலந் தன்னிற் புதல்வனை இருத்திக்
காதல்கூர் மடநடைக் கன்னியுந் தானும்
மைவளர் சோலை மாநகர் புகுந்து
தெய்வ நாயகன் சிறந்துஇனிது இருந்தபின்
வானவ ராலும் மானுட ராலுங்
கான்அமர் கொடிய கடுவிலங் காலுங்
கருவிக ளாலுங் கால னாலும்
ஒருவகை யாலும் உயிர்அழி யாமல்
திரம்பெற மாதவஞ் செய்துமுன் னாளில்
வரம்பெறு கின்ற வலிமையி னாலே
ஐமுகச் சீயமொத்து அடற்படை சூழக்
கைமுகம் படைத்த கயமுகத்து அவுணன்
பொன்னுலகு அழித்துப் புலவரை வருத்தி
இந்நிலத் தவரை இடுக்கண் படுத்திக்
கொடுந்தொழில் புரியுங் கொடுமைகண்டு ஏங்கி
அடுந்தொழிற் குலிசத்து அண்ணலும் அமரருங்
கறைபடு கண்டக் கடவுளைப் போற்றி

முறையிடக் கேட்டு முப்புரம் எரித்தோன்
அஞ்சலீர் என்றுஅவர்க்கு அபயங் கொடுத்தே
அஞ்சுகைக் கரிமுகத்து அண்ணலை நோக்கி
ஆனை மாமுகத்து அவுணனொடு அவன்தன்
சேனைகள் முழுவதுஞ் சிந்திடப் பொருது
குன்றுபோல் வளர்ந்த குறட்படை கூட்டி
வென்றுவா என்று விடைகொடுத்து அருள
ஆங்குஅவன் தன்னோடு அமர்பல உடற்றிப்
பாங்குறும் அவன்படை பற்றுஅறக் கொன்றபின்
தேர்மிசை ஏறிச் சினங்கொடு செருவிற்
கார்முகம் வளைத்த கயமுகா சுரன்மேல்
ஒற்றை வெண்மருப்பை ஒடித்துஅவன் உரத்திற்
குற்றிட எறிந்தான் குருதிசோர்ந் திடவே
சோர்ந்துஅவன் வீழ்ந்து துண்ணென எழுந்து
வாய்ந்தமூ டிகமாய் வந்துஅவன் பொரவே
வந்த மூடிகத்தை வாகனம் ஆக்கி
எந்தை விநாயகன் ஏறினன் இப்பால்
எறிந்தவெண் மருப்புஅங்கு இமைநொடி அளவிற்
செறிந்தது மற்றவன் திருக்கரத் தினிலே
வெல்லவைக் கதிர்வேல் விழிபடைத்து அருளும்
வல்லவை தனைத்தன் மனைஎன மணந்தே
ஓகையோடு எழுந்துஆங்கு உயர்படை சூழ
வாகையும் புனைந்து வரும்வழி தன்னிற்
கருச்சங் கோட்டிற் கயல்கமுகு ஏறுந்
திருச்செங் காட்டிற் சிவனைஅர்ச் சித்துக்
கணபதீச் சரம்எனுங் காரண நாமம்
பணபதி புகழ்தரு பதிக்குஉண் டாக்கிச்
சங்கரன் பார்ப்பதி தனிமனம் மகிழ
இங்குவந்து அன்புடன் எய்திய பின்னர்க்
கணங்களுக்கு அரசாய்க் கதிர்முடி சூட்டி
இணங்கிய பெருமைபெற்று இருந்திட ஆங்கே
தேவர்கள் முனிவர் சித்தர்கந் தருவர்
யாவரும் வந்துஇவண் ஏவல்செய் திடுநாள்
அதிகமாய் உரைக்கும் ஆவணித் திங்களின்
மதிவளர் பக்கம் வந்திடு சதுர்த்தியில்
விநாயகர்க்கு உரிய விரதம் என்றுஎண்ணி

மனாதிகள் கழித்து மரபொடு நோற்றார்
இப்படி நோற்றிட்டு எண்ணிய பெருநாள்
ஒப்பரும் விரதத்து உறும்ஒரு சதுர்த்தியில்
நோற்றுநற் பூசை நுடங்காது ஆற்றிப்
போற்றிசெய் திட்டார் புலவர் ஐங்கரனை
மருமலர் தூவும் வானவர் முன்னே
நிருமலன் குமரன் நிருத்தம் புரிந்தான்
அனைவரும் கைதொழுது அடிஇணை போற்ற
வனைகழற் சந்திரன் மனச்செருக்கு அதனால்
பேழைபோல் வயிறும் பெருத்தகாத் திரமும்
தாழ்துளைக் கையுந் தழைமுறச் செவியுங்
கண்டனன் நகைத்தான் கரிமுகக் கடவுளுங்
கொண்டனன் சீற்றங் குபேரனை நோக்கி
என்னைக் கண்டுஇங்கு இகழ்ந்தனை சிரித்தாய்
உன்னைக் கண்டவர் உரைக்கும்இத் தினத்திற்
பழியொடு பாவமும் பலபல விதனமும்
அழிவும்எய் துவரென்று அசனிபோற் சபித்தான்
விண்ணவர் எல்லாம் மிகமனம் வெருவிக்
கண்ணருள் கூருங் கடவுள்இத் தினத்திற்
கோரவெஞ் சினமிகக் கொண்டனன் அந்நாள்
மார்கழித் திங்கள் மதிவளர் பக்கஞ்
சதயந் தொட்ட சட்டிநல் விரதமென்று
இதயத்து எண்ணி யாவரும் நோற்றார்
இப்புவி மாந்தர் இயம்பிய விரதம்
வைப்புடன் நோற்ற வகைஇனிச் சொல்வாம்
குருமணி முடிபுனை குருகுலத் துதித்த
தருமனும் இளைய தம்பியர் நால்வருந்
தேவகி மைந்தன் திருமுகம் நோக்கி
எண்ணிய விரதம் இடையூறு இன்றிப்
பண்ணிய பொழுதே பலிப்பு உண்டாகவுஞ்
செருவினில் எதிர்த்த செறுநரை வென்று
மருமலர்ப் புயத்தில் வாகை சூடவும்
எந்தத் தெய்வம் எவ்விர தத்தை
வந்தனை செய்யில் வருநமக்கு உரையெனப்
பாட்டுஅளி துதையும் பசுந்துழாய் மார்பனுங்
கேட்டருள் வீரெனக் கிளத்துதல் உற்றான்
அக்குநீ றணியும் அரன்முதல் அளித்தோன்

விக்கினந் தீர்க்கும் விநாயக மூர்த்தி
ஓடவைத் திடும்பொன் ஒத்துஒளி விளக்குங்
கோடி சூரியர்போற் குலவிய மேனியன்
கடகரி முகத்தோன் காத்திரம் பெருத்தோன்
தடவரை போலுஞ் சதுர்ப்புயம் உடையோன்
சர்வ ஆபரணமுந் தரிக்கப் பட்டவன்
உறுமதிக்க குழவிபோல் ஒருமருப்பு உடையோன்
ஒருகையில் தந்தமும் ஒருகையிற் பாசமும்
ஒருகையில் மோதகம் ஒகையில் செபஞ்செய்
உத்தம மாலையோன் உறுநினை வின்படி
சித்திசெய் வதனாற் சித்திவி நாயகன்
என்றுஇமை யவரும் யாவருந் துதிப்ப
நன்றி தருந்திரு நாமம் படைத்தோன்
புரவலர் காணப் புறப்படும் போதுஞ்
செருவினில் யுத்தஞ் செய்திடும் போதும்
வித்தியா ரம்பம் விரும்பிடும் போதும்
உத்தியோ கங்கள் உஞற்றிடும் போதும்
ஆங்குஅவன் தன்னை அருச்சனை புரிந்தால்
தீங்குஉறாது எல்லாஞ் செயம்உண் டாகும்
கரதலம் ஐந்துடைக் கணபதிக்கு உரிய
விரதம்ஒன்று உளதுஅதை விரும்பிநோற் றவர்க்குச்
சந்ததி தழைத்திடுஞ் சம்பத்து உண்டாம்
புந்தியில் நினைந்த பொருள்கை கூடும்
மேலவர் தம்மையும் வென்றிட லாம்என்த்
தேவகி மைந்தன் செப்பிடக் கேட்டு
நுவலரும் விரதம் நோற்றிடும் இயல்பும்
புகர்முகக் கடவுளைப் பூசைசெய் விதமும்
விரித்துஎமக்கு உரைத்திட வேண்டும் என்றுஇரப்ப
வரைக்குடை கவித்தோன் வகுத்துஉரை செய்வான்
தேருநீர் ஆவணித் திங்களின் மதிவளர்
பூர்வ பக்கம் புணர்ந்திடு சதுர்த்தியின்
முந்தும் புலரியின் முறைநீர் படிந்து
சந்தி வந்தனந் தவறாது இயற்றி
அத்தினம் அதனில் ஐங்கரக் கடவுளைப்
பக்தியோடு அர்ச்சனை பண்ணுதல் வேண்டும்
வெள்ளியாற் பொன்னால் விளங்கும் அவன்றன்
ஒள்ளிய அருள்திரு உருஉண் டாக்கிப்

பூசனை புரியப் புகன்றனர் பெரியோர்
ஆசுஇலா மண்ணால் அமைத்தலும் தகுமால்
பூசைசெய் திடும்இடம் புனிதமது ஆக்கி
வாசமென் மலரின் மஞ்சரி தூக்கிக்
கோடிகங் கோசிகங் கொடிவிதா னித்து
நீடிய நூல்வளை நிறைகுடத்து இருத்தி
விந்தைசேர் சித்தி விநாயகன் உருவைச்
சிந்தையின் நினைந்து தியானம் பண்ணி
ஆவா கனம்முதல் அர்க்கிய பாத்தியம்
வாகா ராச மனம்வரை கொடுத்து
ஐந்துஅமிர் தத்தால் அபிடே கித்துக்
கந்தஞ் சாத்திக் கணேசமந் திரத்தால்
ஈசுர புத்திரன் என்னும்மந் திரத்தால்
மாசுஅகல இரண்டு வத்திரஞ் சாத்திப்
பொருந்துஉமை சுதனாப் புகலுமந் திரத்தால்
திருந்தும் பளிதத் தீபங் கொடுத்துப்
பச்சறுகு உடன்இரு பத்தொரு விதமாப்
பத்திர புட்பம் பலபல கொணர்ந்தே
உமாசுதன் கணாதிபன் உயர்கரி முகத்தோன்
குமார குரவன் பாசஅங் குசகரன்
ஏக தந்தன் ஈசுரன் புத்திரன்
ஆகு வாகனன் அருள்தரு விநாயகன்
சர்வகா ரியமுந் தந்துஅருள் புரிவோன்
ஏரம்ப மூர்த்தி என்னும்நா மங்களால்
ஆரம் பத்துடன் அர்ச்சனை பண்ணி
மோதகம் அப்பம் முதற்பணி காரந்
தீதகல் மாங்கனி தீங்கத லிப்பழம்
வருக்கை கபித்த மாதுளங் கனியொடு
தரித்திடு நெட்டிலைத் தாழைமுப் புடைக்காய்
பருப்புநெய் பொரிக்கறி பால்தயிர் போனகம்
விருப்புள சுவைப்பொருள் மிகவும்முன் வைத்து
உருத்திரப் பிரியஎன்று உரைக்கும்மந் திரத்தால்
நிருத்தன் மகற்கு நிவேதனங் கொடுத்து
நற்றவர் புகன்றநா னான்குஉப சாரமும்
மற்றவன் திருவுளம் மகிழ்ந்திடச் செய்து
எண்ணுந் தகுதி இருபிறப் பாளர்க்கு
உண்அறு சுவைசேர் ஓதனம் நல்கிச்

சந்தனம் முத்துத் தானந் தக்கிணை
அந்தணர்க்கு ஈந்திட்டு அருச்சகன் தனக்குத்
திருத்தகு விநாயகத் திருஉரு வத்தைத்
தரித்தவத் திரத்துடன் தானமாக் கொடுத்து
நைமித் திகம்என நவில்தரு மரபால்
இம்முறை பூசனை யாவர்செய் தாலும்
எண்ணிய கருமம் யாவையும் முடிப்பர்
திண்ணிய செருவிற் செயம்மிகப் பெறுவர்
அரன்இவன் தன்னைமுன் அர்ச்சனை பண்ணிப்
புரம்ஒரு மூன்றும் பொடிபட எரித்தான்
உருத்திரன் இவனை உபாசனை பண்ணி
விருத்திரா சுரனை வென்றுகொன் றிட்டான்
அகலிகை இவன் தாள் அர்ச்சனை பண்ணிப்
பகர்தருங் கணவனைப் பரிவுடன் அடைந்தாள்
தண்ஆர் மதிமுகத் தாள்தம யந்தி
அன்னாள் இவனை அர்ச்சனை பண்ணி
நண்ணார் பரவும் நளனை அடைந்தாள்
ஐங்கரக் கடவுளை அர்ச்சனை பண்ணி
வெங்கத நிருதரை வேர்அறக் களைந்து
தசரதன் மைந்தன் சீதையை அடைந்தான்
பகிரதன் என்னும் பார்த்திவன் இவனை
மகிதலந் தன்னில் மலர்கொடுஅர்ச் சித்து
வரநதி தன்னை வையகத்து அழைத்தான்
அட்டதே வதைகளும் அர்ச்சித்து இவனை
அட்ட போகத்துடன் அமிர்தமும் பெற்றார்
உருக்குமணி என்னும் ஒண்டொடி தன்னைச்
செருக்கொடு வவ்விச் சிசுபா லன்றான்
கொண்டுபோம் அளவிற் குஞ்சர முகவனை
வண்டுபாண் மிழற்றா மலர்கொடுஅர்ச் சித்துத்
தாரியின் மறித்தவன் தனைப்புறங் கண்டு
யாமும்அங்கு அவளை இன்புறப் பெற்றோம்
புகர்முகக் கடவுளைப் பூசனை புரிந்து
மிகமிக மனத்தில் விழைந்தன பெற்றார்
இப்புவி தன்னில் எண்ணுதற்கு அரிதால்
அப்படி நீவிரும் அவனைஅர்ச் சித்தால்
எப்பொருள் விரும்பினீர் அப்பொருள் பெறுவீர்

என்றுகன்று எறிந்தோன் எடுத்திவை உரைப்ப
அன்றுமுதல் தருமனும் அனுசரும் இவனைப்
பூசனை புரிந்துகட் புலன் இலான் மைந்தரை
நாசனம் பண்ணி நராதிபர் ஆகிச்
சிந்தையில் நினைந்தவை செகத்தினிற் செயங்கொண்டு
அந்தமில் செல்வத்து அரசியல் பெற்றார்
ஈங்குஇது நிற்க இவ்விர தத்துஇயல்
ஓங்கிய காதைமற்று ஒன்றுஉரை செய்வாம்
கஞ்சநான் முகன்தருங் காசிபன் புணர்ந்த
வஞ்சக மனத்தாள் மாயைதன் வயிற்றிற்
சூரன் என்று ஒருவனுந் துணைவருந் தோன்றி
ஆர்கலி சூழ்புவி அனைத்தையும் அழித்தே
சீருடைச் சுவர்க்கத் திருவளங் கெடுத்தும்
புரந்தரன் முதலிய புலவரை வருத்தியும்
நிரந்தரந் தீய நெறிநடத் துதலால்
ஆயிரங் கண்ணனும் அமரரும் முனிவரும்
நீஇரங்கு எமக்குஎன நெடுங்கரங் கூப்பி
இரசத கிரிஉறை இறைவனை வணங்கி
வரமிகுஞ் சூரன் வலிமைகள் உரைக்கச்
சுடர்விடு மணிமுடிச் சூரனை வெல்லக்
கதிர்விடு வடிவேல் கரதலத்து ஏந்தும்
புதல்வனைத் தருவோம் போமின் நீர்என
அமரர் கோனுக்கு அரன்விடை கொடுத்துச்
சமர வேல்விழித் தையலுந் தானுங்
கூடிய கலவியிற் கூடாது ஊடலும்
ஓடிய வானோர் ஒருங்குஉடன் கூடிப்
பாவகன் தன்னைப் பரிவுடன் அழைத்துச்
சூரன் செய்யுந் துயரம் எல்லாம்
ஊர்அரவு அணிந்தோற்கு உரையென உரைப்பக்
காமனை எரித்த கடவுள்என்று அஞ்சிப்
பாவகன் பயமுறப் பயம்உனக்கு ஏதென
உற்றிடுங் கரதலத்து உன்னையே தரித்தான்
நெற்றியின் நயனமும் நீயே ஆதலிற்
குற்றம் அடாது கூறுநீ சென்றென
வானவர் மொழிய மற்றவன் தானுந்
தானும்அச் சபையில் தரியாது ஏகி
எமைஆ ளுடைய உமையா ளுடனே

அமையா இன்பத்து அமர்ந்துஇனிது இருந்த
பள்ளி மண்டபம் பாவகன் குறுகலும்
ஒள்ளிய மடந்தை ஒதுங்கிநா ணுதலுந்
தெள்ளிதிற் பரமனுந் தேயுவைக் கண்டே
அறுமுகப் பிள்ளையை அவன்கையில் ஈதலும்
வறியவன் பெற்ற வான்பொருள் போலச்
சோதி நீள்முடிச் சுடரோன் கொணர்ந்து
வாத ராசன் மலர்க்கையிற் கொடுப்ப
நீதி யோடு நின்றுகை யேந்திப்
போதநீள் வாயுவும் பொறுக்கஒண் ணாமல்
தரும்புனற் கங்கை தன்கையிற் கொடுப்பத்
தரும்புனற் கங்கையும் தாங்க ஒண்ணாமற்
பொருந்திரைச் சரவணப் பொய்கையில் வைப்பத்
தண்ஆர் வதனத் தாமரை ஆறுங்
கண்ஆ றிரண்டுங் கரம்ஈ ராறும்
தூண்எனத் திரண்ட தோள் ஈராறும்
மாண்அயில் ஆதி வான்படை யுங்கொண்டு
அறுமுகக் கடவுள்அங்கு அவதரித் திடலும்
மறுகிய உம்பர் மகிழ்வுடன் கூடி
அறுமீன் களைப்பால் அளித்திர்என்று அனுப்ப
ஆங்கவர் முலைஉண்டு அறுமுகன் தானும்
ஓங்கிய வளர்ச்சி உற்றிடு நாளில்
விமலனும் உமையும் விடையுகைத்து ஆறு
தலைமகன் இருந்த சரவணத்து அடைந்து
முருகுஅலர் குழல்உமை முலைப்பால் ஊட்ட
இருவரும் இன்பால் எடுத்துஎடுத்து அணைத்துத்
தேவர்தம் படைக்குச் சேனா பதியெனக்
காவல் கொண்டு அளிக்கக் கதிர்முடி சூட்டி
அயில்வேல் முதற்பல ஆயுதங் கொடுத்துத்
திசைஎலாஞ் செல்லுந் தேரும்ஒன்று உதவிப்
பூதப் படைகள் புடைவரப் போய்நீ
ஓதுறும் அவுணரை ஒறுத்திடுஎன்று அனுப்ப
இருளைப் பருகும் இரவியைப் போலத்
தகுவரென்று அவரைச் சமரிடை முருக்கிக்
குருகுப் பேர்பெறுங் குன்றமுஞ் சூரன்
மருமமுந் துளைபட வடிவேல் விடுத்தே
யாவரும் வியப்புற இந்திரன் மகளாந்

தேவகுஞ் சரியைத் திருமணம் புணர்ந்திட்டு
அமரர் கோனுக்கு அமருலகு அளித்துக்
குமர வேளுங் குவலயம் விளங்க
அமரா வதியில் அமர்ந்துஇனிது இருந்தான்
சமர வேலுடைச் சண்முகன் வடிவுகண்டு
அமரர் மாதர் அனைவரும் மயங்கி
எண்டருங் கற்பினை இழந்தது கண்டே
அண்டர் எல்லாம் அடைவுடன் கூடி
மாதொரு பாகனை வந்துஅடி வணங்கி
மருமலர்க் கடம்பன்எம் மாநகர் புகாமல்
அருள்செய வேண்டும்நீ அம்பிகா பதியென
இமையவர் உரைப்ப இறையவன் தானுங்
குமரனைக் கோபங் கொண்டுமுன் முனியக்
காவல்கொண்டு எம்வினை கட்டறுத்து அருளுஞ்
சேவலங் கொடியோன் தேசம் போகத்
திருந்திழை உமையாள் அருந்துயர் எய்தி
வருந்திமுன் நிற்க மங்கையைப் பார்த்து
மங்கை நீதான் வருந்துதல் ஒழிகுதி
அங்கையாற் சூதெறிந்து ஆடுவோம் வாவென
வென்றதுந் தோற்றதும் விளம்புவார் யாரெனக்
குன்றமென் முலையாள் கூறிய சமயம்
புற்றுஅரவு அணிந்த புனிதனைக் காணஅங்கு
உற்றனன் திருமால் ஊழ்வினை வலியாற்
சக்கிர பாணியைச் சான்றெனக் குறித்து
மிக்கதோர் சூது விருப்புடன் ஆடச்
சாயக நேருந் தடநெடுங் கருங்கண்
நாயகி வெல்ல நாயகன் தோற்ப
இன்பவாய் இதழ்உமை யான்வென் றேன்என
எம்பெரு மானும் யான்வென் றேன்என
ஒருவர்க் கொருவர் உத்தரம் பேசி
இருவரும் சாட்சி இவனைக் கேட்ப
மாமனை வதைத்த மால்முகம் நோக்கிக்
காமனை எரித்தோன் கண்கடை காட்ட
வென்ற நாயகி தோற்றாள் என்றுந்
தோற்ற நாயகன் வென்றான் என்றும்
ஒன்றிய பொய்க்கரி உடன்அங்கு உரைப்பக்
கன்றிய மனத்தொடு கவுரிஅங்கு உருத்து

நோக்கிநீ இருந்தும் நுவன்றிலை உண்மை
வாக்கினில் ஒன்றாய் மனத்தினில் ஒன்றாய்
மைக்கரி உரித்தோன் வதனம் நோக்கிப்
பொய்க்கரி உரைத்த புன்மையி னாலே
கனல்என வயிற்றிற் கடும்பசி கனற்ற
நிலமிசைக் குருட்டு நெட்டுடற் பாம்பாய்க்
கடகரி முகத்துக் கடவுள்வீற்று இருக்கும்
வடதரு நீழலிற் கிடவெனச் சபித்தாள்.
முளரிகள் பூத்த முகில்நிறத்து உருப்போய்த்
துளவுஅணி மருமனுந் துணைவிழி இழந்தே
ஆண்டுஅரைக் கணத்தில் ஆயிரம் யோசனை
நீண்டபைப் பாந்தள் நெட்டுடல் எடுத்து
வளர்மருப்பு ஒன்றுடை வள்ளல்வீற்று இருக்குங்
கிளர்சினை ஆலின் கீழ்க்கிடந் தனனால்
திரிகடக் கரியின் திருமுகக் கடவுளும்
வழிபடும் அடியார் வல்வினை தீர்த்தே
எழில்பெறு வடமரத் தின்கீழ் இருந்தான்
கம்பமா முகத்துக் கடவுள்தன் பெருமையை
அம்புவி யோருக்கு அறிவிப் போம்என
உம்பர் உலகத்து ஓரெழு கன்னியர்
தம்பநூல் ஏணியில் தாரணி வந்து
கரிமுகக் கடவுளைக் கைதொழுது ஏத்திக்
கார்த்திகைக் கார்த்திகை கழிந்தபின் நாளில்
ஆர்த்த கலிங்கத்து அணியிழை வாங்கி
இருபத் தோர்இழை இன்புறக் கட்டி
ஒருபோது உண்டி உண்டுஒரு மனமாய்
வேதத்து ஆதியும் பூமியில் எழுத்தும்
ஆதிவி நாயகற்கு ஆன எழுத்தும்
மூன்றுஎழுத் ததனால் மொழிந்தமந் திரமும்
தேன்தருங் குழலியர் சிந்தையுட் செபித்தே
உரைதரு பதினாறு உபசா ரத்தால்
வரைமகள் மதலையை வழிபாடு ஆற்றி
இருபது நாளும் இப்படி நோற்று
மற்றநாள் ஐங்கர மாமுகன் பிறந்த
அற்றைநாட் சதயமும் ஆறாம் பக்கமுஞ்
சேரும்அத் தினத்தில் தெளிபுனல் ஆடி

வாரண முகத்தோன் வருபெருங் கோயில்
சீர்பெற மெழுகித் திருவிளக்கு ஏற்றிக்
குலவுபொற் கலைகள் கொடுவி தானித்து
மலர்பல தொடுத்திடு மாலைகள் ஆற்றிக்
கொலைபுரி வடிவேற் குகற்குமுன் வருகை
மலைமுகக் கடவுளை மஞ்சனம் ஆட்டிப்
பொற்கலை நல்நூற் பூந்துகில் சாத்திச்
சொற்பெறு சந்தனச் சுகந்தம் பூசிச்
செருந்தி சண்பகஞ் செங்கழு நீரொடு
குருந்து மல்லிகை கோங்கொடு பிச்சி
கருமுகை புன்னை கடிகமழ் பாதிரி
மருவிரி ஞாழல் மகிழ்இரு வாட்சி
தாமரை முல்லை தளைஅவிழ் கொன்றை
பூமலர் நொச்சி பூத்தமைக் குவளை
காந்தள் ஆத்தி கடம்புசெவ் வந்தி
வாய்ந்தநல் எருக்கு மலர்க்கர வீரம்
பச்சிலை நொச்சி படர்கொடி அறுகு
முத்தளக் கூவிளம் முதலிய சாத்தித்
தூபதீ பங்கள் சுகம்பெறக் கொடுத்தே
அப்பம் மோதகம் அவல்எள் ளுண்டை
முப்பழந் தேங்காய் முதிர்மொளிக் கரும்பு
சீனிதேன் சர்க்கரை செவ்விள நீருடன்
பால்நறு நெய்தயிர் பருப்புடன் போனகங்
கற்பகக் கடவுள் களித்திடத் திருமுன்
பொற்புறப் படைத்துப் பூசனை பண்ணி
நோற்பது கண்டு நோலாது இருந்த
பாப்புரு வாகிய பஞ்சா யுதனும்
யாப்புறு கொங்கையீர் யானும்நோற் பேனென
ஆங்குஅவன் தனக்கும் வேண்டுவது அளித்துப்
பாங்கொடுஇவ் விரதம் பரிந்துநோற் பித்தார்
அண்டர்நா யகனாம் ஐங்கரன் அருளால்
விண்டுவும் பண்டுஉள வேடம் பெற்றே
உஞ்ஞைமா நகர்புகுந்து உமையொடு விமலன்
கஞ்சநாள் மலர்ப்பதங் கைதொழு திடலும்
பஞ்சிமென் சீறடிப் பார்ப்பதி நெஞ்சின்
வெஞ்சினம் மிகுந்து விமலனை நோக்கி
யான்இடுஞ் சாபம் நீங்கியது ஏனென

மானெடுங் கண்ணி மணிக்கதவு அடைப்ப
இறையவன் இதற்குக் காரணம் ஏதென
மறிகடல் துயிலும் மாயவன் உரைப்பான்
பிறைமருப்பு ஒன்றுடைப் பிள்ளைஅன்று எனக்குத்
தந்துஅருள் புரிந்த தவப்பயன் ஈதெனச்
சிந்தை மகிழ்ந்து தேவர் தேவனும்
பூங்கொடி அடைத்த பொன்தாழ் நீங்கச்
சாங்குமுன் உரைத்த சக்கர பாணி
இக்கதை சொல்ல அக்கணி சடையனும்
மிக்கநல் விரதம் விருப்புடன் நோற்றபின்
மாதுமை அடைந்த வன்தாழ் நீக்கி
நாதனை நணுகிட நம்பனும் நகைத்தான்
நானோ வந்து நகையா னதுஎனத்
தேன்நேர் மொழியாள் தெளியக் கூறென
நன்மதி நுதலாய் நானிலந் தன்னில்
உன்மகன் நோன்பின் உறுதி அறிந்து
சிந்தை மகிழ்ந்து சிரித்தேன் யானென
அந்தமில் அரனை ஆயிழை வணங்கிப்
பொருஞ்சூர் அறவேல் போக்கிய குமரன்
வரும்படி யானும் வருத்திநோற் பேனென
இறையவன் கதைசொல ஏந்திழை நோற்றபின்
குறமட மகளைக் குலமணம் புணர்ந்தோன்
சுடர்வடி வேலோன் தொல்வினை தீர்ந்து
தாதுமை வண்டுஉழுந் தாமத் தாமனை
மாதுமை யாளை வந்துகண் டனனே
கண்ணநீ கண்ணிலாக் கட்செவி யாகெனத்
தண்நறுங் குழல்உமை சாபம்இட் டதுவும்
அக்குநீறு அணியும் அரன்முதல் அளித்த
விக்கின விநாயக விரதம்நோற்று அதன்பின்
சுடர்க்கதை ஏந்துந் துளவ மாலையன்
விடப்பணி உருவம் விட்டுநீங் கியதும்
பரிவுகொள் கூத்துடைப் பரமனும் நோற்றுக்
கவுரிஅன்று அடைத்த கபாடந் திறந்ததும்
வாசமென் குழலுடை மாதுமை நோற்பத்
தேசம் போகிய செவ்வேள் வந்ததும்
வானவர் நோற்று வரங்கள் பெற்றதும்
நாரத முனிவன் நவின்றிடக் கேட்டே

இந்நிலந் தன்னில் இவ்விர தத்தை
மன்னவன் வச்சிர மாலிமுன் நோற்றுக்
காயத் தெழுந்த கடும்பிணி தீர்ந்து
மாயிரும் புவியின் மன்னனாய் வாழ்ந்து
தடமுலைத் திலோத்தமை தனைமணம் புணர்ந்து
மழவிடை போற்பல மைந்தரைப் பெற்றுக்
கடைமுறை வெள்ளியங் கயிலையில் உற்றான்
பரிவொடுஇவ் விரதம் பாரகந் தன்னில்
விரைகமழ் நறுந்தார் விக்கிரமா தித்தன்
மறிகடற் புவிபெற வருந்தி நோற்றிடுநாள்
மற்றவன் காதன் மடவரல் ஒருத்தி
இற்றிடும் இடையாள் இலக்கண சுந்தரி
மெத்தஅன் புடன்இவ் விரதம்நோற் பேனென
அந்தந் தன்னில் அணியிழை செறித்துச்
சித்தம் மகிழ்ந்து சிலநாள் நோற்றபின்
உற்ற நோன்பின் உறுதி மறந்து
கட்டிய இழையைக் காரிகை அவிழ்த்து
வற்றிய கொவ்வையின் மாடே போட
ஆங்குஅது தழைத்தே அலருந் தளிருமாய்ப்
பாங்குற ஓங்கிப் படர்வது கண்டு
வேப்பஞ் சேரியிற் போய்ச்சிறை இருந்த
பூப்பயில் குழல்சேர் பொற்றொடி ஒருத்தி
அவ்வியம் இல்லாள் அவ்விடந் தன்னிற்
கொவ்வை அடகு கொய்வாள் குறுகி
இழையது கிடப்பக் கண்டுஅவள் எடுத்துக்
குழைதவிழ் வரிவிழிக் கோதைகைக் கட்டி
அப்பமோடு அடைகாய் அவைபல வைத்துச்
செப்ப முடனே திருந்திழை நோற்றிடக்
கரிமுகத்து அண்ணல் கருணை கூர்ந்து
பண்டையில் இரட்டி பதம்அவட்கு அருளக்
கொண்டுபோய் அரசனுங் கோயிலுள் வைத்தான்
விக்கிரமா தித்தன் விழிதுயில் கொள்ள
உக்கிர மான உடைமணி கட்டித்
தண்டையுஞ் சிலம்புந் தாளினின்று ஒலிப்பக்
கொண்டல் போல்வருங் குஞ்சர முகத்தோன்
மனமிகக் கலங்கும் மன்னவன் தன்னிடங்

கனவினில் வந்து காரண மாக
இலக்கண சுந்தரி இம்மனை இருக்கிற்
கலக்கம் வந்திடுங் கழித்திடு புறத்தெனத்
துண்ணென எழுந்து துணைவியை நோக்கிக்
கண்ணுறக் கண்ட கனவின் காரணம்
அண்ணல் உரைத்திடும் அவ்வழி தன்னில்
ஆனை குதிரை அவைபல மடிவுற
மாநகர் கேடுறும் வகையது கண்டு
இமைப்பொழுது இவள்இங்கு இருக்கலா காதுஎன
அயற்கடை அவனும் அகற்றிய பின்னர்
வணிகன் தனது மனைபுகுந்து இருப்ப
மணியும் முத்தும் வலியகல் லாய்விட
அணியிழை தன்னை அவனும் அகற்ற
உழவர்தம் மனையில் உற்றுஅவள் இருப்ப
வளர்பயிர் அழிந்து வளம்பல குன்ற
அயன்மனை அவரும் அகற்றிய பின்னர்க்
குயவன் மனையிற் கோற்றொடி செல்லக்
குயக்கலம் உடைந்து கொள்ளை போக
அயற்கடை அவனும் அகற்றிய பின்னர்த்
தூசுதூய் தாக்குந் தொழிலோர் மனைபுகத்
தூசுகள் எல்லாந் துணிந்துவே றாகத்
தூசரும் அவளைத் தூரஞ் செய்ய
மாலைக் காரன் வளமனை புகலும்
மாலை பாம்பாம் வகையது கண்டு
ஞாலம் எல்லாம் நடுங்கவந்து உதித்தாய்
சாலவும் பாவிநீ தான்யார் என்ன
வெம்மனம் மிகவும் மேவி முனிவுறா
அம்மனை அவனும் அகற்றிய பின்னர்
அவ்வை தன்மனை அவள்புகுந் திருப்ப
அவ்வை செல்லும் அகங்கள் தோறும்
வைதனர் எறிந்தனர் மறியத் தள்ளினர்
கைகொடு குற்றினர் கண்டோர் பழித்தனர்
அவ்வை மீண்டுதன் அகமதிற் சென்று
இவ்வகைக் கன்னிநீ யாரென வினாவக்
காத்தாண்டு உலகு கருணையோடு ஆண்ட
மார்த்தாண்ட ராசன் மாமகள் ஒருத்தி
எல்லார்க்கும் மூத்தாள் இலக்கண சுந்தரி

சொல்லுவிக் 'கிரம சூரியன் மனையெனச்
சீர்கெட இருந்த தெரிவையை நோக்கி
நீரது கொண்டு நிலம்மெழு கிடுகெனச்
சாணி எடுக்கத் தையலுஞ் சென்றாள்
சாணியும் உழுத்துத் தண்ணீர் வற்றிப்
பேணிய புழுவாய்ப் பெரிது தோன்ற
மான்நேர் விழியாள் வருந்துதல் கண்டு
தானே சென்று சாணி எடுத்துத்
தண்ணீர் கொணர்ந்து தரைமெழுக் கிட்டு
மண்ணிய வீட்டில் மணிவிளக்கு ஏற்றிப்
புத்தகம் எடுத்து வாவெனப் புகலப்
புத்தகம் பாம்பாய்ப் பொருந்திநின்று ஆட
மெத்தஉள் நடுங்கி வீழ்ந்துஅவள் கிடப்பக்
கொவ்வையங் கனிவாய்க் கோதையை விலக்கி
அவ்வை தானே அகமதிற் சென்று
புத்தகம் எடுத்துப் பொருந்தப் பார்த்து
வித்தக நம்பி விநாயக மூர்த்தி
கற்பகப் பிள்ளைசெய் காரியம் இதுவென
உத்தமி அவ்வை உணர்ந்துமுன் அறிந்து
தவநெறி பிழைத்த தையலை நோக்கி
நுவலரும் விநாயக நோன்புநோற் றிடுகெனக்
கரத்து மூஏழுஇழைக் காப்புக் கட்டி
அப்பமும் அவலும் மாம்பழப் பண்டமுஞ்
செப்பம தாகத் திருமுன் வைத்தே
அவ்வை கதைசொல ஆயிழை கேட்டு
மத்தகக் களிற்றின் மகாவிர தத்தை
வித்தக மாக விளங்குஇழை நோற்றுக்
கற்பக நம்பி கருணைபெற்ற தன்பின்
சக்கர வாள சைனியத் தோடு
விக்கிரமா தித்தன் வேட்கையிற் சென்று
தானுஞ் சேனையுந் தண்ணீர் விரும்பி
எவ்வகை செய்வோம் எனஉளம் மெலிந்தே
அவ்வை தன்மனை அங்குஅவர் அணுக
எய்துந் தாகமும் இளைப்புங் கண்டு
செவ்வே அவற்றைத் தீர்க்க எண்ணி
இலக்கண சுந்தரி என்பவள் தன்னை
அப்பமும் நீரும் அரசற்கு அருளெனச்

செப்பிய அன்னை திருமொழிப் படியே
உண்நீர்க் கரகமும் ஒருபணி காரமும்
பண்நேர் மொழியாள் பார்த்திபற்கு உதவ
ஒப்பறு படையும் உயர்படை வேந்தனும்
அப்பசி தீர அருந்திய பின்னர்
ஆனை குதிரை அவைகளும் உண்டுந்
தானது தொலையாத் தன்மையைக் கண்டே
இவ்வகை சமைத்தநீ யாரென வினவ

மவ்வல்அம் குழலாள் மௌனமாய் நிற்ப
அவ்வை தான்சென்று அரசற்கு உரைப்பாள்
கணபதி நோன்பின் காரணங் காண்இது
குணமுடை இவள்உன் குலமனை யாட்டி
இலக்கண சுந்தரி என்றுஅவ்வை கூற
மங்கையை நோக்கி மனமிக மகிழ்ந்து
திங்கள்நேர் வெள்ளிச் சிவிகையில் ஏற்றிக்
கொண்டுஊர் புகுந்தான் கொற்ற வேந்தனும்
ஒண்தொடி யாரில் உயர்பதம் உதவினன்
சிந்துர நுதலார் சென்றுஅடி பணியச்
சுந்தரி யிருந்தாள் சுகத்துடன் மகிழ்ந்தே.

### காப்பு

கரும்பும் இளநீருங் காரெள்ளுந் தேனும்
விரும்பும் அவல்பலவும் மேன்மேல்—அருந்திக்
குணமுடைய னாய்வந்து குற்றங்கள் தீர்க்குங்
கணபதியே இக்கதைக்குக் காப்பு.

திருவிளங்கு மான்மருகா சேவதனில் ஏறி
வரும்அரன்தான் ஈன்றருளு மைந்தா—முருகனுக்கு
முன்பிறந்த யானை முகவா உனைத்தொழுவேன்
என்கதைக்கு நீயென்றுங் காப்பு.

### நூற்பயன்

பொன்னுமிகும் கல்விமிகும் புத்திரரோடு எப்பொருளும்
மன்னும் நவமணியும் வந்து அணுகும்—உன்னி
ஒருக்கொம்பின் யானைமுக உத்தமனார் நோன்பின்
திருக்கதையைக் கேட்கச் சிறந்து.

பொற்பணைக்கை முக்கண் புகர்முகத்துப் பொன்மவுலிக்
கற்பகத்தின் நோன்பின் கதைதன்னைச்—சொற்பெருகக்
கற்றவரும் நோற்றவருங் காதலித்துக் கேட்டவரும்
பெற்றிடுவர் கற்பகத்தின் பேறு.

வெள்ளை எருதுஏறும் விரிசடையோன் பெற்றுஎடுத்த
பிள்ளையார் நோன்பின் பெருங்கதையை—உள்ளபடி
நோற்றார் மிகவாழ்வார் நோலாது அருகுஇருந்து
கேட்டோர்க்கும் வாராது கேடு.

சூலிலார் நோற்கிற் சுதரை மிகப்பெறுவார்
சாலமிகும் வெங்கலியார் தாம்நோற்கில்—மேலைப்
பிறப்புஎல்லாம் நல்ல பெருஞ்செல்வம் எய்திச்
சிறப்பிலே வாழ்வார் சிறந்து.

**பிள்ளையார் கதை முற்றுப்பெற்றது**
**திருச்சிற்றம்பலம்**

## ஔவையார் பாடல்கள்

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்தருவேன்-கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா.

(நல்வழி)

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது-பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

(மூதுரை)

## திருமூலர் திருமந்திரம்


ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.


## சித்தி விநாயகர் துதி

உள்ளமெனுங் கூடத்தில் ஊக்கமெனுந்
தறிநிறுவி உறுதியாகத்
தள்ளரிய அன்பென்னுந் தொடர்பூட்டி
இடைப்படுத்தித் தறுகட் பாசக்
கள்ளவினைப் பசு போதக் கவளமிடக்
களித்துண்டு கருணையென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
நினைந்து வருவினைகள் தீர்ப்பாம்.

—பரஞ்சோதி முனிவர் (திருவிளையாடற் புராணம்)


## விநாயகர் ஆலய அமைப்பு






கணபதி பத்திரமண்டலம்


## சக்தி விநாயக யந்திரம்




## லக்ஷ்மீ விநாயக யந்திரம்




## ஹரித்ராகணபதி யந்திரம்



# திரைலோக்ய மோகன யந்திரம்



## வக்ரதுண்ட விநாயக யந்திரம்



# GANESHA

GANAH is Sanskrit means 'multitude'. *Isa* means 'Lord'. Ganesha therefore literally means the 'Lord of all beings'. Ganesha is the first son of Lord Siva. Siva represents the supreme Reality. The son of Siva symbolises one who has realised the Reality. One who has discovered the godhood in him. Such a man is said to be the Lord of all beings.

Ganesha is known by other names as well. Ganapathi, Gajanana, Vinayaka, Vighneshwara. Ganapathi has the same literal meaning as Ganesha. Gajanana means 'elephant-faced'. *Gaja* = elephant, *anana* = face. Vinayaka means the supreme leader, literally one who has no leader himself. Vighneshwara is the Lord of all obstacles, whoshipped in the initiation of Hindu rituals and ceremonies. As his name suggests Vighneshwara removes all obstacels, overcomes all challenges of life. There is a belief that no undertaking will meet with failure if the grace of Vighneshwara is invoked.

In Hindu mythological literature Ganesha is described as having a human form with an elephant's head. One of the tusks in his head is broken. He has a conspicuously large stomach. He

sits with one leg folded in. At his feet a variety of food is spread. A rat sits near the food and looks up at him as if it were asking him for sanction to eat the food. This mystical form of Lord Ganesha represents not only the supreme state of human perfection but the practical path to reach that state. The details of his description suggest deep philosophical significance which can guide you to reach that ultimate state.

The first step of spiritual education is *sravana* which means listening to the eternal truths of Vedanta. The second step is *manana* which is independent reflection upon those truths. The large ears and head of Ganesha indicate that he had gained previous wisdom through *sravana* and *manana*. An elephant's head on a human body in Ganesha is meant to represent supreme wisdom.

The trunk which springs from his head represents the intellect, the faculty of discrimination which necessarily arises out of wisdom.

Intellect is the discriminating faculty, the discerning ability or the judging capacity in man. Man's intellect is of two distinct types, namely the gross and the subtle. Gross intellect is that aspect of his discrimination which is applicable to the realm of the terrestrial world, that part of the intellect which distinguishes between the pairs of opposites existing in this world, distinguishes between day and night, black and white, joy and sorrow etc. Subtle intellect is the other aspect of his discrimina-

tion which distinguishes between the infinite and the finite, the real and the unreal, the transcendental and the terrestrial. A man of realisation like Ganesha is one who has fully developed both his gross and subtle intellects. He has perfect understanding and knowledge of the terrestrial as well as transcendental.

The trunk of an elephant has the unique capacity of performing both gross and subtle activities. A trunk can uproot a tree. It can pick up a needle from the ground. One rarely finds gross and subtle operations being performed by a single instrument. A spanner which is used for fitting a locomotive is useless for repairing a wrist-watch. The elephant's trunk is an exception to this rule. It serves both ways. So does Ganesha's intellect penetrate the realms of the material and spiritual worlds. That is the state which man must aspire to reach.

A man of Perfection is thus rooted in the supreme wisdom. He is not victimised by likes (*raaga*) and dislikes (*dwesha*). He is not swayed by agreeable and disagreeable circumstances, pleasant and unpleasant happenings, good and bad environment. In other words, he is not victimised by the pairs of opposites existing in this world. Heat and cold, joy and sorrow, honour and dishonour do not affect him, influence him or harass him. He has transcended the limitations of opposites in the world. He is *dwandwa-ateetha*, beyond opposites. This idea is well represented in Ganesha by having

one of his tusks broken. The common man is tossed between the two opposites (tusks). He should endeavour to overcome the influence of the pairs of opposites, in him. Man ought not to act merely by his likes and dislikes, these are his worst enemies he has to control and conquer. When he has completely mastered the influence of these pairs in him, he becomes a Ganesha.

Ganesha's large belly is meant to convey that a man of Perfection can consume and digest whatever experiences he undergoes. Heat or cold, war or peace, birth or death and other such trails and tribulations do not toss him up and down. He maintains an unaffected grace in and through all these fluctuations of the world. Figuratively, he is represented as being able to stomach and digest all types of experiences.

In Hindu mythology, Kubera, the god of wealth offered a dinner to Ganesha in his palace. Ganesha ate all the food that was prepared for the entire gathering of guests. Thereafter still dissatisfied, he started eating the festive decorations that were used for the occasion. At this juncture his father Lord Siva approached him and offered him a handul of roasted rice. Ganesha consumed the roasted rice and his hunger was satisfied immediately. This story is a directive to mankind that man can never be satisfied with the joys provided by the world of objects represented by Kubera's feast. Material pursuits can never give peace, contenment or happiness

to mankind. The only way to attain absolute fulfilment or peace is by consuming your own *vasanas* which are the unmanifest desires in you. The destruction of *vasanas* is represented by the consumption of roasted rice. When rice is roasted it loses its capactiy to germinate. The consumption of roasted rice indicates the destruction of *vasanas* or desires in you. Thereafter you remain in a state of absolute peace and bliss.

Ganesha sits with one leg folded up and the other leg resting on the ground. The leg on the ground indicates that one aspect of his personality is dealing with the world while the other is ever-rooted in single-pointed concentration upon the supreme Reality. Such a man lives in the world like anyone else, but the concentration and meditation are ever-rooted in the Atman within himself. This idea is symbolised in the above posture. At the feet of Lord is spread abundance of food. Food represents material wealth, power and prosperity. When a man follows the high principles of living indicated above he achieves these material gains. He has them always at his command though he has an attitude of indifference towards them.

Beside the food is a tiny rat looking up towards Ganesha. The rat does not touch the food but waits for the master's sanction as it were for consuming it. The rat represents desire. A rat has a small mouth and tiny sharp teeth. But it is the greediest of all animals. Its greed and acquisitiveness are so great

that it steals more than it can eat and hoards more that it can remember, often abandoning burrows full of hoarded grains through forgetfulness. This predominant trait in a rat justifies amply its symbolism as desire. One litte desire entering man's mind can destroy all his material and spiritual wealth earned for many long years. The rat looking up therefore denotes that the desires in a perfect man are absolutely under control. The activities of such a man are motivated by his clear discrimination and judgement rather than by an emotional craving to enjoy the variety of sense objects of the world.

There is a belief amongst the Hindus that it is inauspicious to see the moon on the Vinayaka Chaturthi day, that is the birthday of Ganesha. The Puranic story says that the moon saw Ganesha riding on his tiny rat and laughed at the ludicrous scene. For this reason the moon is condemned and people are forbidden to see it on this day.

Ganesha riding on his rat indicates a man of Perfection trying to use his limited body, mind and intellect to convey the illimitable Truth. The body, mind and intellect are finite. They cannot express the infinite Atman. A man of Realisation finds it almost impossible to convey his inifinite experience through his finite equipments. Hence we find the words and deeds of all spiritual masters are peculiar and incomprehensible. The common man's intellect cannot comprehend the Truth. The moon is the

presiding deity of the mind. The moon laughing at Ganapati riding on the rat indicates the ignorant scoffing at the man of Realisation's attempt to convey the Truth. This attitude of scoffing at spiritual preceptors and precepts is detrimental to humanity. The generations are therefore warned not to laugh or scoff at the spiritual messages. If they do, they meet with degradation and disaster.

Ganesha has four arms. The four arms represent the four inner equipments of the subtle body, namely mind (*manas*), intellect (*buddhi*)m ego (*ahamkar*) and conditioned consciousness (*chitta*). Ganesha represents the pure Consciousness, the Atman which enables these four equipments to function in you.

In one hand he holds an axe and in another a rope. The axe symbolises the destruction of all desires and attachments and their consequent agitations and sorrows. The rope is meant to pull the seeker out of worldly entanglements and bind him to the everlasting and enduring bliss of his own Self. In the third hand he holds a rice ball (*modaka*) represents the joyous rewards of spiritual seeking. A seeker gains the joy of satisfaction and contentment as he progresses on the path of spiritual evolution. In the fourth hand he holds a lotus (*Padma*). The lotus represents the supreme goal of human evolution. By holding the lotus in his hand he draws the attention of all seekers to that supreme state that each one of them can aspire for and reach through

proper spiritual practices. He blesses all his devotees to reach the supreme state of Reality.

Thus by indicating to mankind the goal of human evolution and the path to reach the same, Lord Ganesha occupies a place of distinction in the Hindu pantheon. May he give us all the strength and courage to pursue the path which he has led and may we gain that supreme goal which he has reached.

# காணிக்கை

ஸ்ரீ வரதராஜ விநாயகப் பெருமான் அருளாணைக் கிணங்கவும், திருவருள் கூட்டவும், கொட்டாஞ்சேனை வாழ் விநாயகரடியவர்கள் பலரின் வேண்டுகோளுக்கு இணங்கவும், பிள்ளையார் வழிபாடு பற்றிய இந்த அரிய தொகுப்பை ஆவணிச் சதுர்த்தித் திருநாளன்று வெளியிட்டு, பிள்ளையார் திருப்பாதங்களில் காணிக்கையாக்குகிறோம்.

இதில் உள்ளவற்றைப் படித்து, பிள்ளையாரை வழிபட்டு அருள்பெற்று உய்யுமாறு அடியவர்கள் அனைவரையும் வேண்டிக் கொள்கிறோம்.

இந்தத்தொகுப்பைத் தயாரிப்பதற்கு, திருவாவடுதுறை ஆதீனம், சைவசித்தாந்தப் பெருமன்றம், மற்றும் பல சமயநூல் வெளியீட்டாளர்கள் வெளியிட்ட நூல்களைப் பயன்படுத்தியுள்ளோம். அவர்களுக்கு எமது நன்றி.

*105*, கொட்டாஞ்சேனைத் தெரு,
கொழும்பு-*13*.

த. நீதிராஜா
தெ. ஈஸ்வரன்
பொ. பாலசுந்தரம்

அறங்காவலர்கள்

# கார்த்திகையில்
# 21 நாள்கள்
# பிள்ளையார்
# ஷஷ்டி
# விரதிகளுக்கான
# தோத்திரப்
# பாடல்கள்
# அனைத்தும்
# உள்ளே

இதுவரை 10,000 படிகள்
விற்பனையாகி உள

